பூரசாலி

பொங்கல் மலர் 1968



வேளாண்மைத் திருநாள்

பகடு நடந்த நெல்லைப் பல்லோருடன்
பகிர்ந்துண்டு, பகலவனைப் பணியும்

பொங்கல் திருநாள்.

தமிழகக் கதர் கிராமத் தொழில் ஆயத்தின்
கதர் கிராமத் தொழில் துறை
ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட விவசாயப்
பெருங்குடிகளுக்கும்
கிராம வாசிகளுக்கும்
ஊதியத்துடன் கூடிய
வேலை வாய்ப்பளிக்கின்றது.

கதர்ப்பட்டு, பருத்தி ஆடைகள், தயாரித்த (ரெடிமேட்) ஆடைகள் செக்கெண்ணெய், தோல், தீக்குச்சி, வெல்லம், வெல்ல சர்க்கரை, பதநீர், பனை வெல்லம், சர்க்கரை, சோப்பு, காகிதம், மண்பாண்டங்கள், தேன் வளர்ப்பு, நார்த்தொழில், கொல்லு தச்சு பட்டரைகள், எருவிலிருந்து எரிவாயு உற்பத்தி, சுண்ணாம்புச் சூளை, முத்திரை அரக்குத் தயாரித்தல், மூலிகை, பழங்கள், பதனிடுதல், மூங்கில் பிரம்பு வேலை, பாத்திர வார்ப்படங்கள். முதலிய கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள நமது மாநில கிராம மக்களுக்கு கதர் கிராமத் தொழில்களையே நமது அன்றாடத் தேவை களுக்கு வாங்குவதன் மூலம் ஆக்கமும் ஊக்கமும் தரலாம்.

வெளியீடு கதர் கிராமத் தொழில் துறை

★

வணிகப் பெருமக்களுக்கும், அபிமானிகளுக்கும் எங்களின் மனம் கனிந்த

★ பொங்கல் வாழ்த்துக்கள் ★

முகம்மது அபூபக்கர் & கம்பெனி

உயர்தரமான கைத்தறி லுங்கிகள், கைக்குட்டைகள்,
புடவைகள் மற்றும் சோளிகள்
தயாரிப்பாளர்கள்



சங்கு மார்க்

சதுர வடிவம்-சிகப்பு நிறம்-அதனுள் வெண்சங்கு
'சங்கு' என்ற எழுத்துக்கள் இவைகள்தான்
கைத்தறி லுங்கிகள், கைக்குட்டைகள்,
புடவைகள், சோளிகள் உயர்தரமானவை என்று
உத்திரவாதமளிக்கின்றன

போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்

முகம்மது அபூபக்கர் & கம்பெனி

95, தம்புச் செட்டித் தெரு, சென்னை-1

கிளைகள்:

65/11-12,
லோயர் சிட்பூர் ரோடு,
கல்கத்தா-1

186, இப்ராஹிம் ரஹ்மதுல்லா ரோடு,
பெண்டி பஜார், பம்பாய் 3.

84 கீழ வெளி வீதி, மதுரை-1

340, மெயின் ரோடு,
கொல்லம்-1 கேரளா

Criterion- MAB-1130 Ta

நன்றி அறிவிப்பு



பொங்கல் பண்டிகையை முன்னிட்டும், மற்ற காலங்களிலும் எமக்கு ஆதரவு அளித்தவர்களுக்கும், மற்றவர்கட்கும் எமது பொங்கல் நல் வாழ்த்துக்களையும் நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்

பட்டு, ஜவுளி வியாபாரம்

53. கிடங்கு தெரு, சென்னை 1.

(கொத்தவால் சாவடி சமீபம்)

போன் : 34614.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

உயர்ந்த காஞ்சீபுரம் பனாஸ் பட்டு சேலைகள்

மற்றும், நவீன மில் ஜவுளிகள் வாங்க நம்பிக்கையான இடம்.

★

P. S. லக்ஷ்மண ஸா & பிரதர்ஸ்

(ஏர் – கண்டிஷண்ட்)

பட்டு ஜவுளி தயாரிப்பாளர்கள், வியாபாரிகள்.

பனகல் பார்க், தி. நகர், சென்னை 17. போன்: 443435.

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 2. போன்: 86966.

தபால் பெட்டி எண் : 3. தொலைபேசி எண் : 214.

தோற்றம் : 1910.



ஸ்ரீ கமலாம்பிகா
கோவாப்பரேட்டிவ் அர்பன் பாங்கு லிமிடெட்,

திருவாரூர் : : தஞ்சை மாவட்டம்

தலைவர் : திரு. எம். ராமதாஸ் முதலியார், பி.ஏ., பி.எல்.,

(தமிழ் நாட்டில் சிறந்த கூட்டுறவு அர்பன் பாங்கெனப் பாராட்டுதல் தெரிவித்து இப் பாங்குக்குத் தமிழக அரசு கேடயம் வழங்கியுள்ளது.)

புள்ளி விபரங்கள் 31–10–1967ல் உள்ளபடி

பங்குத் தொகை	—	ரூ. 8,17,833
டெப்பாசிட்டுகள்	—	ரூ. 46,07,610
கடன்கள்	—	ரூ. 39,72,096
நடைமுதல் மூலதனம்	—	ரூ. 56,28,014

எவ்லா வகையான டெப்பாசிட்டுகளும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

பிக்ஸட் டெப்பாசிட்டுகளுக்கு 5 சதவிகிதம் முதல் 7½ சதவிகிதம் வரை வட்டி கொடுக்கப்படுகிறது.

விபரங்களுக்கு, காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும்.

மு.ரு.சொ. பொங்கல் மலர், 1968.


கிடைத்தற்கரிய

சங்கர் பிராண்ட் சிமெண்ட்

இப்பொழுது சுலபமாகக் கிடைக்கிறது.

சங்கர் பிராண்ட் ஸ்டாகிஸ்டிடமிருந்து
உடனே பெற்றுக்கொள்ளுங்கள்

இன்றே வாங்குங்கள்... இன்றே கட்டுங்கள்



SANKAR BRAND

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: 175/1, மவுண்ட் ரோடு, சென்னை-2
தொழிற்சாலைகள்: சங்கர்நகர், திருநெல்வேலி மாவட்டம்
சங்கரி, சேலம் மாவட்டம்

Criterion-ICT-1527 TA

அளவான குடும்பமே ஆனந்தமான குடும்பம்

நோயற்ற வாழ்வே ஆனந்தமான வாழ்வு

★

நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு

சித்தர் நவலோக கல்பம்

(தங்கம் வெள்ளி தாம்பரம் மற்றும் பல உலோகங்கள் அநேக அபூர்வ மூலிகைகள் மருந்துப் பொருள்களுடன் பல வருட ஆராய்ச்சியினால் உருவானது)

★

டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளை


ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை (Regd)

Recognised by central board of Indigenous medicine govt. of madras

307-308, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5
(டெலிபோன்: 84786)

கிளை வைத்தியசாலை:

மாமண்டூர், வடபாதி, பாலாற்றங்கரை சமீபம்
செங்கல்பட்டு மாவட்டம் (டெலிபோன்: 240)



★

ஆஸ்துமா, மதுமேகம் (டையாபடீஸ்) டி. பி, குஷ்டம், வெண் குஷ்டம், யானைக்கால் மற்றும் நாள்பட்ட கொடியவியாதிகளுக்கும் டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளை அவர்களே பிரதி ஞாயிறு, செவ்வாய் வியாழக்கிழமைகளில் சென்னையிலும், பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் கிளை வைத்தியசாலையிலும் நோயாளிகளை நேரில் கவனித்து மருந்து கொடுக்கிறார்.

தந்தி : திருமகள் போன் ஆபீஸ் ; 52
தபால் பெட்டி எண் ; 1 வீடு : 26



திருமகள் மில்ஸ் லிட்.,

சிறந்த பாவு நூல், ஸ்டேபிள் பைபர் நூல்,
கோன்கள் உற்பத்தியாளர்கள்

ஸ்தாபிதம் : 1937 உற்பத்தி ஆரம்பம் : 1939

டிரேட் மார்க்
Reg. B. 70161

கதிர்கள் 19600
டப்ளிங் கதிர்கள் 768

nf 16 Reg. முதல்
nf. Reg. 84 வரை
ஹேங்ஸும் கோன்களும்
ஸ்டேபிள்பைபர் நூல்களும்

டைரக்டர்–இன்–சார்ஜ்

V. M. வாசுதேவ முதலியார்

காட்பாடிரோடு, குடியேற்றம் (வ. ஆ.)

எங்கள் வாடிக்கைதாரர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும்
பொங்கல வாழ்த்துக்கள்

பகலிலே பளிச்சிடும் பல கலர்கள்!
வெண்ணிலவிலே வண்ணம் தரும் டிசைன்கள்!!
தரத்தில் உறுதியில் சிறந்தவை!!!



இதுவே...எமது
பரம்பரை &
மதிநுமார்க்
லுங்கிகள்,
கைதுட்டைகள்.



Manufacturers & Sellers:

Tel: "Lattwo" Phone: 34 Post box no 31

The Gudiyattam Lungi Co.,

Gudiyattam. n a.

ஆம்பூர் கூட்டுறவு நில அடமான வங்கி லிட்., தெ. 11486

ஆம்பூர். (வ. ஆ. மா.) தொலைபேசி எண்: 220

எம். பி. வடிவேலு, M. மணிவாசகன்,

உபதலைவர், நில அடமான வங்கி ஆம்பூர், தலைவர், நில அடமான வங்கி, ஆம்பூர்.

T. ராமச்சந்திரன்

காரியதரிசி.

விவசாய பெருமக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

நில அடமான வங்கியில் ஏற்கனவே கடன் பெற்றவர்களும், புதியதாக கடன் பெற விரும்புவோரும் கீழ்கண்ட காரியங்களுக்காக சொத்து மதிப்பு உண்டென்றால் நீண்ட கால தவணையில் கடன் பெறலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

1.	டிராக்டர் வாங்க	ரூபாய் 25,000 வரையில்
2.	பம்பு செட் வாங்க	
3	புதிய கிணறு வெட்ட	
4.	பழைய கிணறுகளை புதுப்பிக்க	ரூபாய் 10,000 வரையில்
5.	கிணறு ஆழப்படுத்த	
6.	கிணறு அகலப்படுத்த	
7.	கிணறு கல் கட்டு கட்டவும் பம்பு செட் ரூம் கட்டவும்	
8.	நில சீர்திருத்தம் செய்யவும்	

தவணை : டிராக்டர் வாங்க 10 ஆண்டுகள்

ஏனைய கடன்களுக்கு 15 ஆண்டுகள்

இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தாங்களும் பயனடைந்து நாட்டின் உணவு உற்பத்தியை பெருக்கிடுவீர் என வேண்டுகிறோம்.

புதிய கிணறு வெட்ட தமிழக அரசினரால் ரூ. 500/- வரை மான்யத்தொகை அளிக்கப்பட உள்ளது என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ பாலகணேசர் ப்ளூபூல் இஞ்ஜெக்ஷன் சர்வீஸ்

46, காட்பாடி ரோட் வேலூர்-4 வ. ஆ. மாவட்டம்.

★

எமது பொங்கல் வாழ்த்துக்கள்

எங்களுடைய ப்ளூபூல் இஞ்ஜெக்ஷன் சர்வீஸில் நவீன இயந்திரங்களால் கைதேர்ந்த ஆட்களை கொண்டு எல்லாவிதமான ப்ளூபூல் இன்ஜெக்டர்களும் ப்ளூபூல் பம்புகளும் குறித்த நேரத்தில் நல்ல முறையில் ரிப்பேர் செய்து கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இதற்கு உண்டான எல்லாவிதமான ஸ்பேர்பார்ட்ஸ்களும் கிடைக்கும்.

★

வேலூர்
1-1-68

உரிமையாளர்:
வி. வி, துரைராஜ்

வாரீர் தென்னகத்தில் உள்ள கலைக்கோவில்களை
உல்லாச பயணத்தில் காண

சரவணா டிராவல் சர்வீஸ்

பொங்கல் வாழ்த்துகள்

எமது "சரவணா டிராவல் சர்வீஸ்" 49 சீட் கொண்ட
புதிய டூரிஸ்ட் லக்சரி கோச் பஸ்

குறித்த நேரங்களில் தென்னிந்திய கலைக் கோவில்களுக்கும், கல்யாண
விசேஷங்களுக்கும் கோடை காலத்திற்கேற்ற நீர் வீழ்ச்சிகள்
இவைகளை எல்லாம் காண வசதியுள்ள எமது
சரவணா டிராவல் பஸ் ஆதரிக்கும்படி
கேட்டுக் கொள்ளுகிறோம்.

டூர் நடத்தும் அன்பர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் விசாரிக்கவும்.

உரிமையாளர்: போன்: 201

எம். சாம்பசிவ முதலியார்

எஸ். பி. கே. லாரி அண்டு
சரவணா டிராவல் சர்வீஸ்,
23-24, நாகேஸ்வரன் கோயில் தெரு,
ஆம்பூர். வ. ஆ. மாவட்டம்.

பிரான்ஸ்; போன்: 22058.

மேனஜர்,
எஸ். பி. கே. லாரி அண்டு
சரவணா டிராவல் சர்வீஸ்,
நெ. 7, அம்பர்சன் தெரு,
சென்னை-1.

திரைப்பட தியேட்டர் அதிபர்களுக்கும் டூரிங் தியேட்டர் அதிபர்களுக்கும்
பொதுமக்களுக்கும்

எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

தந்தி: "லக்ஷ்மிபிக்"
தபால் பெட்டி எண்: 25

தோலைபேசி எண்: | அலுவலகம்: 393
| இல்லம் : 593

லக்ஷ்மி பிக்சர்ஸ் & லக்ஷ்மி பிரஸ்,

உரிமையாளர்: எஸ். வி. சிவானந்தம்
21, கவர்ன்மெண்ட் பெண்ட்லண்ட் ஆஸ்பத்திரி ரோடு, வேலூர். வ. ஆ.

கைவசமுள்ள படங்களின் பெயர்:

ஏழுமலை சுவாமி
ஆயிரம் ரூபாய்
இதயக் கமலம் (ஈஸ்ட்மென் கலர்)
இல்லாலு (தெலுங்கு)
கல்யாண மண்டபம்
தாழம்பூ
நாடோடி
செல்வம்
காதலித்தால் போதுமா?
வல்லவன் ஒருவன்
சி. ஐ. டி. 116
கண்கண்ட தெய்வம்
ராஜாத்தி

— எமது பொங்கல் வாழ்த்துக்கள் —

சீதாராம் டாக்கீஸ், விழுப்புரம்

(தென் ஆற்காடு மாவட்டம்) உரிமையாளர்: எஸ். புஷ்பாவதி



உணர்ச்சிப் பொங்கல்!

இந்த ஆண்டுப் பொங்கல் உணர்ச்சிப் பொங்கல். ஒரு பக்கம் பொங்கிவரும் தமிழ் உணர்ச்சி! இன்னொரு பக்கம் சீறிப்பாயும் இந்தி எதிர்ப்பு உணர்ச்சி!

இவ்வாண்டு போல் எந்த ஆண்டும் தமிழுணர்ச்சி கொடிகட்டிப் பறந்ததில்லை!


உலகத் தமிழர் கருத்தரங்கில் ஒரு வெளி நாட்டுக்காரர் நினைவுபடுத்தியது போல் தமிழ் ஒரு சர்வதேச மொழி. முயன்றுல் அதைத் தென்கிழக்கு ஆசியாவின் சிறந்த தொடர்பு மொழியாக்க முடியும்.


ஆனால் நம் நாட்டில் அதன் நிலை? இது நாம் நடத்த வேண்டிய போராட்டங்களை நினைவு படுத்துகிறது. உலகின் பல நாடுகளிலே பல மொழிகள் தங்களைக் காத்துக் கொள்வதற்காகப் பிற ஆதிக்க மொழிகளோடு நடத்திய வீரமிக்க போராட்டங்களை, அவற்றின் இறுதியில் மட்டுமே பூத்திட்ட வெற்றிப் பூக்களை நம் நெஞ்சத்தில் நடமாடவிடுகிறது.

காந்தியார் தலைமையிலே மக்கள் ஒன்று பட்டுப் போராடி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வெற்றி கண்டதுபோல்;

அண்ணனின் அருமருந்தன்ன தலைமையில் தமிழரெல்லாம் பேதமற்றுத் திரண்டு அறப் போரிடுவதுதான் நம்முன் உள்ள ஒரேவழி!

அண்ணனின் பூம்புகார்ப் பேச்சே நமக்குப் பொங்கல் செய்தியாக அமைகிறது- 'தமிழா! மயங்காதே; தயங்காதே! உள்ளம் திண்மை பெற்றுல் எண்ணியதை உலகில் முடிப்போம்!'







பூங்காற்று

இடர்மிகு பாதையில் இருள் கப்பிக் கொண்டுள்ள நிலையில், நடந்து சென்றிடுவோன், வானத்தை அண்ணாந்து அண்ணாந்து பார்க்கின்றான், திங்கள் தென்படுமா, விண்மீன் ஒளி தருமா என்று; தெரியக் காணோம்; கவலை கொள்கின்றான்; மீண்டும் பார்க்கின்றான், ஒரு ஒளி காண்கின்றான்; விண்மீன்!!

ஒரே புழுக்கம்; வெப்பத்தின் தாக்குதல்; வியர்த்துப் போகிறான்; காற்றே காணோமே என்று ஏக்கம், கொள்கின்றான்; திடீரென்று எங்கிருந்தோ கிளம்பிடும் ஓர் மெல்லிய பூங்காற்று அவன் உடலிற்படுகிறது! பூங்காற்று!!

இருளில் இடர்ப்படுவோன் கண்டிடும் விண்மீன் போல, வெப்பத்தால் வேதனையுற்றுக் கிடப்போருக்குக் கிடைத்திடும் பூங்காற்று போல, ஆண்டுக்கோர் முறை வருகிறது அல்லலைத் துடைத்திடும் நிலைதந்திடும் பொங்கற் புது நாள்; தமிழர் திருநாள். மகிழ்ச்சி தருகின்றது; மனத்திலே ஓர் இன்ப உணர்ச்சி; மனையெலாம் ஓர் கவர்ச்சி; ஊரெங்கும் ஓர் கலகலப்பு!

வறண்ட நிலை மறைகிறது; பசுமை தெரிகிறது; கவலை மறைகிறது, களிநடமிடச் செய்கிறது; பால் பொங்குகிறது, மகிழ்ச்சி பொங்குகிறது. பேச்சிலே ஓர் இசை நயம்; பார்வையிலே



அறிஞர் அண்ணா

ஓர் கனிவு; உண்டியிலே ஓர் தனிச்சுவை; உடை புதுமை; உணர்ச்சி புதுத் தெம்பளிக்கிறது. விழாக் கொண்டாடுகின்றனர்.

தமிழகத்துளார் தனி விருப்புடன் நடாத்திடும் இத் திருநாளன்று, வாழ்த்துக் கூறுவது ஓர் மரபாகிறது. நலம் கேட்டறிந்து கொள்வதும், நட்பின் அருமையினை உணருவதும் மரபு! உள்ள கவலை ஓராயிரம் எனினும் இன்று ஒரு நாள் மறந்திடுவோம், மகிழ்ச்சியைத் தழுவி நிற்போம் என்று கருதுவதும் மரபு!

அந்த மரபின்படி, 'முரசொலி' பொங்கல் மலரின் மூலம், தமிழகத்தோருக்கெல்லாம் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக கொள்கின்றேன். நலம் மிகுந்திடுக! செயல் செம்மை பெறுக! செய்தொழில் வெற்றி தந்திடுக! என்று வாழ்த்துகின்றேன்.

நாடு வளம்பெற, மொழி ஏற்றம் பெற, அறம் தழைத்திட, அன்பு பெருகிட, மாண்புமிகுந்திட, நாம் அனைவருமே நமது பணியினைச் செம்மையாகச் செய்திட வேண்டும் என்பதனையும் நினைவு படுத்துகின்றேன்.

இந்தத் திருநாள், செயலுக்கு ஓர் பெருமை உண்டு என்பதனை மெய்ப்பிக்கும் திருநாள்.

உழைப்புக்கு உள்ள உயர்வை உலகு போற்றிடும் நன்னாள்.

இந்நாளில் இன்புற்று உள்ளவர்கள், எந்நாளும் இந்த இன்பம் பெற்றிட எம்முறையில் நாடு, அரசு, சமூகம், சிந்தனை, செயல் ஆகியவை அமைந்திருத்தல் வேண்டும் என்பது பற்றி ஆய்ந்தறிதல் வேண்டும்; அந்தச் சிந்தனை தந்திடும் முறையும் நெறியும் நெஞ்சில் நிலைத்திட வேண்டும், அதற்கேற்ப செயல்பட்டு வெற்றி கண்டிட வேண்டும்.

இதற்கான ஓர் வாய்ப்பளிப்பது இந்தத் திருநாள். இதற்கான வேண்டுகோளினை விடுத்திடுவது,என் வாழ்த்தின் நோக்கம்.

வாழ்க நீவிர்! வாழ்ந்திடச்செய்வீர் எல்லோரையும்! வாழ்க நம்நாடு வளமெல்லாம் பெற்று! வெல்க நம் மொழி இடர் பல போக்கி! வாழ்க குறள் நெறி! வாழ்க செயல்திறம்!

முகப்போவியம்: ஓவிய மன்னர் மாதவன்

அண்ணா - அண்ணி

வண்ணப்படம்: எ. சுந்தரம்.

அண்ணா - கலைஞர்

படம்: எம். முருகேசன்.
வண்ணம்: சோமு.

ஓவியங்கள்: முரசொலி செல்லப்பன், அமுதன், பாலு.

அன்றும்

அரிசிக்கடை

அரிசி ஸ்டாக் இல்லை

இன்றும்

தாராளமாக அரிசி

எரியாத வீடுகள்




அன்று
இன்று
தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்
MADRAS STATE TRANSPORT
தமிழ்நாடு அரசு போக்குவரத்து
பஸ் கட்டண உயர்வு
பஸ் கட்டணம் குறைந்தது


அன்று
இன்று
காய்ந்த வயல்கள்
விவசாயப் புரட்சி
இந்தி
இந்தி

பஸ் தேசியமயமாகிறது

பொதுமக்கள்

ஆட்சி ஏற்பட்ட பத்தே மாதத்தில் இத்தகைய சாதனைகள் பலவற்றை செய்த அண்ணாவின் அமைச்சரவையை எல்லாரும்...

பாராட்டுகிறார்கள்

ஆஹா! இவர்களோ!

உலகத் தமிழ் மாநாடு காண வந்திருந்த பல்வேறு நாட்டுப் பேரறிஞர்களிடம் தமிழ்மொழி பற்றியும் - அறிஞர் **அண்ணா** அவர்களைப் பற்றியும் கேள்வி கேட்டபோது அவர்கள் அளித்த கருத்தாழமிக்க பதில்கள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன. படிக்கமட்டுமல்ல - பாதுகாக்கப்பட வேண்டியது மான தொகுப்பு இது!



பேட்டி கண்டவர்:

பேராசிரியர்

கி.இரா.அரங்கராசன்-

எம்.ஏ.,



ஜான் பிலிப்ஸ்கி
(செக்கோஸ்லோவேக்கியா)

தமிழ் இலக்கியத்தில்
எனக்குப் பிடித்தது
சங்க இலக்கியம்


செக்கோஸ்லோவேக்கியா நாட்டில் பிராக் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவரான ஜான் பிலிப்ஸ்கி, தமிழ் சுவல பெல்லின் மாணவராவார். கட்டபொம்மன் வரலாறு குறித்தும் தமிழக வரலாறு குறித்தும் ஆராய்ச்சிகள் நடத்தும் பூர்புகாரில் தமிழ் மொழியின் சிறப்பு குறித்துப் பேசினர்.

முதல் உலகத் தமிழ் மாநாட்டைக் காட்டிலும் இங்கு வாசிக்கப்பெற்ற கட்டுரைகளின் எண்ணிக்கையும் அதிகமாகும். உயர்தர அடிப்படையில் கட்டுரைகள் அனுமதிக்கப்பெற்றன. கட்டுரைகளை வாசித்தவர்கள் தங்களது ஆராய்ச்சிகளின் சுருக்கத்தையே அளித்தனர். அவை யாவும் மிகவும் நல்ல கட்டுரைகளாக இருந்தன. ஆதலின் இம் மாநாடு பெரும் வெற்றியாகும்.

தமிழிலக்கியத்தில் என்னை மிகவும் கவர்ந்தது சங்க இலக்கியமாகும். எந்த ஒரு காலத்தில் இயற்றப் பெற்ற இலக்கியத்தைக் காட்டிலும் சங்க இலக்கியம் சிறந்து விளங்குகின்றது. கவிதை உணர்விலும், இயற்கையின் வர்ணனையிலும், காதலன் தன்மையை விளக்குவதிலும் மிக அழகிய பாங்கைச் சங்க இலக்கியம் கைக்கொள்கின்றது. என் கருத்துப்படி, தமிழ் இலக்கியம் அளிக்கும் கவிதைகளில் சங்க இலக்கியக் கவிதைகளே சிறந்ததாகும்.

தமிழக மக்களது உணர்வை செக் மக்களாலும் ஐரோப்பியர்களாலும் நன்றாக அறிந்துகொள்ள முடிகின்றது. ஆஸ்டிரிய ஆதிக்கத்தின்போது செக் மக்களது நிலையும் இவ்வாறே இருந்தது. செக் மக்கள் செக் மொழியைப் பேசுவதைத் தடுக்க முடியாவிடினும், பயிற்று மொழியாக செக் மொழி அனுமதிக்கப் பெறவில்லை. நாங்கள் எங்கள் மொழிக்காகத் தொடுத்த போராட்டம் அதே ஆழமான மனவெழுச்சி உணர்ச்சிகளையும், இன்று தமிழ் மக்கள் தமிழுக்காகப் போரிடுவதில் காண்கிறேன். தமிழ் மக்கள் தமிழின் மீது கொள்ளும் அன்பையும் அவர்கள் பண்டைய இலக்கியத்துடன் எவ்வாறு ஒன்றியிருக்கின்றனர் என்பதையும் பார்க்க மிகவும் மனமகிழ்ச்சியை அளிக்கின்றது.

அறிஞர் அண்ணாவைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, அவர் சிறந்த அறிவாளி என்றும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் பற்றிக் குறிப்பிட்ட கருத்துக்கள் மிகப் பொருத்தமானவை என்றும் குறிப்பிட்டார். அறிஞர் அண்ணாவால் நிலைமைகளை நன்றாகப் புரிந்துகொள்ள முடிவதினால்தான் ஆராய்ச்சிக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்று குறிப்பிடுகின்றார். அவர் கூறிய கருத்துக்களை ஏற்றுக்கொண்டு ஆராய்ச்சி நிறுவனத்தை அவர் குறிப்பிட்டவாறே நிறுவுவார்கள் என்றுதான் நம்புவதாக ஜான் பிலிப்ஸ்கி குறிப்பிடுகிறார்.



பின்லாந்து நாட்டிலுள்ள ஹெல்சிங்கிப் பல்கலைக் கழகத்தில் சமய-ஒப்புமைப் பேராசிரியராகப் பணியாற்றும் டாக்டர் பெண்டி ஆல்டோ, பல உலக மாநாடுகளில் கலந்து கொண்டவராகும். இவரே சில உலக மாநாடுகளை அமைத்து நடத்தியுமிருக்கின்றார். இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு-கருத்தரங்கு பற்றி கருத்து தெரிவிக்கையில், இங்கு மக்களிடையே தமிழ் மொழி மீது பேரார்வம் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

ஒரு நூற்றாண்டிற்கு முன்னர், அன்னிய மொழிகளின் ஆதிக்கம் காரணமாகப் பின்னிஸ் மொழி வளர முடியாத நிலைமை பின்லாண்டில் இருந்தது, மக்கள் விழிப்புணர்ச்சி பெற்று பினிஸ் மொழிக்கு மறு மலர்ச்சியைத் தந்தனர். இன்று பின்லாந்தில பின்னிஸ் மொழிதான் முதல் மொழியாக இருக்கிறது. விஞ் ஞான மொழியாகவும் அதனை வளர்த்துள்ளோம். ஆதலின் இன்று தமிழ்நாட்டு மக்களிடையே காணப் பெறும் மறுமலர்ச்சியையும், அன்னிய மொழியின் ஆதிக்கத்திலிருந்து தங்கள் மொழியைக் காத்துக் கொள்ள வேண்டும் என்ற மக்களின் துடிப்பையும் காணும்பொழுது, நாங்கள் எங்களது முன்னோர்கள் தங்கள் மொழியினைக் காக்கக் கொண்ட முயற்சிகள் பற்றி நூலகள் வாயிலாக அறிந்தவற்றைத்தான் நினைவு படுத்துகின்றது. மிகவும் சுவை மிக்க ஒப்புமைகளை இவ்விரு நாடுகளின் வாலாற்றிலும் காண்கிறேன்.

திருக்குறளை ஓரளவு நான் கற்றுள்ளேன். அதில் உள்ள கருத்துச் செறிவினால் ஈர்க்கப் பெற்று அதனை அடுத்த ஆண்டிலிருந்து ஹெல்சிங்கிப் பல்கலைக் கழகத்தில் ஒரு பாடமாகச் சேர்த்துள்ளேன்.

அறிஞர் அண்ணாவைப் பற்றிக் குறிப்பிடும் போது அவர் மிகச் சிறந்த பேச்சாளர் என்றும், உலகிலுள்ள எந்தப் பாராளுமன்றத்தில் அவர் இருந்தாலும் அந்தப் பாராளுமன்றத்திற்கே அது ஒரு பெருமையாகும் என்றும குறிப்பிட்டார்.

கருத்தரங்கில் அவர் பேசும்பொழுது, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் குறித்து அவர் குறிப்பிட்ட கருத்துக்களை முழுக்க முழுக்க நான் ஏற்றுக் கொள்கிறேன். பின்லாந்தில் நான் கொண்ட அனுபவத்தின் வாயிலாக நான கொண்டுள்ள கருத்தும் அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டுள்ள கருத்தும் ஒன்றுபோலாகும் எனறார்.

தமிழ் நாட்டு மக்களைப் போன்றே தங்கள் மொழியைக் காத்துக்கொள்ள பெருமுயற்சியை எடுத்துக்கொண்ட ஒரு நாட்டின் பிரதிநிதியாகிய நான், தமிழ் மக்களுக்கு எனது வாழ்த்துக் களையும் நன்றியையும தெரிவித்துக் கொள்கின்றேன்.

தாய்மொழிக்காகப் போராடுதல் அவசியமே !

டாக்டர் பெண்டி ஆல்டோ
(பின்லாந்து)



மனைவியுடன்
தமிழிலேயே பேசுதற்கு
ஆர்வம் கொண்ட...

செம்பியன் ருதீன்
(ரஷ்யா)


பண்புக்கோர் பிறப்பிடமாம், அமைதிக்கோர் உறைவிடமாம், செந்தமிழ்ப் பாவலர் செம்பியன் தமிழ் நாட்டிற்குக் கிடைத்ததொரு நன் முத்தாகும். கருத்தரங்கிற்கு வந்த மேலைநாட்டு அறிஞர்களை மூன்று வகையாய்ப் பிரிக்கலாம்.

ஒரு பகுதியினர் தமிழுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளாதவர்கள். இவர்கள் மொழியியல் துறையையோ, வரலாற்றுத் துறையையோ, சமயத் துறையையோ சார்ந்தவர்கள். தமிழிலக்கியத்தின் தொன்மையைப் பற்றியும் ஆராய்ச்சிகளைப் பற்றியும் அறிந்துகொள்ள வந்த இவர்கள், தங்கள் நாட்டிற்குத் திரும்பியதும் தமிழ்த் துறைகளைத் தங்களது பல்கலைக் கழகங்களில் துவங்குவார்கள் என்று எதிர்பார்க்கப் பெறுகின்றது.

மற்றொரு பகுதியினர் தமிழை ஆங்கிலம் மூல மாகக் கற்றவர்கள். இவர்கள் தமிழைப் பற்றி அறிந்துகொண்டதெல்லாம், தமிழைப் பற்றியுள்ள ஆங்கில நூல்களின் வாயிலாகவேயாகும். இவர்களில் பெரும்பான்மையோர் வடமொழிக்கு ஆக்கந்தருகின்ற வகையில் உள்ள திரு வையாபுரிப் பிள்ளையைக் கொள்கையினை ஏற்றுக்கொண்டவர்களாகும். இவர்களால் தமிழுக்கு நன்மையை விடத் தீமையே அதிகமாகும்.

மூன்றாவது பகுதியினர் தமிழ் மொழியை முறையாகக் கற்றுத் தமிழ் இலக்கியங்களை அறிந்தவர்களாகும். இவர்கள் தமிழ இலக்கணங்களையும தமிழ் மரபினையும் உணர்ந்தவர்களாகும். இவ்வகையைச் சார்ந்த மேல் நாட்டுத் தமிழறிஞர்களை விரல்விடு எண்ணி விடலாம். இந்த வரிசையில் முன்னணியில் இருப்பவர் திரு. ருதீன் அவர்களாவர். தனது பெயரே தமிழ்ப் பெயராக இருக்க வேண்டும் என்ற பேரார்வம் கொண்டு செம்பியன் என்ற பெயரைப் புனைபெயராகக் கொண்டுள்ளார். தமிழ் - ருஷ்ய மொழி அகராதியைத் தயாரித்த குழுவில் முக்கியப் பங்கைக் கொண்டார்.

தமிழார்வம் மிக்க செம்பியன் அவர்கள் தமிழில் பேசுவதில் பெரும் விருப்பம் கொள்கின்றார். எவ்விடமும் தமிழிலேயே பேசும் ஆர்வம் கொண்டவர். அவர் வீட்டில் தமிழில் பேசுபவர்கள் அதிகம் இல்லையே என்ற வருத்தத்தினைத் தெரிவித்தார். சில சமயங்களில் தன் மனைவியுடன் தனது தமிழ் கிறுக்கல் பேசும் உளறு மொழிகளைக் கேட்கு மாறு சொல்லுவாராம். தமிழை அறியாத தன் மனைவியிடம் தமிழில் சொற்பொழிவினை நிகழ்த்துவாராம். அவ்வளவு தமிழார்வம் கொண்ட செம்பயன மிகவும் தன்னடக்கம் கொண்டவராக வாழ்கின்றார். திருவள்ளுவரைப் போன்ற வான்புகழ் வாயந்த மேதைகளை ஈன்ற நாட்டில் சங்கம் எனபது புகழுடன் விளங்கியது. இன்று அச்சங்கம் தமிழக அரசின உதவியால் மறுமலர்ச்சி அடைவதைக் கண்டு மகிழ்வதாகக் குறிப்பிட்டார். தமிழ்மொழி நன்றாக வளரவேண்டும் என்றும் திராவிட இயலில் மொழி வளர்ச்சிக்கு இந்த மாநாடு சிறந்த பணியாற்றிட இந்த உலகத் தமிழ் மாநாடு பெரிதும் உதவும் என்பதைக் கண்டு அகமகிழ்கின்றேன் என்று செம்பியன் பூம்புகாரில் முழங்கினார்.



ருமேனியா நாட்டைச் சார்ந்த புகாரெஸ்ட் பல்கலைக்கழகத்தில மருத்துவப் பேராசிரியராகப் பணியாற்றும இவர், இந்தியப் பண்பாட்டில் மிகுந்த ஆர்வம் கொண்டவராகும். மேல்நாட்டு அறிஞர்களின சிந்தனையில் இந்தியப் பண்பாடு கொண்டுள்ள செல்வாக்குப் பற்றிப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்

இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு—கருத்தரங்கு பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், இங்கு வாசிக்கப் பெற்ற கட்டுரைகள மிக உயர்ந்த கல்வித் தரத்தைக் கொண்டவைகளாக இருந்ததாகக் குறிப்பிட்டார். ஏற்பாடுகள் மிகச் சிறபபாக இருந்ததாகவும் மக்கள் நட்புரிமையுடன் பழகியதாகவும் குறிப்பிட்டார். மிகத் தொன்மையான தமிழர் பண்பாட்டை ஒருசில நாட்கள் நேரடியாகச் சுவைக்கின்ற வாய்ப்பு கிடைத்தது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். கடல் போன்ற தமிழர் பண்பாட்டின் முக்கியக் கூறுகளை அறிந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்தமைக்காகப் பெரிதும் உவகையடைகின்றேன் என்றார்.

தமிழ் இலக்கியங்களில் என்னை மிகவும் கவர்ந்தது திருக்குறளேயாகும். ஏனெனில், திருக்குறள் உலக மக்களுக்கெல்லாம் பொதுவானதொரு உலகப் பண்பாட்டை அளிக்க வல்ல உலகப் பொது நூலாகும்.

தமிழ்மொழி மிகவும் சுவையுள்ளதொரு மொழி. சமஸ்கிருதத்தைக் காட்டிலும் மிகவும் எளிதானதொரு மொழியாகும். உயர்ந்த பண்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் மொழி தமிழ்.

பொதுவாக இந்தியர்களே பரந்த உள்ளத்தைக் கொண்டவர்கள். அதிலும் தமிழர்கள் பரந்த இருதயத்தைக் கொண்டவர்களாகும். தமிழர்கள மிகவும் அமைதியானவர்களாகக் காண்கின்றனர். தமிழ் மக்களுக்கு நான் கூற விரும்புவதெலலாம், தமிழ் மக்கள தங்களிடையே உள்ள சிறந்த வாழ்க்கை வழி காடடிக் கூற்றான 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதை என்றும் மறந்துவிடக் கூடாது என்பதேயாகும்.

தமிழ் இலக்கியத்தில் எனக்குப் பிடித்தது திருக்குறள்

டாக்டர் எமில் டைமிட்ரியன்
(ருமேனியா)



தி. மு. கழகம் பற்றி
ஆராய இருக்கும்
அமெரிக்கத் தம்பதிகள்

கருத்தரங்கிற்கும் பூம்புகாருக்கும் மாறிமாறி வந்து சொற்பொழிவுகளைக் கேட்ட பார்னெட் தம்பதிகள், தமிழ் நாட்டு மக்களைப் போன்று உடை உடுத்தி வந்ததால பெரிதும் பாராட்டப் பெற்றனர். பார்னெட் தம்பதிகளைச் சந்திப்பதில் மாணவர்கள் பேரார்வத்தைக் காட்டினர். பார்னெட் தம்பதிகள் சில ஆண்டுகள் தமிழகத்தில் தங்கி இருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோற்றத்தைப் பற்றியும் வளர்ச்சியைப் பற்றியுமான ஆராய்ச்சிக் கட்டுரையை வரைய இருக்கின்றனர். எளிய வாழ்க்கையையும் நன்முகப் பழகும் பண்பையும் பெற்ற பார்னெட் தம்பதிகள் தமிழ்ப் பேச்சு நடையில் நல்ல தேர்ச்சி பெற்றுள்ளனர்.

டாக்டர் கமில் சுவலபெல்லிடமும் சிகாகோ பல்கலைக்கழகத்தில் மொழியியல் பேராசிரியராகப் பணியாற்றும் திரு. ஏ. கே. ராமானுசத்திடமும் பார்னெட் தமிழ் கற்றார். சென்னை நகரில் உள்ள பேருந்துகளில் திருக்குறள் எழுதியிருப்பதற்குத் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார். அறிஞர் அண்ணா அவர்களையும் மற்றும் சந்திப்பதில் பேரார்வம் கொண்டுள்ளார். இரண்டாண்டுகள் சென்னையில் தங்கியிருந்து சென்னை நகர் வரலாறு பற்றி ஆராயும் எண்ணத்தைக் கொண்டுள்ளதாக பார்னெட் குறிப்பிட்டார். பேராசிரியர் இலக்குவனார் எழுதிய தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் தான் படித்துக் கொண்டு இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

டோக்கியோ பல்கலைக் கழகத்தில்
தமிழை வளர்க்க இருக்கும்
ஜப்பான் தம்பதிகள்



டோக்கியோப் பல்கலைக் கழகத்தில் மொழியியல் துறையில் உதவிப் பேராசிரியராகப பணியாறறும் அயோகி சீசா, தன்னுடைய துணைவியாருடன கருத்தரங்கிற்கு வருகை தந்தார். மொழி இயல், சமயம், இலக்கியம, கலைகள் ஆகியவற்றில அக்கரை கொண்ட அயோகி சீசா, வங்க மொழி இலக்கணம் பறறியும் கட்டுரை வரைந்துள்ளார். தமிழிலக்கியத் துறையில் நடந்துள்ள ஆய்வுகளைப் பறறி அறிந்துகொண்டு, டோக்கியோ பலகலைக் கழகத்தில் தமிழ்த் துறையைத் துவக்குவது சாத்தியமா என்று அறியவந்த சீசா தமிழ்த் துறையைத் துவக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்துள்ளார். தனது நாட்டிறகுத் திருமபியதும அதுவே தனது பணியாக இருக்கும் எனறு குறிபபிட்டார். தருக்குறளைப் படித்து அறிந்துகொள்ள வேண்டும் என்ற பேரார்வத்தைப பேராசிரியர் சீசா அவர்களை கொண்டுள்ளார்.

அறிஞர் அண்ணா அவர்களது கருத்தரங்குப் பேச்சு பறறிக் குறிபபிடுகையில, அவரது கருத்துக்கள் மிகச் சிறபபானவையாக இருந்தனவென்றும, ஆராய்ச்சிக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் எனபதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க இயலாது என்றும் குறிப்பிட்டார்.

மலேசியாவிலிருந்து வந்த தூதுக் குழுவின் தலைவராகப் பாராளுமன்ற உறுப்பினர் டட்டோ ஆதி நாகப்பன் வந்தார். அவர் மலேசியாவில் துவங்கப்பெற்ற நல் முயற்சி தொடர்ந்து இந்த மேலும் பல்வேறு சிறப்புகளுடன் நடைபெறுவதைக் காணப் பெரு மகிழ்வு அடைவதாகக் கூறினர். மலேசியாவில் வாசிக்கப்பெற்ற கட்டுரைகளின் தொடர்ச்சியாக சென்னையில் நடந்த கருத்தரங்கு இருந்தது குறித்து மிகவும் பெருமையடைவதாகவும் குறிப்பிட்டார். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஏற்படுவது குறித்து தமது உளமார்ந்த மனமகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார். அறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போன்று, இதுவும் படமளிக்கும் மண்டபமாக அமையக்கூடாது என வலியுறுத்தினர்.

அறிஞர் அண்ணா அவர்களின் ஆங்கிலப் பேச்சைக் கேட்டேன். அவர் ஆங்கில மொழியில் கொண்டிருந்த புலமையைக் கண்டு நான் மெய் மறந்தேன். குறிப்புகள் ஏதுமின்றி ஒரு மணி நேரம் மிகவும் அருமையாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற சொற்களைக் கொண்டு பேசினர். அவர் ஒரு இலக்கிய அறிஞர் ஆகும். தலை சிறந்த அரசியல் வாதியுமாவார்.


பாரிஸ், கொழும்பு, ஆகிய இடங்களில் நடந்து முடிந்தபின்னர் 1977இல் மலேசியாவில் இம் மாநாட்டை சிறப்பாக நடத்துவோம் என்ற உறுதியை அளிக்குமாறு எனக்குக் கூறப்பெற்றது. அந்த உறுதியை அளிப்பதில் பெருமகிழ்வு கொள்ளுகின்றேன்.

●: :●

நமது நாட்டில் உள்ள சிலர்—ஆங்கிலத்தின் மூலமாக வெளிநாட்டினருக்கு அளித்த சில தவறான கொள்கைகளின் அடிப் படையில் இரண்டாம் உலகத் தமிழ்க் கருத்தரங்கில் அளிக்கப்பெற்ற ஆராய்ச்சிகளில் பல, இருந்தன. நம்முடைய நாட்டைச் சார்ந்த தமிழறிஞர்கள் நம்முடைய தொன்மையான இலக்கிய மரபுகளைப் பற்றிய கருத்துக்களை மேல் நாட்டினருக்கு எடுத்துரைக்கத் தவறிவிட்டனர். தமிழில் நடைபெறும் எந்த ஒரு ஆராய்ச்சியும் தமிழர் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும்.

அறிஞர் அண்ணாவின் ஆங்கிலப் பேச்சைக் கருத்தரங்கில் கடைசி நாளன்று கேட்டேன். என் வாழ்க்கையில் நான் கேட்ட தமிழர்களது ஆங்கிலப் பேசுகளில் முதன்மையான பேச்சாக அன்றைய பேச்சு இருந்தது. சொல்லடுக்கும், கருத்தாழமும் இணைத்து இருந்தன. இன்று இந்தியப் பேரறிஞர்களில், அண்ணா முதலிடம் வகிக்கின்றார்.

பூம்புகாரில் என்னுடைய நூல்களில் ஐந்து வெளியிடப்பெற்றன. பூம்புகாருக்கும் கருத்தரங்குக்கும் தொடர்பு இல்லாமல் இருந்தது வருந்தத்தக்கது. கருத்தரங்கில் மரபு வழிப் புலவர்கள் அனுமதிக்கப்பெறுதது மன்னிக்க முடியாத குற்றமாகும். அவர்களது தமிழாய்வு கருத்தரங்கிற்குப் பெரிதும் பயன்பெற்றிருக்கும்.




அண்ணாவின் பேச்சில்
மெய்மறந்தேன்

(மலேசிய ஆதிநாகப்பர்)

"முதல்வரின் ஆங்கிலப் பேச்சு
முதன்மையானது"

(இலங்கை கணபதியாபிள்ளை)





தமிழ் மக்களின்
பண்பாட்டுக்கு
வாழ்த்துக் கூறும்
டாக்டர் ஹெர்மன் பெர்ஜர்
(ஹீடல் பெர்க்)

ஹீடல் பெர்க் பல்கலைக் கழகத்தில் இந்தியத் துறையின் தலைவரான டாக்டர் பெர்ஜர் இந்திய மொழிகளைப் பற்றிப் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். மரத்தின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு ஏ. பி. ஜனார்த்தனம் அவர்கள் எழுதிய "அண்ணா-ஒரு வரைவு" எனும் ஆங்கில நூலைப் படித்துக்கொண்டிருந்தபொழுது கருத்தரங்கு பற்றித் தனது கருத்தை அளித்தார்.

கருத்தரங்கு மிகச் சிறப்பாக நடந்தது என்று குறிப்பிட்டார். தமிழ் மக்கள் அன்பொழுக வரவேற்றனர் என்றும் விருந்துகளிலும் மாலை நேரங்களில் அளிக்கப்பெற்ற நடன, நாடக, இசை விருந்துகள் முதல்தரமாக இருந்தன என்றும் குறிப்பிட்டார்.

கருத்தரங்கில் விவாதிக்கப்பெற்ற கட்டுரைகள் மிக உயர்ந்த தர அடிப்படையில் இருந்தன என்றும் கூறினர். தமிழ் இலக்கியம் குறித்து நடந்துள்ள ஆராய்ச்சிகள், ஹீடல்பெர்கில் நிலவ இருக்கும் தமிழ்த்துறைக்கு உறுதுணை செய்யும் என நம்புவதாகக் கூறினர். திருக்குறளை மொழி பெயர்ப்பு மூலமாகக் கற்றுள்ளதாகவும், அப்பொதுமறை குறித்து மேலும் ஆய்வுகள் நடத்த இருப்பதாகவும் குறிப்பிட்டார்.


அறிஞர் அண்ணாவின் ஆங்கிலப் பேச்சு மிகவும் அருமையானதாக இருந்ததாகக் குறிப்பிட்ட திரு. பெர்ஜர் அவரது ஆராய்ச்சி நிலையம் பற்றிய கருத்துக்கள் மிகவும் சரியானவை என்றும் குறிப்பிட்டார்.

தமிழர்களது பண்பாடு மிகவும் பழமையானது என்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் பெறுகின்றது. ஆனால் மொழி உணர்வின் அடிப்படையில் எழுகின்ற வாதங்களைக் கடுமையான ஆய்வுக்கு உட்படுத்த மறுக்கின்றனர். ஆய்வுகள் அதிகம் ஆக ஆகத்தான் என்றும் நிலைத்து நிற்கும் வளர்ச்சியை மொழி பெறக்கூடும். ஆதலின் தமிழர்கள் பழம் பெருமை பேசுவதுடன் தமிழ் மொழி ஆராய்ச்சிக்கும் இடம் அளிப்பார்கள் என்று நம்புகின்றேன்.

●: :●

தேவார இசையை
வீணையில் இசைக்கும்
வில்லியம் ஷெல்டன்...
(அமெரிக்கா)

→



பேட்டி கண்ட
அரங்கராசன்

←

அமெரிக்காவில் கால்கேட் பல்கலைக் கழகத்தின் இசைத்துறைப் பேராசிரியராக இருக்கும் வில்லியம்ஸ் ஷெல்டன் தமிழிசையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். வீணையை நன்முக வாசிக்கத் தெரிந்தவர். தனது மாணவர்களுக்குத் தேவாரப் பண்களை வீணையில் இசைத்துக் காட்டிப் பயிற்சி அளிப்பார்.

இரண்டாம் உலகத் தமிழ்க் கருத்தரங்கு பற்றிக் குறிப்பிடுகையில், தமிழிசை பற்றிய கட்டுரைகள் அதிகமாக இல்லாதது குறித்து வருத்தம் தெரிவித்தார். ஆனால் மற்ற துறையில் இருந்த கட்டுரைகள் சிறப்பாக இருந்ததாகவும் குறிப்பிட்டார்.

அறிஞர் அண்ணா உண்மையான அறிவியல் அறிவுக்கு ஆக்கம் தருகின்ற வகையில் கருத்தரங்கில் பேசியதற்குத் தனது பாராட்டைத் தெரிவித்தார். அறிஞர் அண்ணா குறிப்பிட்டவாறே ஆராய்ச்சி நிலையம் அமையும் என்ற நம்பிக்கையையும் தெரிவித்தார்.


















தந்தி "வேல் நூல்" தொலைபேசி: 862, 1101

வடஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை லிட் சி. 2401

அஞ்சல் பெட்டி எண் 1, அரியூர், வேலூர்-2.

அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ... ரூ 60 லட்சம்
செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ... ரூ: 21.39 ,
தற்பொழுது இயங்கிவரும் கதிர்களின் எண்ணிக்கை: 12,096
விரைவில் நிறுவப்பட இருக்கும் கதிர்களின் எண்ணிக்கை 1,728

இவ்வாலையில் தயாராகும் வேல் நூலின் ரகங்கள்

1 உள் நாட்டு பஞ்சியிலிருந்து 40 நெ 60 நெ. உயர்ந்த ரக பாவுக்கு வேண்டிய நூல்கள் தயாராகின்றது:
2. எகிப்து நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்ந்த ரக பஞ்சியினால் 80 நெ, 100 நெ. உயர்ந்த ரக பாவுக்கு வேண்டிய நூல்கள் தயாரிக்கப்படுகின்றது.

இவ்வாலையில் தயாராகும் 40 நெ. 60 நெ. 80 நெ. 100 நெ, நூல் தமிழ்நாடு முழுவதும் 'வேல் நூல்' என்ற டிரேட் மார்க்கில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலமாகவும், நேரடியாகவும் பெருமளவில் விற்பனை செய்து வருகின்றோம்.

எங்கள் ஆலையில் உற்பத்தியாகும் எல்லா ரக நூல்களும் பாவுக்கு வேண்டிய தரமுள்ளவை என்று உத்திரவாதமளிக்கிறோம்.

கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்த பொது மக்களும் கூட்டுறவு நிறுவனங்களும் எமது ஆலையில் பெருமளவு பங்குகள் எடுக்க முன்வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தமிழக அரசு அனுமதித்துள்ள டிவிடெண்ட் உச்ச அளவு 9 சதவிகிதம்.

மா. பா. சாரதி, எம். எல். ஏ., தலைவர்.

டி. எஸ் ராமகிருஷ்ணம ராஜா, நிர்வகிக்கும் நெறியாளர்.

Grams : "ANGUVILAS"
Regd Numbers
12700 & 149348

Phone : 71
Est. 1925

ஸ்தாபகர்
அங்குவிலாஸ் எம். வி. முத்தையா பிள்ளை திண்டுக்கல்

அங்கு விலாஸ்

எம் வி முத்தையா பிள்ளை (பர்ம்)

வாசனைப் புகையிலை

தாம்பூலத்துடன் சுவைப்பதற்கு தின்பண்டம் போன்றது

ANGU VILAS Scented Tobacco stands foremost in India. If a little of this Scented Tobacco is chewed with Betel leaves, nut and Chunnam and spit out, it will go on refreshing your mind & Body.

Anguvilas M. V. Muthiah Pillai (Firm)

SCENTED TOBACCO FACTORY,
DINDIGUL. (South India.)

தரமான பருத்தி நூல் கூட்டுறவு நூற்பாலைகளில்

கைத்தறித் தொழிலுக்கு வேண்டிய நல்ல தரமான பருத்தி நூல் நியாயமான விலையில் கிடைக்கும் பொருட்டு தமிழக அரசு பன்னிரெண்டு நூற்பாலைகளை கூட்டுறவு அடிப்படையில் அமைத்துள்ளது. கிராமப்பகுதிகளிலும் தொழில்வளம் பெருக வேண்டுமெனும் கொள்கைக்கேற்ப இவ்வாலைகள் பெரும்பாலும் கிராமப்புறங்களிலும், பின்தங்கிய பகுதிகளிலுமே நிறுவப்பட்டுள்ளன.

★

பன்னிரெண்டு கூட்டுறவு நூற்பாலைகளின்

மொத்த மூலதனச் செலவு: ரூ. 9.00 கோடி

மொத்த பங்கு மூலதனம்: ரூ. 3.20 கோடி

தமிழக அரசு அளித்துள்ள பங்கு மூலதனம்: ரூ. 1.61 கோடி

உற்பத்தியாகும் நூல் ரகங்கள்: 20 எண் முதல் 100 எண் வரை

ஆண்டொன்றுக்கு உற்பத்தியளவு: 40,000 பேல்கள்.

வேலை வாய்ப்பு: சுமார் 4000 தொழிலாளர்கள்

★

மேலும் விபரங்களுக்கு

தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை, பேட்டை, திருவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பாலை, திருவில்லிப்புத்தூர், திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை, நாசரெத்; சேலம் கூட்டுறவு நூற்பாலை, அம்மாப்பேட்டை; கோவை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, தாராபுரம்; மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மேலூர்; திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, கரூர்; கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி; காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கூட்டுறவு நூற்பாலை, காஞ்சிபுரம்; தென் ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, திண்டிவனம்; வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, வேலூர்; தஞ்சை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மணல்மேடு.

With the best compliments

Phone: 190



Sri Lakshmi Saraswathi Textiles (Arni) PrivateLimited



Ragunathapuram p. o: Arni, N.A. District.

Manufacturer of best quality 60's & 40's yarn

★எமது மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்!★

நல்ல பால்! ★ நியாயமான விலை!!

நிறுவனம்: 1927 தொலைபேசி: 61068

சென்னை கூட்டுறவு பால் வழங்கு சங்கம் லிமிடெட்

அயினாவரம், சென்னை-23

திரு. வி. முனுசுவாமி - முன்னாள் மேயர்
தலைவர்

நல்ல பாலை 180 டிகிரி Fல் காய்ச்சி, திடீரென்று 45 டிகிரி Fக்கு அதை குளிர்ச்சியடையச் செய்வதே பதப்படுத்தப்பட்ட (pasteurised) பாலாகும். இப்படிச் செய்வதால் பாலில் உள்ள கெட்ட கிருமிகள் நீங்கிவிடும் பாலின் அசல் போஷாக்குத் தன்மையும் மாறுபடாது. அதில் கைபடுவதுமில்லை. சாதாரண சூழ்நிலைகளில் சேகரிக்கப்பட்டு வழங்கப்படும் சுத்தமான பாலைக்காட்டிலும் இந்தப் பால் எப்பொழுதும் பத்திரமானது, சுத்தமானதாகும்.

கூட்டுறவு நிறுவனங்களை ஊக்குவித்து ஆதரிக்கும்படி வாடிக்கையாளர்கள் வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

பால் விலைகள்

		ரூ. பை.
டெப்போக்கள் மூலம்	லிட்டர் ஒன்றுக்கு	1—24
வீட்டுப் பட்டுவாடா பையன்கள் மூலம் (பட்டுவாடா சேவைக்காக மாதம் ரூ. 3 அதிகப்படி கட்டணம்)	,,	1—24
ஹோட்டல்கள் மற்றும் நிறுவனங்கள்	,,	1—46
விசேஷ ஆர்டர்கள்	,,	1—60

தயாரிப்புகள்

நெய்	கிலோ ஒன்றுக்கு	11—00
கோவா (சக்கரையின்றி)	,,	13—00
கோவா (சக்கரையுடன்)	,,	8—00

E. S. ஸ்ரீனிவாசன்,
கூட்டுறவு உதவி-பதிவாளர், காரியதரிசி,

சென்னை கூட்டுறவு பால் வழங்கு சங்கம் லிமிடெட்

அயினுவரம்

★

3—12—1967 முதல் டைரக்டர்கள் குழுவினர்

திரு. வி. முனுசாமி, முன்னுன் மேயர்-தலைவர்.
,, என். எஸ். தேவராசன், முன்னுள் டெபுடி மேயர்- [illegible]லைவர்.
,, வி. எஸ், கோவிந்தராசன் எம். எல். ஏ டைரக்டர்
,, முனு ஆதி எம். எல். ஏ. ,,
,, எம், கோபால் ,,
,, டி. ராஜரத்தினம் ,,
,, சி. சிட்டிபாபு எம். பி. ,,
,, பி. சிவசங்கரன் ,,
,, சி, வி. எம். அண்ணுமலை எம் எல். ஏ ,,
,, பி. பவனவண்ணன், டெபுடி மேயர்
,, டாக்டர் பி. நடேசன் எம். பி. பி, எஸ்.
தலைவர், சென்னை மாவட்ட கூட்டுறவு பாங்க். சென்னை
,, டி. கே. பொன்னுவேலு பி. ஏ, டைரக்டர்
,, வேலூர் நாராயணன், அட்வகேட் ,,
,, டீன், அரசினர் ஜெனரல் ஆஸ்பத்திரி, சென்னை ,,
,, உதவி பால் ஆணையாளர் (ஏ) இன்-சார்ஜ். சென்னை-51.

★

முருகன் பிரஸ், 1968.

அனைவருக்கும் எமது பொங்கல் நல்
வாழ்த்துக்கள்

★

திமாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்

சேலம்

(கிளை: மதுரை)

★

திரைப்படத் தொழிலில் முன்னணியில் உள்ளவர்கள்

மற்றும்,

நாலு படங்களைத் தயாரித்து நாட்டிலே முதன் முதலாக
பெரும் சாதனை புரிந்த, நிறுவனம்:

தந்தி: "modern"

தொலைபேசி

ஸ்டுடியோ: 2405
அலுவலகம்: 2406
தயாரிப்பு இலாகா: 2186

R. பத்மநாப முதலியார்

30, ஸ்டேட் பாங்கி ரோடு, வேலூர்-4

(வ. ஆ. மாவட்டம்)

ரைஸ் மில், பம்பு செட்டு, எலக்டிரிக்கல் அண்டு மெஷ்னரி சாமான்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

வ. ஆ. மாவட்டம் முழுவதற்கும் அதிகாரம் பெற்ற விற்பனையாளர்கள்;

விஸ்டர் ஆயில் இஞ்சின் (ஓல்டேஸ் லிமிடெட்)


பீக்கோ எலக்டிரிக் மோட்டார் பம்பு செட்டுகள் (ஓல்டேஸ் லிமிடெட்)


டைட் வாட்டர் ஆயில் கம்பெனி (இன்டியா லிமிடெட்)

எமது பொங்கல் நல் வாழ்த்துக்கள்

நம்பிக்கைக்கும், உழைப்பிற்கும் உத்திரவாதமுள்ள

S. R. H.





—: தயாரிப்புகள் :—

1, ஹைபெடிலிடி சினிமா ஸ்பீகரஸ். 2. சினிமா ஆர்க் ரெக்டி பயர்ஸ் (டங்கர் வால்வு அண்டு மெடல்டைப்) ஹையின் டன்சிடி) லோயின் அண்டு செலிகோன் டைப், டன் சிடி (அண்டு) கம்பையிண்டு, 3. சினிமா (அண்டு) P. A., ஆம்பினி பயர்ஸ்,

4. சினிமா ஸ்கூடு புரொஜக்டர்ஸ், 5-A சினிமா H F டிரைவர்யூனிட் டைப்ஸ்பீகர், 5: சினிமா HF ஷெல்டைப் ஹார்ன், 6. சினிமா HF-LF கிராஸ் ஓவர் நெட் ஒர்க். 7. ஸ்டெப்டவுன் (அண்டு) ஸ்டெப் அப் ஓல்டேஜ் ரெகுலேட்டர் டிரான்ஸ் பாரம்ஸ் 8. மைக்ரோ போன்ஸ், 9. பேட்டரி சார்ஜர்ஸ்.

Phone: 455

முழு விவரங்களுக்கு அணுகுங்கள்

தயாரிப்பாளர்:—

சாமி ரேடியே அவுஸ்,

கமிசேரி பஜார்,

வேலூர் வட அற்காடு மாவட்டம்

மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிமிடெட்

330, தம்பு செட்டி தெரு, சென்னை-1.



சூரியன் மார்க்

மைதா, சூஜி, ஆட்டா தயாரிப்பாளர்கள்

சேலத்தில்

உத்திரவாதமுள்ள
பித்தளை, செம்பு, அலுமினியம்,
எவர்சில்வர் பாத்திரங்களுக்கும்—

❊

கல்யாணம், மற்றும் விசேஷங்களுக்குத்
தேவையான பரிசுப் பொருள்களுக்கும்—

❊


தொழிற்சாலைகளுக்குத் தேவையான
பித்தளை, செம்பு தகடுகளுக்கும்—
சிறந்த இடம்,

Tel: "Metal mart" phone: 2910

தி மதுரை மெட்டல் மார்ட்

139 மெயின் ரோடு, செவ்வாய்ப்பேட்டை சேலம் 2.


மாமழைச் சிக்கல்



உலகத் தமிழ் மாநாடு, நீவுத் திட்டில், பூம்புகார் நகரில் மிகச் சிறப்பாக நடந்தேறிவிட்டது. உலகெங்கணும் சிதறிக் கிடந்த தமிழ்மக்கள், தமிழ் பிறந்து, வளர்ந்து, ஏற்றம் பெற்றிட்ட தமிழகத்தின் எழில நகராம் சென்னையில் கூடி நின்றனர்!

கடந்த காலம் கண்ணெதிரே தோன்றிற்று! மறைந்துவிட்ட பூம்புகார் நகரம் உயிர்பெற்றெழுந்து நின்றது. பழங்கால தமிழகத்தின் வரலாற்றுச் சின்னங்கள் வடிவம் பெற்றன. வந்தவர்களை வரவேற்று முகமன்கூறி நின்றன! செழுமையும், பொருட்செறிவும், கற்பனை நயமும் வளமையும் நிறைந்துவிட்ட தமிழப் பேரிலக்கியங்கள் கருத்துக்களை ஓடவிட்டு, கம்பீரமாக தலைநிமிர்ந்தன! "திருக்குறள்" திரண்டுவிட்ட தமிழர் படைக்கு திருவிளக்கு தந்தது! எட்டுத் தொகையும், பத்துப் பாட்டும், ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியமும், ஐம்பெரும் காவியங்களும், புத்துணர்வு பெற்ற புது வாழ்வு பெற்றுவிட்ட பூரிப்பில் இணைந்து நின்றன!

தமிழ் வளர்த்த, காத்த பெரும் புலவர்கள், தமிழ் பகை எப்பக்கம் வந்து புகுந்துவிடும் எனக் கேட்டுக் கொண்டு அதோ கடலோரத்தில் கனி



நாஞ்சில் மனோகரன் எம்.ஏ.எம்.பி

வுடனும் கம்பீரத்துடனும் காவல் காக்கத் தொடங்கி விட்டனர்!

கடந்த காலத்தை நிகழ் காலமாக்கி, நிகழ்காலத்தை நம்பிக்கைக் குரியதாக மாற்றிவிட்ட உலகத் தமிழ் மாநாடு, நிச்சயமான உரிமைகளின் உறுதிப் படுத் தப்பட்டுவிட்ட புனிதமான கலைக்கோயில்!

எங்கேயும் தமிழ்மணம்

"மெல்லத் தமிழனிச்
சாகும், அந்த
மேன்மைக் கலைகள்
தமிழினில் இல்லை."

என்றுரைத்த பேதைகள் அதோ திணறி ஓடுகிறார் கள். கலை, தொழில், விஞ் ஞானம், சட்டம், வணிகம் அனைத்துத் துறைகளையும் திறமையோடு சந்திக்கவல்ல ஆற்றல், தமிழுக் குண்டு என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துவிடும் நம்பிக்கை நாடெங்கும் முகிழ்ந்துவிட் டது!

புலவர் பெருமக்களின் இதயக் கதவுகள் திறந்து விட்டன! நுண்கலை ஆய்வா ளர்களின் சிந்தனையில் புரட்சி பூத்துவிட்டது. தமிழ் வித்தகர்களும் விற் பன்னர்களும் "வெளியீடு கள்" தந்தவண்ணமுள்ள னர். "தமிழ்த் தாய்" பூரிக் கிறாள்! தலைகள் அறுந்து விட்டன! தறுதலைகள் தலை குனிகின்றன!

வெளிநாட்டார் தமிழின் திறன் கண்டு, வளமை கண்டு, செழுமை கண்டு வியக்கின்றனர்!

தமிழ்க் களஞ்சியம் நிறைந்துகிடக்கிறது! களஞ் சியத்தின் "காவலாளியாக" அறிஞர் அண்ணு நின்று கொண்டிருக்கிறார்! அவ ரைச் சுற்றி இலட்சோப லட் சம் மக்கள்!

உலகம் பரந்து கிடக் கிறது! ஆனால் அதன் தொலைதூரங்கள், சுருங்கி வருகின்றன! விஞ்ஞானத் தின் விந்தைகளில் இதுவும் ஒன்று!

உலகம் சுருங்கச் சுருங்க, நெருக்கங்கள் அதிகமாகின் றன! இணைப்புகள் இறுகக் கூடும்! புரிந்து கொள்ளும் வாய்ப்புகள் அதிகம் கிடைக் கும். கண்டு கொள்ளும் சந் தர்ப்பம் எராளம் தோன் றும். "தமிழ்" உலகமொழி ஆகிவிடக்கூடும் நிலைமைக்கு தெளிவான அடையாளங் கள் தெரிகின்றன!

சுவரிலே எழுதப்பட்டிருக் கும் காலத்தின் "எச்சரிக்கை களை" துணைக் கண்டத்தின் ஆதிக்கபீடம் படிக்கத் தவ றக் கூடாது என்பது என் வேண்டுகோள்!

சிக்கலிலே இரண்டு வகை!

ஒன்று எழுகின்ற சிக்கல்! இரண்டாவது உருவாக்கப் படும் சிக்கல்!

முன்னதற்குப் பரிகாரம் சுலபத்திலே கிடைக்கும், தேவை, புத்திசாலித்தனம்.

பின்னதற்குப் பரிகாரம். கொஞ்சம் கடினமானது! காரணம், இது இயற்கை யானதல்ல! கண்ணை மூடிக் கொண்டு தூங்குபவனைப் போல் காட்சியளிக்கும் பிரமையிது! பரிகாரம் கொஞ்சம் சிரமமே தவிர முடியாததல்ல! தேவை,— தொலைதூரப் பார்வை. உணர்வுகளை மதித்திடும் பெருந்தன்மை, அவைகளை அங்கீகரிக்கும் விசால நோக்கு! பெற்றுத் தீர வேண்டியவர்கள் பெற வேண்டிய காலம் தோன்றி விட்டது!

பல்வேறு இன மக்களைக் கொண்ட இந்தியத் துணைக் கண்டத்திற்கு, ஒரு மொழியை ஆட்சிமொழி யாக்க முனைவது முட்டாள் தனம்.

அப்படியே முயன்றாலும் இந்தியை ஒரு தனி ஆட்சி மொழியாக்கத் துணிவது அடிமுட்டாள்தனம்.


முயற்சியிலே ஈடுபடும் மூலவர்கள் நாட்டின் எதிர் காலத்தைக் கணக்கில் எடுத் துக் கொள்வதற்குப் பதி லாக, நிகழ்காலத்தில் "தங் களை" எடுத்துக் கொள்ளு கிறார்கள், விளக்கங்கள் கிடைக்கவில்லை, விபரீதங் களுக்கு விதை தூவுகிறார் கள்.

இன்றைய முக்கியத் தேவை. துணைக்கண்டத் தின் ஒருமை, ஆதிபத்திய உரிமை, இவைகளுக் கான பாதுகாப்பு. கோடிக் கணக்கிலே மக்கள் தெருக் கோடியில் நிற்கிறார்கள்; கையது கொண்டு மெய்யது பொத்தி, காலது கொண்டு மேலது தழுவிக் கிடக்கிறார் கள்! பசியினால் வயிறு முர

(தொடர்ச்சி அடுத்த 8-ம் பக்கத்தில்)

மனிமன்

அப்துர் ரகுமான்



பறக்கும் விளக்கே! மின்மினியே!
பாரினில் திரியும் விண்மீனே!
இறக்கை பெற்ற மின்னல்நீ!
எரியினும் சுடாத தீச்சுடர்நீ!


காற்றில் அணையா விளக்கேந்திச்
காரிருட் காட்டில் அலைவதென்ன?
ஏற்றிய சுடரோ பின்னுலே
யாரை இப்படித் தேடுகிறாய்?

பட்டப் பகலில் விளக்கேந்திப்
பாரில் மனிதனைத் தேடிவந்த
கெட்டிக் காரனும் அந்த
கிரேக்க ஞானி உன்குருவோ?

பகலில் முயன்றே அவன்தோற்றான்
பாவம்! நீயோ இருட்டிரவில்
அகலுடன் வந்தாய்! உனக்கேனும்
அகப்படு வானோ, தேடிப்பார்!

பழைய புராணத்தில் ....






.... புதிய நாயகர்கள்


லெட்சுமணன்
விவசாயத்தைப் பற்றி கருத்திருமனுக்கு ஏதும் தெரியாது என்றார் உணவு அமைச்சர் ஜெகஜீவன்ராம்
சூர்ப்பனகை
கருத்திருமன்
பரதன்
நீதான் இந்த நாட்டை ஆள வேண்டும்!
காந்தி

மீள் பார்வை



இந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தினிலும் கூடத் தமிழ் மொழியின் தனித்தன்மை விவாதத்திற்குள்ளாக்கப்பட்டு வந்தது எனில், 19-ம் நூற்றாண்டின் இடையில் தமிழ் மதிக்கப்பட்டவாறு யாதாம்? ''ஏதோ ஒரு பேச்சு மொழி! அதுவும் பிற இந்திய மொழிகளைப் போன்றே, வடமொழி வழிப் பிறந்து வளர்ந்த மொழி! இந்தோ - ஐரோப்பிய மொழி வகையைச் சார்ந்ததொரு மொழி!'' என்னும் கருத்துக்களே மொழிநூல் துறையினரிடம் மாறுபாடற்று நிலவி யிருந்தது அக்காலம். தமிழின் தனித் தன்மைகள் எவையும் உலகிற்கு எடுத்துக்காட்டப்படாத நிலை! வடமொழியினை மூலமாகக்கொண்டு இந்திய மொழி களை ஆராய்ந்த பலருக்கும், தமிழின் தனித்தன்மை எதுவும் புலனாகாமற் போய்விட்டது. அக்காலத்தில் ஒரு மொழியின் சிறப்பை உணர்தற்கு வேண் டிய பயிற்சியுடன் மொழி நூலார் எவரும் தமிழை ஆராயப் புகவில்லை...

சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில்— நேபாளத்தில் வாழ்ந்திருந்த ஹட்சன் என் னும் அறிஞர் தென்னிந்திய மொழிகள் பல வற்றிலும் வழங்கி வந்த சொற்கள் பலவற் றைத் தொகுத்து, முறைப் படுத்தி வெளியிட் டார். ஆரியம் அல்லாத அச்சொற்களையும் அவை வழங்கிய மொழிகளையும் 'திராவிடம்' என்னும் பெயரிட்டு அழைத்தமுதல் மொழி நூலாசிரியரும் அவரேயாகும்.

அதைத் தொடர்ந்து ஆராய்ந்த 'பெறி' என்னும் அறிஞர் வடநாட்டில் வழங்கும் மொழிகள் பலவும் ஆரியவகுப்பின என்றும், தென்னாட்டில் வழங்கும் மொழிகள் பலவும் தமிழ் வகுப்பி னர் என்றும் தெளிவு படுத்தினர். அக்கருத்து மேலைநாட்டு ஆராய்ச்சி யாளர்கள் பலர் தமிழைக் குறித துப் புதிய ஆர்வத்தோடு ஆராய ஏதுவாயிற்று. அதன பயனாகத் தென்னாட்டில் வழங்கிய மொழி களைக் கற்றுத் தேர முற்பட்டவர் பலர். அவருள்ளும் சிலர், தென் னாகத்திலேயே உறைந்து தென் மொழியில் ஒன்றைத், தேர்ந்து கற்று ஆராய்ச்சி நடத்த முற்பட் டனர்.

'டாக்டர். குண்டர்ட்' என் னும் செருமானிய மொழிப் புல வர், மேலை கடற்கரையில் வழங்கும் மலையாளத்தைக் கற்றுத் தெளிந்து ஆராயலானார். கருநாடகத்தில் வழங்கும் கன்னட மொழியைக் 'கிட்டல்' என் னும் பெரியார் ஆராய்ந்தார். 'பிரௌன், என் னும் அறிஞர் தெலுங்கு மொழி


யிலே தேர்ச்சியுற்று, அதன் சிறப்புக்களை ஆராய்ந்து வெளியிட்டார். அதே காலத்தில், கிருத்துவ சமயத் தொண்டு ஆற்ற வந்த கால்டுவெல் என்னும் பாதிரியார், தமிழகத்தின் தெற்குப் பகுதியில் தங்கி வாழ்ந்து, தமிழினக்கற்றுத் தேர்ந்து, மொழி நூல் ஆராய்ச்சி முறைப்படி தமிழின் இயல்பினையும் சிறப்பினையும் கண்டறியலானார்.

பழந்தமிழ்ச் சொற்களைப் பண்டைத் தமிழ் இலக்கியங்களினின்றும் தொகுத்து, பழங் கன்னடச் சொற்களோடும், ஆதி ஆந்திரச் சொற்களோடும் ஒப்பிட்டு நோக்கி - அச்சொற்களின் வேர்கள் (மூலப்பகுதிகள்) ஒன்று பட்டிருக்கக் கண்டு, வடமொழியினின்றும் முற்றிலும் வேறுபட்டு, தனித் தனமை கொண்டிலங்குவது தமிழ் என்பது தெளிந்து, வியந்துபோற்றி 'தமிழினது மாட்சியை உலகு ஒப்பும் வண்ணம் சான்றுகளுடன் நிலைநிறுத்தினார்.

தென்னாட்டு மொழிகளின் இயல்புச் சொற்களையும், இலக்கணப் பாகுபாட்டினையும் ஆராய்ந்து அவற்றிடையே காணும் ஒற்றுமையைப் புலப்படுத்தி—திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் கண்ட தனிப் பெருமை அவருக்குரியதாகும். 'திராவிட மொழி நூலின் தந்தை' என்று தமிழ் உள்ளவும் உளமார போற்றப்படும் அருந் தொண்டாற்றியவர் அப் பெரியார்.

1856-ஆம் ஆண்டிலேயே வெளியிடப்பட்ட அவரது திராவிட ஒப்பியன் மொழி நூலைக் கண்டு, கிளாஸ்கோ பல்கலைக் கழகம் அவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது எனில் அப் பணியின் அருமை பெருமை விளங்கும்.

"திராவிட மொழிகள் வட இந்திய மொழிகளிலிருந்து பற்பல இயல்புகளில் வேறுபடுகின்றன. அவ்வாறிருந்தும் அத் திராவிட மொழிகள், வட இந்திய மொழிகளை ஒப்பவே, சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தனவாக வடமொழிப் பண்டிதர்களால் கருதப்பட்டன. தாங்கள் அறிந்த எப் பொருளுக்கும் பிராமண அடிப்படை கற்பிக்கும் கொள்கையினர் அப்பண்டிதர்கள். அவர்கள்கூறும் அம்முடிவை, முதன் முதலில் வந்த ஐரோப்பிய அறிஞர்களும் அவ்வாறே ஏற்றுக் கொண்டனர்'. மேலும், திராவிடம் சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தது என்ற கருத்து, முந்திய தலைமுறையினராய மொழிநூல் வல்லுநர்க்கு ஏற்புடையதாய்த் தோன்றினும் இதுகாலை அறவே அடிப்படையற்றுப்போன கட்டுக் கதையாகிவிட்டது. மேலே குறித்த சமஸ்கிருதப் பண்டிதர்கள், வட இந்திய மொழிகளை ஆழக்கற்று விளங்க அறிந்தவரே எனினும், திராவிட மொழிகளைச் சிறிதும் அறியாதவராவர். அல்லது சிறிதே அறிந்தவராவர். ஒப்பியல் மொழி நூலின் விதிமுறைகளில் ஒருசிறு பயிற்சியும் பெறாத எவரும்,



பேராசிரியர் க.அன்பழகன் எம்.ஏ.எம்.பி

திராவிட மொழிகளின் இலக்கண விதிகளையும், சொற்களையும் நன்கு கற்றுத் தேர்ந்தபின் அவற்றைச் சமஸ்கிருத இலக்கண முறைகளோடும் ஒப்பு நோக்க முயலாத எவரும், திராவிட இலக்கண அமைப்பு முறையும், சொல்லாக்க வடிவங்களும், இன்றியமையாச் சிறப்பு வாய்ந்த அவற்றின் எண்ணற்ற வேர்ச் சொற்களும், எத்தகைய சொல்லாக்க, சொற் சிதைவு முறைகளினுலேயாயினும், சமஸ்கிருதத்திலிருந்து தோன்றியனவாகும் என்று கூற உரிமையுடையவராகார்.''

அதுகாறும் தமிழைக் குறித்துத் தவருன கண்ணோட்டத்தில் கொள்ளப் பட்டிருந்தமுடிவை மறுத்து, திராவிட மொழிகளை ஆராய்வதற்கு ஒருவருக்கு வேண்டிய தகுதியை இவ்வாறு விளக்கினர், டாக்டர். கால்டுவெல் அவர்கள்.

திராவிட மொழிகளோடு சமஸ்கிருதம் உள்ளிட்ட இந்தோ ஐரோப்பியமொழிகள் கொண்டுள்ளதாகக் காட்டப்படும் சில ஒற்றுமைப் பண்புகளைக்கொண்டு, பழமை வாய்ந்த உண்மையான இனஉறவு இருக்கிறது என்று கொள்ளும் முடிவும் கற்பனையே எனவும், அவ்வாறு கொள்ளினும், சமஸ்கிருதத்திலிருந்து திராவிட மொழிகள் பிறந்தன என்று கூறும் கொள்கையிலிருந்து அது முற்றும் முரண்பட்டதாகும் எனவும் கூறியுள்ளார் டாக்டர், கால்டுவெல் அவர்கள்.

''திராவிட மொழிகள் அவ்வொற்றுமைப் பண்புகளைச் சமஸ்கிருதத்திலிருந்தே கடன் வாங்கின என்றே, அவ்விரு இன மொழிகளுமே அவ்வொற்றுமைப் பண்புகளைத் தம் இரு மொழிகளுக்குமே புறம்பான ஒருமொழியிலிருந்து ஒருசேரக் கடன் வாங்கின என்றே கொள்வதற்குமாறுக, தன் அண்டை மொழிகளிடம் கடன் வாங்கத் தயங்காத சமஸ்கிருதம், அவ்வொற்றுமைப் பண்புகளை திராவிடத்திலிருந்தே கடன் வாங்கியுள்ளதுஎன்று கருதுவதால் மேலே கூறிய அவ்வொற்றுமைப் பண்புகள் அனைத்திற்கும் இல்லையாயினும் சிலவற்றிற்காவது, அமைதி கூற என்னலும் ஆகும் என்று கருதுகிறேன்'' என வாதிட்டுள்ளார்.

மேலும், '' திராவிட மொழிகளில் வந்து வழங்கும் சமஸ்கிருதச் சொற்களைப் பழந்திராவிட வேர்ச் சொற்களிலிருந்து வேறு பிரித்தறிவதில், பொதுவாக எவ்வித இடர்ப்பாடும் இல்லை'' என்று, குறிப்பிட்டுள்ளார். ''திராவிடமொழிகளைச் சமஸ்கிருதத்திலிருந்தே பிறந்தனவாகவே கொள்ளுதல் வேண்டும் என்றுகூறும் மொழிநூலார், திராவிட மொழிகளில் சமஸ்கிருதச் சொற்கள் எங்கோ அருகி இடம் பெறுவதல்லது, பொதுவாக, அறவே இடம் பெருதனவாய திருந்தாத திராவிட மொழிகள் இருப்பதை அறிந்தவரல்லர். சமஸ்கிருதச் சொற்களை மேறீகொள்ளும் திராவிட மொழிகள் தாமும், அச்



"நா...

சொற்களை ஆடம்பரப் பொருளாகவும், அழகுதரும் பொருளாகவும் மதிப்பதல்லாது மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாக மதிப்பதில்லை யாதலின், அவற்றை அறவே கைவிட்டும் வாழவல்லவையாம் என்பதையும் அவர்கள் அறிந்தவரல்லர். தெலுங்கும், கனனடமும், மலையாளமும் தம்தம் தனி நிலைகளை நிலைநாட்டுவது முற்றும் இயலாத அளவு, சமஸ்கிருதச் சொற்களை அளவிற்கு மீறிக் கடன் வாங்கியுள்ளன. அவற்றின் துணையை எதிர் நோக்கி எதிர்நோக்கிப் பழகிவிட்டன. அவற்றின் இயல்பு அதுவேயாயினும், திராவிட மொழிகள் அனைத்தினும், உயர்தனிச்செம் மொழியாக நிலைபெற்று விளங்கும் தமிழ், தன்னில் கலந்து இடம் பெற்றிருக்கும் சமஸ்கிருதச் சொற்களை அறவே ஒழித்துவிட்டு உயிர் வாழ்வதோடு, அவற்றின் துணையை ஒரு சிறிதும் வேண்டாமல், வளம்பெற்று வளர்வதும் இயலும்.'' இவ்வாறு தமிழின் தனித்தகுதியை விளக்கியுள்ளார் அப்பெரியார்.

செந்தமிழ் என்னும் சிறப்புப் பெயர் பெறுவதே, அது தனித்து வழங்குவதனாலேயே என்று கண்ட டாக்டர் கால்டுவெல் அவர்கள், ''ஒரு தமிழ்ச் செய்யுள், கவிதைச் சுவை மிகுந்து, இலக்கியம் என்னும் தகுதிக்குரியதாயுளது என்பது, பிற மொழி இலக்கியங்களில் காண்பதுபோல், அச்செய்யுளில் கலந்திருக்கும் சமஸ்கிருதச் சொற்களின் எண்ணிக்கை அளவைப் பொறுத்திராமல், அச் சமஸ்கிருத ஆட்சியிலிருந்து எந்த அளவு விடுதலை பெற்றிருக்கிறது, எந்த அளவு வடசொல் ஆட்சியை வெறுத்துளது என்பதையே பொறுத்திருக்கிறது. நகரத் தொடர்பற்ற நாட்டுப் புறங்களில் வாழும் கல்லா மக்கள் வழங்கும் பேச்சுத் தமிழ், சமஸ்கிருத ஆட்சியைக் கைவிடுவதில், செந்தமிழ் நடையோடு பெருமளவு ஒத்துளது என்றும் தெளிவுபடுத்தினர்.

மேலும், தமிழில் வழங்கும் சமஸ்கிருதச் சொற்களைக் குறித்து அவர் தரும் விளக்கம் இது.

'' சமஸ்கிருதத்திலிருந்து தமிழ் கடன் வாங்கியிருக்கும் சொற்கள் பெரும்பாலும் சமய உண்மைகள், அறிவியல் பொருள்கள், நுண்கலைகள் ஆகியவற்றை வெளியிடத் துணைபுரிவனவே ஆகும். பிறதுறை இலக்கியங்களைக் காட்டிலும், சமஸ்கிருதச் சொற்களை மிகுதியாகக் கையாளும் சமயக் கருத்துக்களை விளக்கும் உரைநடைநூல்களிலுமே, தமிழ்மொழியில் கலந்திருக்கும் வடசொல்



காக்க''

அளவு," இலத்தீன் மொழிச் சொற்களே ஆங்கிலமொழி மேற்கொண்டிருக்கும் அளவிலும் அதிகம் அன்று.

கிறிஸ்தவ சமயத்தலைவர் ஒருவர், ஆங்கில மொழி—இலத்தீன், மொழியினின்றும் பெற்றுள்ள துணையின் அளவுபற்றிக் கூறியிருப்பதை, தமிழ் மொழி பெற்றுள்ள வடமொழித் துணையளவிற்குக் கூறுவது பொருந்தும் என எடுத்துக் காட்டுவது இது. "ஒரு மொழியின் தோல், இரத்தம், இறைச்சி, எலும்பு இவற்றின் இணைப்பு என மதிககத்தக்கனவான வாக்கியங்களே, ஒழுங்கு செய்து ஒரு மொழியை உருவாக்க உதவுவனவாகிய இடப் பெயர்கள், துணை வினைகள் ஆகிய அனைத்தும் (தமிழே) திராவிடமே. ஒரு மாளிகையை அணிசெய்ய உதவும், மெருகேற்றிய வண்ணக் கற்கள் போலும் பொருள்களேயே சமஸ்கிருதம் அளித்திருக்கும். ஆனால், அவை அனைத்தும் ஆங்காங்கே அமைந்து கிடந்து அழகுசெய்ய உதவுவதும், அவை அனைத்தையும் ஒன்று சேர்த்து உருவாக்கப்பயன்படுவதும் ஆகிய சுண்ணும்புச் சாந்து முழுக முழுக்க திராவிடமே" என்பது முழு உண்மையாகும்.

அக்கூற்றை விளக்கி யுரைக்கும் டாக்டர் கால்டுவெல் அவர்கள் "ஆங்கிலம், இலத்தீனுக்குக் கடன் பட்டிருப்பதைப் போலவே தமிழும் சமஸ்கிருதத்திற்குக் கடன் பட்டிருப்பதாகக் கருதுவது அறவே (சிறிதும்) பொருந்தாது. —பொருள் விளக்கத்தைக் கைவிடாமல், இலத்தீன் சொற்களைக் கைவிடுவது ஆங்கிலத்திற்கு இயலாது. ஆனால் தமிழின் நிலை அத்தகையதன்று. சமஸ்கிருதச் சொற்களுக்கு இணையான தூய (தம்மொழிச்) சொற் செல்வங்களே அது அளவின்றிப் பெற்றுள்ளது. வடமொழிச் சொற்களே உண்மையான தேவை குறித்து மேற்கொள்ளாது, காலக் கோளாறு தழுவிய வெளிப்பகட்டு காரணமாகவே மேற்கொண்டுள்ளது" — என்று அறிவித்துள்ளார். மேலும், "புராணச் சார்பான சமயங்கள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றோடு, புகுத்தப்பட்டு பிராம்மண சமயங்களின் அளவிறந்த செல்வாக்கின் பயனாய், இன்றையத் தமிழ் உரைநடையில் கலந்திருக்கும் சமய விளக்கச் சொற்கள் பலவும், சமஸ்கிருத மூலச் சொற்களாகவே உள்ளன. அச்சொற்களுக்கு இணையாகவோ, அவற்றிலும் சிறப்பாகவோ, அக்கருத்துக்களே வெளியிட வல்ல தூய திராவிடச் சொற்களும் உள்ளன. என்றாலும், உரைநடைகளில், அவற்றின் ஆட்சி பழக்கத்தில் கையாளப்படாமையால் கடுந்தமிழ்நடை வாய்ந்து காது வெறுக்கும் கடின ஒலி உடையனவாகக் கருதுமளவு அச் சொற்கள் மெல்ல மெல்ல வழக்கிறந்து போய்விட்டன. தமிழ் மொழியின் சமய இலக்கியங்களில், சமஸ்கிருதச் சொற்கள் ஆட்சிபுரிவதன் உண்மைக் காரணம் இது ஒன்றே" இவ்வாறு வடமொழிச் சொற்கள் புகுந்த வழியையும், அதன் விளைவையும் விளக்கினார் அவர். மேலும் டாக்டர் கால்டுவெல் நிகழ்த்திய ஆராய்ச்சியில், தமிழைக் குறித்து வெளியிட்ட கருத்துக்களில் பல என்றும் நம் நினைவிற் கொள்ள வேண்டியவையாகும்.

"திராவிட மொழியின் தொன்மை நிலையை நிலை நாட்டப், பெருமளவில் பெறலாகும் துணையினைச் செந்தமிழே அளிக்கிறது. இது திராவிட மொழிகள் அனைத்தினும், அது நனி மிகப் பழங்காலத்திலேயே நாகரிக நிலை பெற்றுவிட்டதன் விளைவாகும்."

"தமிழ்மொழி பெற்றிருக்கும் எண்ணி மதிப்பிடற்கியலாச் சொற்செல்வங்களும், செந்தமிழின் பல்வேறு வகைப்பட்ட இலக்கண வடிவங்களும். அம் மொழிப் பழமையை நிலை நாட்டும் நல்ல சான்றுகள் ஆகும். செந்தமிழ் இலக்கணம், வழக்கிறந்து போன சொல்வடிவங்கள், கைவிடப்பட்ட சொல்லாக்க முறைகள், முரண்பட்ட மரூஉ முடிபுகள், ஆகிய இவை பழம்பெரும் மொழிக் கருவூலங்களின் காட்சிக் கூடமாகும்."

"யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அமெரிக்க கிறித்துவ சமயப்பணியாளர்(அக்காலத்திலேயே) வெளியிட்ட தமிழ்க் கையகராதி 58,500-க்குக் குறையாத சொற்களைக் கொண்டுள்ளது என்பது ஒன்றே, தமிழ் மொழியின் எண்ணிலாச் சொற் செல்வத்திற்குப் போதிய சான்றாகும். அவ்வகராதியைக் குறை விலா முழு நூலாக ஆக்க வேண்டின், 'அதில் அடங்கியுள்ள சொற்களோடு கலைச்சொற்களும், குழூஉச் சொற்களும், திசைச் சொற்களும், தொகைச் சொற்களுமாக ஆயிரமாயிரம் சொற்கள் மேலும் சேர்க்கப்படல் வேண்டும். தமிழ்ப்பேராசிரியர் ஒருவர் திராவிட இனப் பிற மொழி அகராதிகளை ஆராய்ந்துகாண நேர்ந்

தால், தமிழை நோக்க, அம் மொழிகள் பெற்றிருக்கும் ஒத்த சொல்லுருவங்களின் குறைபாடல்லது வேறு எதுவும் அவர் கருத்தில் பதியாது தமிழ் அகராதிகள் தமிழ் மொழிக்கே உரிமையானவும், தமிழிலேயே வழங்குவனவுமாகிய சொற்களேயல்லாமல், தெலுங்கு கன்னடம் போலும், பிற மொழிகளின் சொற்களெனவழங்கப்படும் சொற்களேயும் கொண்டுள்ளன. ஆகவே, தமிழ் இலக்கிய நாகரிகத்தின் தோற்றக் காலம், அவ்வினப் பிற மொழி இலக்கிய நாகரிகத்தின் தோற்றக் காலத்திற்கு மிக மிக முற்பட்டதாகுமென்றும், திராவிடத் தொன்மொழி, பல்வேறு மொழிகளாகப் பிரிவுண்ட காலத்திற்கு மிக அணித்தான காலத்தைச் சேர்ந்ததாகும் என்றும் முடிவு கட்டிக் கூறலாம்.''

''தமிழில் வந்து வழங்கும் வடமொழிச் சொற்களே மிகவும் உருமாற்றி வழங்குவது அத்தமிழின் தொன்மைக்குப் பிறிதொரு சான்றாகும்.''

''தமிழ் இலக்கிய நாகரிக வளர்ச்சியின் தொன்மை, தமிழ்க் கல்வெட்டுக்களாலும் நிலைநாட்டப்பெறும்— கருநாடகத்திலும், தெலிங்காணுவிலும் காணலாகும் பழைய கல்வெட்டு எதுவும், அதில் காணப்படும் எழுத்து வடிவம் எம்மொழி எழுத்துக்களேயாயினும், கன்னட மொழியிலோ தெலுங்கு மொழியிலோ எழுதப்பட்டிலது என்பதிலிருந்து தமிழ் இலக்கிய வளர்ச்சியின் முதுமையும் தனித்தியங்கும் உரிமையும் பெருமளவு ஐயமற நிலைநாட்டப்பெறும் என அறிக.

மேலும் பேராசிரியர் வில்சன் என்பார், வடமொழியின் மயக்கத்திற்கு ஆட்பட்டு ''தென்னிந்தியமொழிகள் சமஸ்கிருத மொழியைப் பார்த்துப் பின்பற்றி வளர்க்கப் பெறுகின்றன; திராவிட மொழிகளில் உள்ள தலையாய இலக்கியச் செல்வங்கள் அனைத்தும், ஒன்று வடமொழி மூல இலக்கியங்களின் மொழி பெயர்ப்பாகும். அல்லது அவற்றின் பொழிப்புரைகளாகும். அவை அம்மூல இலக்கியங்களின் சொற்



பூங்காவின் இருளில் பெண் ணொருத்தியைப் பலாத்காரம் செய்க ஆணைக் கைது செய்து, வெளிச்சத்திற்கு அழைத்து வந்தார் போலீஸ்காரர்.

வெளிச்சத்திற்கு வந்ததும் அந்த மனிசன் சொன்னான், ''ஐயா... இவன் என் மனைவி தான்''

''மன்னிக்க வேண்டும். நீங்கள் கணவன் மனைவி என்பது தெரியாமல் கைது செய்து விட்டேன்'' என்று போலீஸ்காரர் மன்னிப்புக் கேட்டார்.

''எனக்கும் வெளிச்சத்திற்கு வந்தபின்தான் என் மனைவி என்பது தெரியும்'' என்றான் கணவன்.

றொடர் அமைப்பு முறைகளேயும் அவ்வாறே கடன் வாங்கியுள்ளன'' என்று கூறியிருந்தார். அக் கருத்தை மறுத்து டாக்டர். கால்டுவெல் அவர்கள், தமிழைப் பொறுத்தவரையில் அவர் கூற்று முழுதும் பொருந்துவதன்று. தமிழ் மொழியின் தலையாய இலக்கியங்கள் என்று எல்லோராலும் ஒருசேர ஒப்புக் கொள்ளப்பட்ட திருக்குறளும், சிந்தாமணியும் அமைப்பிலும், உருவாக்கப்பட்ட முறையிலும், அறவே சமஸ்கிருதத் தொடர்பற்றனவாம்; முழுக்க முழுக்க முதல் நூல் தன்மை வாய்ந்தனவாம் என்று முடிபு கூறியுள்ளார்.

''தமிழ்ப்புலவர்கள் இராமாயண, பாரதங்களே-உள்ளது உள்ளவாறே மொழி பெயர்க்கவில்லே எனினும், வடமொழியாளர் போக்கைப் பின்பற்றியே இயற்றியுள்ளனர் என்பது உண்மையே. ஆயினும் தமிழர்கள் தங்கள் கம்பன் அக்கிய தமிழ் இராமாயணம், வால்மீகி இராமாயணத்தைக் காட்டிலும் நனிமிகச் சிறந்ததாம் என்றுபெருமை பாராட்டிக் கொள்ளவும் தவறுவதில்லே.''

இவ்வாறு, தமிழ் இலக்கியங்கள் மூல நூல் தன்மையும் தனிச் சிறப்புகளுங் கொண்டு தமிழுக்குப் பெருமை தருபவையே எனக் கால்டுவெல் விளக்கியுள்ளார்.

மேலும் — ஆரியத்தின் மீது திராவிட மூல மொழியும் அதன் இலக்கணக் கூறும் ஆட்சி பெற்றுள்ளது என்னும் உண்மையையும் அவர் புலப்படுத்தினர்: பேராசிரியர் பிளீக் என்பவர், ''பால்வேறுபாடு உணர்த்தும் பிறமொழிகளிலிருந்து, ஆரிய மொழிகள், பால் உணர்த்தா அஃறிணைச் சொற்களேப் பெற்றிருப்பதால்,

ஆரியமொழி தோற்றுதன போது, திராவிட மொழிச்

செல்வாக்கும் 'ஒரளவு ஆட்சி புரிந்தது என்பதும் ஒருவகையில் ஏற்புடைய தாம். வேறு சில இயல்பு களைப் போலவே, இவ்வம் றிணை ஒருமைப்பாடும் அவ் வாட்சியின் விளைவுகளில் ஒன்றாகும் என்று கூறினர். அதனை எடுத்துக்காட்டி டாக்டர் கால்டுவெல் அவர்கள், "பால் வேறுபாடு வேறு எம்மொழியிலும் இல்லாத அளவு, திராவிட மொழிகளிலேயே முறையா கவும், முழு அளவிலும் மேற் கொள்ளப் படுகிறது. இது, சமஸ்கிருத ஆட்சி யின் விளைவாக இருத்தல் இயலாது. மாறுகத் திரா விட ஆட்சியின் பயனாகவே, சமஸ்கிருதத்திலும் அது இடம் பெற்றிருக்கும்" என் றார். அதனைத் தொடர்ந்து,

"ஒரே நாட்டில் திராவிட இனமும், ஆரிய இனமும், பலநூற்றாண்டுகளாக, அடுத் தடுத்து வாழ்ந்திருந்தமை யால்' திராவிட மொழி (தமிழல்லாத பிற மொழி கள்) ஆரியச் சொற்களைப் பெருமளவு கடன் வாங்கி யுள்ளது. அதே நிலையில் திராவிடத்திலிருந்து கடன் வாங்க ஆரியமும் தயங்க வில்லை என்பதும் உணரற் பாலதாம்" என்று முடிவு கட்டிக் கூறியுள்ளார்.

இவ்வாறு தமிழ் மாட் சியை நிறுவிய கால்டுவெல் பெருந்தகையாளர்,

"இரண்டாயிரம் ஆண்டு களுக்கு மேற்பட்ட கால மாக, மிகப்பெரிய இனத் தவரும், ஆற்றலும் (சம யத்துறையால்) மதிக்கற் பாட்டிற்குய பிறரது வழி பாட்டிற்கும் உரியவரு மான ஆரிய மக்களின் சமஸ்கிருத மொழியையே எதிர்த்து நின்று, தம் தனி ஆட்சியை நிலைநாட்டி வந் துள்ள திராவிட மொழி கள், தம் இடத்தைப் பற்ற வரும் வேறு எம்மொழி முயற்சியையும், இனி வரும் காலங்களிலும் எதிர்த்து அழித்துவிடும்." என்று குறிப்பிட்டுள்ளார். இக் கூற்று எந்நாளும் நாம் மறக்கக் கூடாத பேருண் மையன்றோ!

"தமிழ் எம்மொழிக்குந் தாழ்ந்து வளையாது தலை நிமிர்ந்து நின்று, தன் தனித்தன்மை காத்து, தன்னை அணைத்து அழிக்க வந்த வடமொழியையும் வலுவிழக்கச் செய்து வாழ்ந்து வளர்கிறது!" என் னும் பேருண்மையை ஒப் பிலக்கண முறைப்படி ஆராய்ந்து உலகம் ஏற்கும் வண்ணம் நிலைநிறுத்திய டாக்டர் கால்டுவெல் அவர் கள் 'கன்னித் தமிழ்' மாட் சியை நமக்குக் காட்டிய வரன்றோ! அவரது தொண் டிலே பிறந்த ஒளி-தமிழைச் சூழ்ந்திருந்த அறியாமை இருளை அகற்றிய கதி ரன்றோ! வாழ்க கால்டுவெல் நினைவு! வளர்க கன்னித் தமிழ் மாட்சி!

மொழிச்சிக்கல்...

சறையும் காட்சி அன்றுடக் காட்சியாக உள்ளது! நாட் டின் தோற்றம், கலப்பட மாகிவிட்ட நிலை! புறத் தோற்றம் சரிகிறது. உள் தோற்றம் அழுகி விட்ட தன்மையில்! நாட்டின் உயிர்த்துடிப்பு, குறை கிறது. உள் துடிப்பு அடங்கி வரும் நிலை!

பல பிரச்சினைகள் காலத் தாலே மட்டுமே தீர்வு காண முடியும்! அதிலே ஒன்று மொழிப் பிரச்சினை!

பாராளுமன்றங்களிலே நிறைவேற்றப்படும் நீண்ட தீர்மானங்கள், அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் பெரு மண்ட பமாக மாறமுடியுமானால். அந்த மண்டபமும் பல் வேறு பட்ட தனித்தன்மை களைக் கொண்ட மானிட ஜாதியின் மாமன்றமாக இருக்க முடியுமா என்ற சந் தேகம் எழுந்து விடும்!

எண்ணிக்கை பலங்கள், சிலவற்றிற்கு பதில் கூற முடியும்; தக்க பதிலாக முழு மையாக இல்லா விட்டா லும்!

உணர்ச்சிப் பிழம்பாகி விடும் சில பிரச்சினைகள், எண்ணிக்கை பலங்கள் எது வும் செய்து விடுவதற் கில்லை.

இதயங்கள் இணைந்து இழைந்து, இறுதியில் காணும் விடை. நிரந்தர மான விடையாக இருக்கும்!

சட்டக் கூறுகள், சான் றுக்கு வரலாம்! விதிகளும், திருத்தங்களும் தாற்காலிக சாந்திக்குக் கதவைத் திறந்துவிடக் கூடும். ஆனால் அடுத்தடுத்து வரும் புதிய பார்வை பெற்ற சமுதாயத் தின் ஆவேசமான வருகை யால் அவைகள் உடைந்து தூளாகிவிடும்.

மொழியா—நாடா--இது கேள்வி! தங்களை நிலை நாட் டிக் கொள்ளும் கித்தாப் பா-அல்லது நிரந்தரமான அமைதியா—இது கேள்வி.

இந்தக் கேள்விக்கு டெல்லி தரும் தெளிவான பதிலில் இந்தியாவின் எதிர் காலம் தொங்கிக் கொண்டி ருக்கிறது.

தித்திக்கும் சாலேவாலே!

புலவர் பொன்னிவளவன்




பொங்கல்மலர் படிப்போமா? என்றுள்; பொங்கல்
பொங்கிவைத்த புதுமலரே! வாடி! என்றேன்.
செங்கரும்பைப் பல்லில்லாச் சிறுகு ழந்தை
சிரித்தபடி சுடிப்பதற்குப் பாடு பட்டான்
மங்கைஅதைப் பார்த்தபடி சிரித்துக் கொண்டே
மகிழ்ச்சியுடன் பக்கத்தில் வந்த மர்ந்தாள்!
''பொங்கலென்றுல் இதுபொங்கல்; அண்ணு ஆட்சிக்
புகழ்பாட வந்தமுதற் பொங்கல்!'' என்றுள்!

கரும்பினிப்பை வெல்லுகின்ற கருத்தி னிப்பும்
கருத்துதனே இனிப்பாக்கும் பேச்சி னிப்பும்
விரும்புவகை தருபவளே விரும்பி நோக்கி
வெல்லநிகர் முத்தம்நான் இட்டேன்; பெற்றேன்!
அரும்பைப்போல் நம்வீட்டில் நமது பிள்ளை;
அவன்வளர்ந்து பள்ளிக்குச் செல்லும் நாளில்
கரும்பெடுக்கும் இக்கையில் நாணல் தட்டை
கண்டிப்பாய் இருந்திடுமே அத்தான்! என்றுள்.

புரியாத பலவற்றை இரவில் கொஞ்சிப்
புரியவைக்கும் பூங்குயிலே! என்ன சொன்னுய்?
தெரியவில்லே! தெளிவாகச் சொல்நீ! என்றேன்
''தெரியாதா உங்களுக்கு? தெரியும் எல்லாம்!
நரிக்குணத்தார் இந்திஒரு நாணல் தட்டை!
நமதுதமிழ்த் தாய்மொழியோ கரும்பு! ஆட்சிக்
குரியமொழி இந்தி!என்றுர் கற்றுல் கிட்டும்
உயர்வென்ற நிலேஎழுப்பி விட்டார்!'' என்றுள்.

சாணிதனே வைஉருட்டி வெள்ளித் தட்டில்;
சந்தனமாய் ஆய்விடுமா? குட்ட ரோகி
மேனியிலே பட்டுடுத்திக் கொண்டால் தங்க
மேனியென அவன்மேனி ஆவ துண்டா?
மானினத்தின் மத்தியிலே நாயைக் கட்டி
வைத்திட்டால் மானுய்நாய் ஆவ துண்டா?
மீ மொழி என்று சொல்லி
விட்டதனுல் சிறந்திடுமா? இல்லே என்னே!



தென்னுட்டார் வீழிநெருப்பு பட்டால் போதும்
தீய்ந்துவிடும் ஆட்சிமொழிச் சட்டம்; இங்கே
முன்னேற்றக் கழகத்தார் ஒன்று சேர்ந்து
மூச்சுவிட்டால் தூசியைப்போல் பறக்கும் இந்தி!
மன்னுதி மன்னரெல்லாம் கல்சு மந்து
மண்டியிட்டான் தமிழனிடம்! மறந்தா போனேம்?
இன்னுயிராம் தமிழ்காக்க முனைவோம்; இந்தி
இடுப்பொடிக்க எந்நாளும் தயங்க மாட்டோம்!

கூந்தலுக்கு மலர்தேவை; சருகா தேவை!
குளிர்வயலில் நெல்தேவை; புல்லா தேவை?
ஏந்துபுகழ்ப் பேரறிஞர் அண்ணா ஆளும்
இனியதமிழ் நாட்டிற்குத் தமிழ்தான் தேவை!
வாந்திமொழி இந்திமொழி வேண்டாம்! ஆற்றல்
வாய்ந்தமொழி நமதுமொழி இதனைக் காக்கத்
தீய்ந்தானே சுடுநெருப்பில் சின்னச் சாமி
செயல்மறவர் பலர்! அதனை மறந்தா போனேம்?

என்றுரைத்தேன் அதைக்கேட்ட மங்கை நல்லாள்
"இந்திமொழித் திணிப்பென்னும் கசப்புச் சேதி
என்றென்றும் தொடர்கதையாய் வளர்ந்தி டாமல்
இரண்டிலொன்று பார்த்தாக வேண்டும்!" என்றாள்.
"கன்றீன்ற தாய்ப்பசுநீ கலங்கி டாதே!
காளைஎன் காலத்தில் 'இந்தி நாயே!
சென்றுவிடு!' என்றுவிடை கொடுப்போம்! இன்பச்
செந்தமிழை வளர்த்திடுவோம்!" என்று சொன்னேன்!

செங்குமுத வாய்திறந்து மின்னல் தன்னைச்
சிரிப்பாக்கி இதழ்களிலே நெளிய வைத்தாள்!
"பொங்கலிலே பொங்கிஎழு கின்றீர் இன்றே
புறப்படுங்கள் போராட!" என்றாள் மங்கை!
மங்காத மனவிளக்கே! அறிஞர் அண்ணா
மணிமொழியை முரசொலியை ஆன தன்னை
எங்கெங்கும் தமிழ்மறவர் எதிர்பார்க் கின்றோம்!
இந்திக்குச் சாவோலை விரைவில்!" என்றேன்!

இருக்கும் ஒருதட்டு சோற்றுக்கு
எட்டு வயிற்றை உண்டாக்கிடுவதோ ?



குடும்பக் கட்டுப்பாடு செய்திடுவீர்!

திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத குடும்பம். சுகாதாரச் செழிப்பு பெற்றுச் சுகமாக வாழவும், அனைவரும் உணவு உடை உறையுள் வசதிகள் பெறவும், குடும்பத்துக்கு ஓர் இரு குழந்தைகள் இருப்பதே நல்லது.



பிள்ளைச் செல்வம்-
அளவோடு உள்ளபோது!
பிள்ளைப்பூச்சி தொல்லையே
எல்லை மீறினால்!

—தமிழக அரசு



பொங்கல்
வாழ்த்துக்கள்!

*

சிறந்த பட்டாடைகளுக்கு

கற்பகம் சில்க்ஸ்

177, காந்திரோடு • காஞ்சிபுரம்.



இந்திய

உலக வர்த்தகத் தொழில் பொருட்காட்சி 1968.

ஷெனாய் நகர் அருகில். சென்னை 30

★

ஜனவரி 21 - பிப்ரவரி 25

இந்திய உப ஜனாதிபதி டாக்டர் வி. வி. கிரி அவர்கள் 1968 ஜனவரி 21 (ஞாயிறு) மாலை 6-15 மணிக்கு துவக்கி வைப்பார்கள்.

தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

தமிழ்நாடு தொழில் அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் கேட்டுக்கொள்ள சென்னை கவர்னர் ஸர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் உலகப் பொருட்காட்சி கூடகோபுரத்தை திறந்து வைப்பார்கள்.

ஆசியாவிலேயே மிகப்பெரிய இப்பொருட்காட்சியை அகில இந்திய உற்பத்தியாளர்கள் ஸ்தாபனம் இந்திய சென்னை அரசாங்கங்களின் ஆதரவுடனும் உதவியுடனும் ஏற்பாடு செய்துள்ளது.

அனைவருக்குப் எமது

மெஸர்ஸ். கீவ்ராஜ் மோட்

123, மவுண்ட்

பெட்போர்டு டிரக்குகள் மற்றும் ஹிந்துஸ்தான்

பொங்கல் நல் வாழ்த்துக்கள்

★

டார்ஸ் ப்ரைவேட் லிமிடெட்

ரோடு, சென்னை-6.

★

அம்பாசடர்-கார்களுக்கு விற்பனையாளர்கள்

இந்தியன் பாங்கு அதன் வாடிக்கையாளர், நலம் விரும்புவோர் அனைவருக்கும் குதூகல மான பொங்கல் வாழ்த்து...சிறந்த இன்பமும் நிறைந்த பலனும் பெற வாழ்த்துகின்றது.

நிறைந்த பலன்

உறுதி நன்கு தொனிக்கும் பதங்கள் நிறைவையும் திருப்தியையும் குறிக்கும் பதங்கள். விவசாயிக்கு பலன் என்பதற்கு பொருள் அதிகம். இவ்வாண்டுக்கு மட்டுமின்றி அடுத்த ஆண்டு விதைக்கும் சேர்த்து விளைச்சல் கிடைப்பதைக் குறிக்கும்

பண முதலீட்டும் பலன் கிடைப்பதும் இம்மாதிரியே

உங்கள் சம்பாதியத்தில் ஒரு பகுதியை முதலீடு செய்கிறீர்கள். உங்கள் முதலீடு படிப் படியாக விருத்தியடைந்த நிலையில் நீங்கள் கட்டிய பணத்திற்கு அதிகமாக தொகை கிடைக்கின்றது. இந்த பலனை அப்படியே மீண்டும் முதலீடு செய்வதே உசிதம். நாளடை வில் உங்கள் பணம் பன்மடங்கு பெருகுவது உறுதி.

1907ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் தொடங்கிய இந்தியன் பாங்கு லேவா தேவித் தொழிலில் மிகுந்த விழிப்புடன் ஈடுபட்டு ஸ்திரமாக முன்னேற்றமடைந்து, பாங்கு சேவை யில் நம்பிக்கை வைத்த அனைவருக்கும் ஸ்திரமான பரிபூரண பாதுகாப்பு வழங்கி வருகின்றது. பாதை தெரிந்து முன்னேறும் பாங்கு இது.



தி இந்தியன் பாங்க் லிமிடெட் சென்னை-1

டாக்டர் ராஜாஸர் முத்தைய செட்டியார் (செட்டிநாடு)
Kt. B.A.,D. Litt. M.L.C.
சேர்மன்

L. பாலசந்திரன்,
காரியதரிசி



ELEGANT

புதுப் பொங்கல் வாழ்க!



வானமுதம் பொங்குவதால் வயலெல்லாம் சிரிக்கும்
வயற்பயிர்கள் பொங்குவதால் வயிறெல்லாம் சிரிக்கும்
தேனிலவு பொங்குவதால் அல்லியெலாம் சிரிக்கும்!
தினைக்காடு பொங்குவதால் கிளியெல்லாம் சிரிக்கும்
மானமுள்ள தமிழர்நெஞ்சம் பொங்கியதால் நல்ல
வளமார்ந்த பொன்னாட்சி மலர்ந்ததம்மா! இங்கே
கூனலுற்ற ஏழைகளும் எளியவரும் சிரித்தார்!
கொண்டாடு வோம் தோழி! இப்பொங்கல் வாழ்க!

எங்கெங்கும் தமிழ் மணக்க வந்ததிந்தப் பொங்கல்!
எழில் உலகத் தமிழறிஞர் தலைகளில் கூடிச்
'சங்க'த்தை நினைவூட்ட வந்ததிந்தப் பொங்கல்!
தன்னிறைவை உணவினிலே பெற்றதனால் வறுமை
'நிங்கில்லை; இனியில்லை' எனச் சொன்ன பொங்கல்!
ஏழைசட்குப் 'படியரசி' அளந்ததனால் அன்னோர்
பொங்குகின்ற பூரிப்பால் வாழ்த்துகின்ற பொங்கல்!
பொன்னாட்சி கொண்டுவந்த புதுப்பொங்கல் வாழ்க!

புன்செய்நில வரிநீக்கி உழவர்களின் முகத்தில்
புன்னகையைக் கொண்டுவந்த புதுப்பொங்கல் வாழ்க!
தன்மானத் தொழிலாளர் 'மே முதல்நாள்' அன்று
தாம்மகிழ விடுமுறையைத் தந்ததிந்தப் பொங்கல்!
இன்றேடும் உந்து வண்டிக் கட்டணத்தைக் குறைத்தே
எளியவரின் சுமைதன்னைக் குறைத்ததிந்தப் பொங்கல்!
குன்றிவிட்ட விளக்கைப் போல் மாநிலங்கள் தம்முள்
சோணுத நல்லாட்சி தந்தபொங்கல் வாழ்க!

பஞ்சவராம் ஐவருக்கே தனைப்பகிர்ந்த மங்கை
பாஞ்சாலி துரோபதைக்கே விழாஎன்ற நிலைபோய்!
வஞ்சி மன்னன் வழிபட்ட கண்ணகிக்குச் சிலையை
வைக்கின்ற தமிழாட்சி வந்ததிங்கே தோழி!
கொஞ்சுமொழி தமிழிருக்கக் கோழிநடைத் தடம்போல்
கொண்டதொரு எழுத்தமைந்த இந்தி மொழிதன்னை
மஞ்சத்தில் ஏற்றவந்த தரகர்களை விரட்டி
மரணஅடி சொடுக்கவந்த இப்பொங்கல் வாழ்க!


கவிஞர் காவேழிவேந்தன்

வீட்டு வாயிற்படியில் நின்று பார்த்தேன். முன் புறத்தில் தோட்டம் மிக அழகாக இருந்தது. பங்களா என்று பெயராளவும் சிறிய வீடு - சுற்றிலும் பெரிய அழகிய தோட்டம்-என்றவிதத்தில்தான் என் கனவுமாளிகை அமைந்திருந்தது.

ஒழுங்காகக் கத்திரித்து விடப்பட்ட அழகிய செடிகள் மான் துள்ளுவது போலவும், மயில் தோகை விரித்தாடுவது போலவும், யானை நிற்பது போலவும் சவுக்குச் செடிகள் வடிவு தெரிய உரு வாக்கப்பட்டிருக்கின்றன. பத்தி பத்தி யாய்ப் பாத்தி பாத்தியாய்ப் பல நிறப் பூக்கள்; அவ்வளவும் மணமற்றவை. மணமில்லாதவையானால் என்ன? பார்ப் பதற்கு அழகாயிருக்கின்றனவே. அது போதாதா? பார்ப்பதற்கு அழகாயிருக் கின்ற நிலையே பெரிய தகுதி அல்லவா? பார்ப்பதற்கு அழகாயிருந்தால் வேறு எது இல்லாவிட்டாலும் மன்னிக்க வேண்டியதுதானே?


நாளைக்கு விடிந்தால் என்னுடைய இந்தச் சிறந்த பூந்தோட்டம் பரிசு வாங்கப் போகிறது. யாரிடம் பரிசு வாங்கப் போகிறதென்று கேட்கிறீர்கள்? எதற்காகப் பரிசு வாங்கப்போகிறது? என்ன பரிசு வாங்கப் போகிறது? என் பன போன்ற சந்தேகங்கள் உங்களுக்கு உண்டாகலாம். நகரத்திலுள்ள பங்க ளாக்களின் தோட்டங்களில் மிகச் சிறந்த தாக எது வளர்க்கப் பட்டிருக்கிறதோ அதை அந்த வருடத்தின் சிறந்த பூந் தோட்டம் என்று தேர்ந்தெடுத்து மாநக ராட்சியினர் பரிசு கொடுக்கிறார்கள்.

கார்ப்பரேஷன்காரர்கள் இதெல் லாம் கூடச் செய்கிறார்களா?—என்று சந்தேகம் வேண்டாம். நகரத்தின் அழகை அதிகமாக்குபவர்களை உற்சாகப் படுத்தவேண்டாமா? அதற்காகத்தான் இப்படியெல்லாம் பரிசு கொடுக்கிறார்கள்.



பரிசு

நா.பார்த்தசாரதி



'பங்களாக்களும், பசும்பூங் காக்களும், விண்ணே தொட நிமிர்ந்து நிற்கும் சிமிண்டுச் செழிப்புக்களும்தான் நகரத் திற்கு அழகா?' — என்று இடக்காகக் கேட்காதீர்கள். ஓட்டைக் குடிசைகளிலும், சாக்கடை புகுந்து ஓடும் சேரிகளிலும், பரிசு கொடுக்க என்ன இருக்கிறதாம்?

'ப்யூட்டி' வேணும் சார்; ப்யூட்டீ! இந்த 'ஸென்ஸ் ஆஃப் ப்யூட்டி' (அழகு உணர்ச்சி) இருக்கிறதே, அது தமிழனுக்குச் சுத்தமா இல்லே சார்! பார்ப்பதற்கு அழகாயில்லாவிட்டால் வேறு எது இருந்தாலும் மன்னிக்கக் கூடாதுதானே?

நாளைக் காலையில் சரியாக ஏழு மணிக்குக் கார்ப்பரேஷ னுல் நியமிக்கப்பட்டிருக்கும் நீதிபதிகள் தோட்டத்தைப் பார்க்க வந்துவிடுவார்கள். எல்லாப் பங்களாக்களின் தோட்டங்களையும் பார்த்து எதற்குப் பரிசு கொடுக்க லாம் என்பதைத் தீர்மானம் செய்வதற்கு ஒவ்வொரு வருடமும் கார்ப்பரேஷன் சில பெரிய மனிதர்களை நீதி பதிகளாக நியமிக்கிறது. அப்படி நியமிக்கப்பட்ட நீதி பதிகள்தான் நாளைக் காலை விடிந்ததும் இங்கேயும் வரப் போகிறார்கள்! 'வந்துதான் பார்க்கட்டுமே! வந்து பார்த் ததுமே மூக்கில் விரலை வைத்து வியக்கப் போகிறார் கள். சாதாரணமாகவா நான் வைத்திருக்கிறேன், இந்தத் தோட்டத்தை? மூன்று மாதக் காலமாக இடைவிடாமல் முயன்று அப்படியே பிருந்தாவன மாக அல்லவா மாற்றி வைத்திருக்கிறேன். தோட்டக்காரப் பய்யப் பய்ன ஒரு விநாடி சும்மா நிற்கவிட்டிருப்பேனு? பம் பரமாகச் சுழற்றியல்லவா அவனை வேலை வாங்கியிருக் கிறேன்! இந்த மாதிரி அவனை வேலை வாங்கி யிரா விட்டால் அதோ அந்த ரோஜாப் பாத்தியில் அவ் வளவு பூக்கள் அத்தனைவித மான நிறங்களோடு பூத் திருக்க முடியுமா? கேந்தி, பிச்சி, மல்லிகை, சூரிய காந்தி எல்லாம் எவ்வளவு அருமையாகப் பூத்திருக் கின்றன? அந்த 'டேலி யாப்' பூக்கள்தான் எவ்

வளவு பெரிது பெரிதாகப் பூத்திருக்கின்றன!

நீதிபதிகள் இதைப் பார்த்த உடனேயே இந்தத் தோட்டத்திற்குத்தான் முதற்பரிசு என்று உறுதியாக நினைத்துக் கொள்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? பார்க்கலாம்! நாளைக்கு விடிந்தால் தானே தெரிந்து விடுகிறது. அப்பப்பா! விடிவதற்கு இன்னும் பன்னிரண்டு மணி நேரம் இருந்து தொலைக்கிறதே? நாளைக்கு மட்டுமாவது சற்று விரைவாகவே பொழுது விடிந்துவிடக் கூடாதோ? நாளைக்கு மாலையில் கார்ப்பொரேஷன் மைதானத்தில் நடைபெற விருக்கும் பரிசளிப்பு விழாவில், "திருவாளர் சுகவனம், ஐ. ஏ. எஸ். அவர்களின் தோட்டம் முதற்பரிசு பெறுகிறது" என்று எட்டுத்திக்கும் ஒலி பெருக்கியில் முழங்கப் போகிற என் பெயரின் வெற்றி முழக்கத்தை இப்போதே கேட்டுவிட வேண்டும் போல் செவிகள் ஆசையால் துடிக்கின்றனவே! செவிகளே, பொறுத்திருங்கள்! நாளை மாலை வரை தயவு செய்து பொறுத்திருங்கள்!

பரிசு கிடைத்தால் இந்தப் பயல் பன்னியப்பனுக்கும் ஏதாவது செய்யவேண்டும். கொஞ்சங்கூட அயராமல் உழைத்துத் தோட்டத்தை உருவாக்கியிருக்கிறான். ஒரு சோடி புது வேட்டியும் பொங்கல் செலவுக்குப் பத்துப் பதினைந்து ரூபாய் பணமும் கொடுத்துவிட வேண்டியதுதான். தோட்டக்காரனுடைய ஒத்துழைப்பு இல்லாவிட்டால் இதை இப்படிப் பரிசுக்குத் தயாராக்கியிருக்க முடியுமா? அவனுக்கும் கொஞ்சம் நன்றி செலுத்த வேண்டியதுதான். ஆள் மாடாக உழைத்திருக்கிறான்.

முடிவு வெளியானதும், "என்ன சுகவனம், இந்த வருடம் உன்னுடைய "கார்டன்" "பிரைஸ்" வாங்கியிருக்கிறதாமே?" — என்று நண்பர்களெல்லாம் அன்புடன் விசாரிக்கப் போவதைக் கற்பனை செய்கிறேன். இப்படிக் கற்பனை செய்வது மனதுக்கு எவ்வளவு சுகமாக இருக்கிறது! கார்ப்பரேஷன் கமிஷனரோ, சேர்மனோ. பரிசு வழங்கும்போது அதை நான் மேடையேறி வாங்குகிற காட்சியை உள்ளூர்ப் பத்திரிக்கைக் காரர்கள் புகைப்படம் எடுப்பார்கள், மறுநாள் காலையில் பத்திரிகைகளில் அந்தப்படம் முதல்பக்கத்தில் பிரமாதமாக வெளிவரும். அடடா! புகழையும் வெற்றிப் பிரதாபத்தையும் கற்பனை செய்வது கொட்டையேயில்லாத பழத்தைச் சுவைத்துச் சாறு உறிஞ்சுவதுபோல் பரம சுகமாக இருக்கிறதே! பொழுது விடியட்டும் பார்க்கலாம்!

ஒரு வழியாகப் பொழுது விடிகிறது. தோட்டத்தைப் பார்க்க நீதிபதிகள் காரில் புறப்பட்டு வந்து கொண்டிருப்பதாக டெலிபோனில் தகவல் வருகிறது. நான் அவசர அவசரமாகத் தயாரானேன். நீதிபதிகளை வரவேற்றுத் தோட்டத்தைச் சுற்றிக் காட்ட வேண்டாமா? தோட்டத்தைச் சுற்றிக் காட்டுகிற முறையிலும் ஒவ்வொன்றையும் பற்றி நான் விவரித்துக் கூறுகிற சாமர்த்தியத்திலுமே அவர்கள் மங்கிப் போக வேண்டுமே!

என்னைத் தயார் செய்து கொண்டு நீதிபதிகளை வரவேற்க வாசலுக்கு வருகிறேன்.

இதென்ன? ஐயையே! பின்புறம் புல்வெளியில் "மூசு மூசு" என்று மூச்சு இரைக்கும் விகாரமான ஒலி. திரும்பிப் பார்க்கிறேன். அடடா! இதென்ன அசிங்கம்? இன்றைக்குப் பார்த்தா பன்னியப்பனுக்கு இது வரவேண்டும்? நீதிபதிகள் வருகிற நேரத்தில் ரோஜாப் பாத்திகளுக்கு அருகில் மல்லாந்து விழுந்து கைகளையும், கால்களையும் வலித்து உதைத்துக் கொண்டு கிடந்தான் பன்னியப்பன். வாயில் இதழோரங்களில் நுரை தளளிக் கொண்டிருந்தது. அவனுக்கு இந்த அசிங்கமான வலிப்பு நோய் உண்டு என்பது எனக்குத் தெரியும். எப்போதாவது இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தோட்டத்திலோ அதன் ஒரு மூலையிலிருக்கும் தன் குடிசையிலோ இந்த அவஸ்தைக் கோலத்தில் அவனைப் பார்ப்பேன் நான். ஆனால் இது சாதாரண வழக்கமாக இருந்தது. இந்தக் கோலத்தில் பார்த்ததும் ஒரு பெரிய இரும்புச் சாவியை வேலைக்காரனிடம் விட்டு அவன் கையில் திணிக்கச் சொல்வேன். இதுதான் மாமூல் வைத்தியம். சிறிது நேரத்தில் தெளிந்து எழுந்து மறுபடியும் வேலை செய்ய ஆரம்பித்து விடுவான் அவன்.

இன்றும் அப்படிச் செய்ய நினைத்து வேலைக்காரனைக் கூப்பிட்டேன். ஆனால் வேலைக்காரன் வந்து நிற்பதற்கும், வாயிலில் நீதிபதிகளின் கார் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. சமாளிக்க நேரமே இல்லை.

"சே! இதென்ன அசிங்கம் இவர்கள் கண்ணில் இந்த ஆபாசம் படக் கூடாது" என்று என் மனம் நினைத்தது. வேலைக்காரனிடம் ஏதோ சொல்ல நினைத்தவன் வாயிலில் காரைப் பார்த்ததும் அபிப்ராயத்தை மாற்றிக் கொண்டு "நான் சிறிது நேரம் அவர்களை வாசலிலேயே வரவேற்றுப் பேசிச் சமாளிக்கிறேன். அதற்குள் நீயும், கூர்க்காவுமாக இவனை மெல்லக் கிளப்பி அதன் மூலையில் மனோரஞ்சிதப் புதருக்குப் பின்னால் போட்டு விடுங்கள். மற்றதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்" என்று வேலைக்காரனுக்கு ஆணையிட்டுவிட்டு நீதிபதிகளை வரவேற்க விரைந்தேன். வேலைக்காரன் அப்படியே செய்து விடுவதாகத் தலையாட்டினான். அவன் அப்படியே செய்தும் விட்டான். அவன் அப்படிச் செய்து விட்டது எனக்கு எப்படித் தெரிந்தது என்றால் நான் நீதிபதிகளை அழைத்துச் சுற்றிக் காட்டிக் கொண்டே ரோஜாப் பாத்திகளுக்கு அருகே வந்தபோது அங்கே தோட்டக்காரன் வலித்துக் கொண்டு கிடக்கவில்லை. பூக்கள் தாம் சிரித்துக் கொண்டிருந்தன. புற்கள் தாம் பசுமை காட்டிக் கொண்டிருந்தன.

எல்லாம் பார்த்தாயிற்று. நீதிபதிகளுக்குப் பரம திருப்தி. எல்லாம் சுற்றிக் காட்டிவிட்டுக் கார் வரை போய் அவர்களை வழியனுப்பினேன். போய் ஒரு மணி நேரத்தில் டெலிபோனில் முடிவு சொல்வதாகக் கூறிச் சென்றார்கள். முடிவுதான் எனக்குத் தெரியுமே! என்னைத் தவிர வேறு எவன் பரிசு வாங்க முடியும்?

ஒரு மணி நேரத்தில் டெலிபோன் வந்தது. எங்கள் தோட்டத்துக்குத்தான் முதற் பரிசு! என்று என் செவிக்கு இனிமையான குரலாக ஒலித்தது முடிவு. எனக்கு உடனே பணியப் பனின் நினைவு பாய்ந்து வந்தது. அவன் கையில் ஒரு வான அழகுத் தோட்டமல்லவா இது? வேலைக்காரனைக் கூப்பிட்டுக் கேட்டேன்.

"பணியப்பன் எங்கேடா?"

"இதோ பார்த்துக் கொண்டு வருகிறேனுங்க" என்று கூறிவிட்டு ஓடினான் அவன்.

சிறிது நேரங்கழித்து அவன் திரும்பி வந்து தலை குனிந்து நின்றான்.

"என்னடா? பணியப்பன் எங்கே?"

"வாங்க காட்டுறேன்" நான் அவனைப் பின் தொடர்ந்தேன்.

மனோரஞ்சிதப் புதரருகில் அவன் உடம்பு நீலம் பாரித்துக் கிடந்தது.

"என்னடாது?"

"இந்தப் புதர்லே நிறைய நல்ல பாம்பு உண்டுங்க."

"அட பாவி."

"நாங்க என்ன செய்யிறதுங்க. நீங்க போடச் சொன்னீங்க. கொண்டு வந்து போட்டோம்."

"கையிலே சாவியைக் கொடுத்துப் போடலியாடா?"

"நீங்க அப்படிச் சொல்லலீங்க..."

"நான் சொல்லணுமா அதை?"

அன்று மாலை திருவாளர் சுகவனம் ஐ. ஏ. எஸ். அவர்கள் தமது அழகிய தோட்டத்துக்கு முதல் பரிசு வாங்கிக் கொண்டிருந்த நேரத்தில் தோட்டக்காரப் பணியப்பன் சுடலையில் எரிந்து கொண்டிருந்தான். அதற்கென்ன செய்வது? பார்ப்பதற்கு அழகாயில்லாவிட்டால் வேறு எது இருந்தாலும் மன்னிக்கக் கூடாதுதானே?



ஐயய்யோ; பாவாடை அணிய மறந்து விட்டாயா?-நான் எதோ புது 'டேஷன்' னுல நினைச்சேன்.

எத்தனையோ யுகங்கள் பூத்து உதிர்ந்திருக்க வேண்டும்.

இல்லாவிட்டால் இப்படி ஓர் இறுக்கமா?

ஆழ்ந்த புதை இருட்டுக்குள் அமைதியாய்க் கிடந்த உயிரை, யாரோ கூசுகிற வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து, வலிக்க வலிக்கப் பிசைந்து விடுகிறார்கள். மறைந்து பதுங்கி இருந்த அவஸ்தைகள், புயலுக்குரிய காற்றாய் இரைகின்றன. நினைவின் கதவுகளை மூடி விட்டிருந்த இமைகள் இழை பிரியத் துடிக்கின்றன.

இதழ் விரிவது போல ஜம்புவின் இமைகள் பிரிகின்றன. யுக யுகாந்தரமாய் ஓய்ந்து கிடந்த நினைவுகள், துளித்துளியாய்ப் பெருகி வெள்ளமாய்ப் புரள்கின்ற சிலிர்ப்பு. தொடர்ந்து தொல்லை கொடுக்கும் வேதனை.

'நான் எங்கிருக்கிறேன்?

நினைக்கத் தூண்டுகிற நெஞ்சம், புரிந்துகொள்கிற துடிப்பு.

பெய்து களைத்த மழையைப் போல அவர் பார்வை சோர்வாய் நீந்துகிறது.



சலவைக் கல் பதித்த அறை. அறைக்கு வெளியே கந்தல் துணியைப் போலக் கிழிந்த வானம். அதிலே இந்தி வெறியர்களைப் போலக் குழப்பம் விளைவிக்கும் மேகங்கள். லட்சியவாதியைப் போலத் தொலை தூரத்தில் புள்ளியாய்ப் பறக்கும் ஏதோ ஒருபறவை.

ஜம்புவின் கண்களில் தூசியாய் உறுத்துகிற வேதனை. நினைவின் விழிப்பைப் பொத்துகிற மாதிரி உணர்ச்சியை மறைக்கிற இருள்.

'இருளாய் இருந்தது போதாதா? இன்னுமா இருள்?'

போராடுகிற ஆவேச உணர்ச்சி. நினைவே மீட்டு வருகிற கிளர்ச்சி.

புலரும் நினைவின் கருக்கிருட்டில் எத்தனையோ கலவரங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கலவரத்துக்கும் உரிய மூல காரணத்தை, ஒரு புத்தகத்தைப் போல எதிரே பிரித்து வைத்துக்கொண்டு படிக்கத் துடிக்கிறது அவர் மனம்.

'இதற்குப் போய் எதைப் படித்துப்பார்க்க வேண்டும்? இப்போதைய இந்த ஒரு கணத்தில், நூறில் ஒரு துளியாய் என்னையே நான் படித்துப் பார்த்துக் கொண்டால் போதும். அனைத்துக்கும் காரணம் நான்தான்!'

கண்ணைத் திறந்து, அதே சமயத்தில் தன்னையும் திறந்து கொண்டு பார்க்கும் போது —

அந்த அறையின் மையத்தில் ஒரு கட்டில். அதில் கால் கொள்ளாமல் கட்டுக் கழுடன் அவர்.





'தமிழுக்கு ஆபத்து வருகிறது' எனறு அறிகின்ற போது — ஆபத்து வருமோ என்று ஐயம் தோன்றும் போது — ஆபத்து வரக் கூடுமோ என்ற சந்தேகம் வரும் போது தமிழர்கள் ஆர்த்தெழுகிறார்கள.

"இந்தி எதிர்ப்புக்குப் பிறகுதான் தமிழார்வம் பெருகிப் புதுப்புதுக் கவிஞர்கள்—புலவர்கள்—புதுப் புது பொருளை ஆராய்ந்து வெளியிடுகிறார்கள். நல்ல உரைநடையாசிரியர்கள் — மொழி பெயர்ப்பாளர்கள் — பேச்சாளர்கள் தொகை ஓங்கி வளர்ந்தது: ஓங்கி வளர்ந்தபடி இருக்கிறது.

.எதற்கும் ஆபத்து என்றால்தான் அதற்குப் பாதுகாப்பும் – பாதுகாக்கும் உணர்ச்சியும் தோன்றுகிறது!

இன்றையதினம் தமிழுக்குக் காவலர் தேவை! காத்து நிற்பவர்கள் தேவை!

"தமிழார்வம் வளர்கிற நேரத்தில் அதற்குச் சுவையும் பயனும் ஊட்டி அதை வழிகாட்டி அழைத்துச் செல்ல வேண்டும் தமிழ்ப் புலவர்கள்! அத்தகைய வழிகாட்டிடும் திறன் மிக்கவர்கள் பலர் உண்டு எனபதை ஒப்புக் கொள்கிறேன்! ஆனால் எங்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதை புலவர்கள் தெரிந்து கொள்வது நல்லது!"

உலகத் தமிழ் மாநாட்டில்
முதலமைச்சர்
பேரறிஞர் அண்ணா

'எனக்கு ஏன் இத்தனை கட்டுகள்? எத்தனை நாட்களாய் இந்தப் படுக்கையில் கட்டுண்டு கிடக்கிறேன்?'

யாருக்குப் புரிகிறது?

இது புரியா விட்டாலும் இன்னொன்று புரிகிறது ஜம்புவுக்கு.

அன்று அவர்தான் காரைச் செலுத்தினர்.

ஏதோ ஓர் அவசரம். அவசரத்தையும் மீறும் ஒரு பரபரப்பு.

எப்பொழுதோ வரப் போகிற புயலாகப் பறந்து கொண்டிருந்தது அவர் செலுத்திய கார்.

புழுங்கும் மழை இருட்டு. இந்திய அரசின் மொழிக் கொள்கையைப் போல வளைந்த முடுக்குச் சாலை. புழுக்கம் அழுகையாகி விட்ட மழைத் தூற்றல். பட்டை தீட்டிப் பொறிகிற மின்னல். பட்டாக் கத்தியைச் சுற்றுகிற இடி.

லட்சியம் செய்யவில்லை ஜம்பு.

கார், மழையைப்பிளக்கும் அம்பாகப் பறந்து கொண்டிருந்தது.

அவருடைய இந்த ஐம்பத்தைந்து வருடத்திய வாழ்க்கையில் அவர் எதைத்தான் லட்சியம் செய்திருக்கிறார்? அவருடைய வாழ்க்கையில் ஒரேயொரு நீண்ட அத்தியாயமேஉண்டு. அந்த அத்தியாயத்தின் நடுவே கரை புரளும் காட்டாறாக நுழைத்துச் சிலிர்க்கிறதே, அதுதான் அவர் உள்ளம்.

ஓடுகிற வெள்ளத்துக்கு நின்று நிதானித்து, இனிய அனுபவங்களைச் சந்திக்கவும் சிந்திக்கவும் ஏது நேரம்? ஓட்டத்தை நிறுத்தி, ஒரு பனித் துளியாய்த் திரண்டு புல்லின் நுனியைத் தீண்டுகிற இன்பத்தையும், வெயில் பட்டதும் உடைந்து சிதறும் பனித் துளியின் உள்ளக் குமுறலையும் என்றுவது சந்தித்தது உண்டா அந்த வெள்ளம்?

ஜம்பு அந்த வெள்ளத்தை விட வேறென்ன?

ஆவேசக்கனல் பொரிந்த அவர் வாழ்க்கையில்,விட்டுப் பிரிந்தவை எத்தனையோ என்றாலும், தொட்டுத் தொடர்ந்த பெருமைக்குரிய சாதனைகளும் எத்தனையோ உண்டு. வியாபாரம், பணம், பெரிய மனிதத்தனம், புகழ் என்று எத்தனையோ இல்லையா? அத்தனையும் அவரிடம் நன்றிக்குரிய நாயாகப் பணிந்து வாலைக் குழைத்தன.

மழை, பேய் பிடித்துக் கூச்சலிட்டது.

காரைச் செலுத்திக் கொண்டிருந்த ஜம்புவுக்கு, கண்ணுடிக்குவெளியே சாலை தெரியவில்லை. காரை அடக்கிச் செலுத்துகிற நிதானம், அவருடைய பரபரப்புக்கு இல்லை.

காரின் வேகம் ஐம்பதா, அறுபதா, எழுபதா?

புரியவில்லை. பிறகு புரிவதற்குக் கிடைத்த நேரமும் நீண்டதாக இல்லை.

மழையா?மரமா?மலையா?

எல்லாமே ஒன்றுகிவிட்ட சேற்றுக் குழப்பம். நினைவை மழுக்கிக் குலைத்து விடுகிற விசுவரூபக் காட்சி...

ஏதோ ஒரு மூலை, ஏதோ ஒரு மரம்...

கட்டுப்படாத காளையைப் போல ஜம்புவின் 'கன்ட்ரோலை' மீறிவிட்ட கார்...

மரத்தில் மோதியது புரியும். 'பயங்கர விபத்து' என்

பது புரியும். அவருக்குத்தன் உயிர் நிலையை நோக்கிச் சென்ற ஊடுருவலைப்புரியும். ஆனால் புரிந்து கொண்டதை எல்லாம் அவரால் தெரிந்து கொள்ளத்தான் முடியவில்லை.

பிறகு எத்தனையோ யுகங்கள் பூத்துக் கருகி இருக்க வேண்டும். நினைவு பிரிந்த ஒவ்வொரு விழுடியும் ஒரு யுகம்தானே?

அன்று காரில் போய்க் கொண்டிருந்தவர், இப்பொழுது கட்டிலில் கிடக்கிறார்!

இடையே நடந்தவை, அவரை இருளில் மூழ்க அடித்தவை.

ஜம்புவுக்குத் தெரிந்தது, அவர் தெரிந்து கொள்வதற்காகக் காத்துக்கொண்டிருந்தது —

வலியா?

அது மட்டும் அல்ல.

வலது முழங்காலுக்குக் கீழே —

மூளி! நொண்டி!

'இனி என்னால் நடக்க முடியாதா? ஐந்து விரல்களையும் குழையக் குழையப் பதித்து, இனி நான் மண்ணைத் தீண்ட முடியாதா?

அழுகிறார் ஜம்பு! பூக்கத் தெரியாத மனம், அழத் தெரிந்து கொண்டதும் அரும்புவிடுகிறதே!

ஐம்பத்தைந்து வருடங்களாய் அழுந்தி மூடிக் கிடந்த அவருடைய மனம், அழுகை ஓலத்துடன் விரியத் திறந்து கொண்டபோது—

கால் இல்லை! நடை இல்லை! இந்த மனத்தைப் பெறுவதற்கு இவ்வளவு பெரிய இழப்பா?

தன் இழி நிலையை எண்ணி இன்னும் சிறிதுநேரம் அழக் கூட முடியவில்லை அவரால்.

அது மாலை நேரம் அல்லவா? அவரும் புகழ்பெற்ற பிரமுகர் அல்லவா?

அவரைப் பார்க்க யார் யாரோ வருகிறார்கள். பழங்களைக் கொண்டு வருகிறார்கள். அனுதாப மொழிகளை அள்ளிக்கொண்டு வருகிறார்கள். அவர்களில் உள்ளத் தோடு வந்தவர் ஒருவராவது உண்டா?

இவர்கள் பெரிய மனிதர்கள். இவர்களுக்குக் கல்யாணத்துப் போவதும், கட்டிலில் கால் ஒடிந்து கிடப்பவனைப் பார்க்க வருவதும் ஒன்றுதான். வெறும் சம்பிரதாய வருகைதான். ஏதேனும் ஒரு லாபத்தைப் பெறுவதற்காகவே உதட்டளவில் உறவைக் காட்டி ஏமாற்றுகிறார்கள் இவர்கள்.

இந்த ஏமாற்றத்திலேயே வாழ்ந்து பழகிய ஜம்புவுக்கு முதல் தடவையாகப் பொய் உறவு புளித்தது.

மருந்தும்கையுமாக நுழைகிறாள் ஒரு நர்ஸ்.

'கடமையைச் செய்ய வந்திருக்கிறாள்! அதைத் தவிர அவள் கொடுக்கும் மருந்திலே எனக்காகக் கலங்கும் மனம் இருக்குமா?'

ஜம்பு வெறுப்போடு மருந்தை வாங்கிக் குடிக்கிறார். "நர்ஸ்! என்னைப் பார்க்க வருகிற எவரையும் இனி அறைக்குள் விடவேண்டாம்" என்கிறார்.

இயந்திரம் போலத் தலையசைத்து விட்டு வெளியேறுகிறாள் அவள்.

'என்னுடைய இழப்பைத் தன்னுடையதாகக் கருதித் துடிக்கக் கூடிய ஒரு மனம்.. எங்கேனும் இருக்கிறதா?



"ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற திருக்குறள் இருந்தபோதே நாலுவர்ணம்மகுள் புகுந்த மார்க்கம் என்ன? அந்தக் கொள்கை வந்த போது எதிர்த்தவர்கள் எத்தனை பேர்? வந்தது வரட்டும் என இருந்தனராவந்தபோதும் இனிவேண்டாம் என்றனரா? வந்ததுவந்து தொலைக்கட்டும் என்று அலுத்தனரா? வந்தது அதிகரான் இருக்காது என நினைத்தனரா?

"ஒன்றேகுலம்; ஒருவனே தேவன் என்ற உன்னதக் கொள்கைக்கும நாமே உரியவர்கள்.

"ஆண்டவன் படைத்து அவதாரம் எடுத்தான் என்பதற்கும் பாடல் எழுதுபவர்கள் நாம். பல சாதிகள் இருக்கும் என்ற கொள்கைக்கும் உடன்பட்டவர்கள் நாம். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற கொள்கைக்கும் நாம் வாரிசு என்று நீண்ட நாளைக்கு பல சரக்கு வியாபாரம் நடத்த முடியாது. ஏதாவது ஒரு சரக்கைத் தான் ஒழுங்காக விற்க வேண்டும். அந்தச் சரக்கு நாணயமானதாக, மக்கள் வாங்கக் கூடியதாக, உலகம் ஒப்புகிற சரக்காக இருக்க வேண்டும்.

"அதற்கு தமிழ்ப் புலவர்களும் தமிழறிஞர்களும் பாடுபட வேண்டும்."

உலகத் தமிழ் மாநாட்டில்
முதலமைச்சர்
பேரறிஞர் அண்ணா

இன்று இல்லை. என்றோ இருந்த அதன் நிழல் மட்டும் எங்கிருந்தோ வெளிப்படுகிறது.

'திலகவதி! அடியே திலகவதி...'

ஜம்பு நிழலைக் கூவி அழைக்கிறார். அலறுகிறார்.

நிஜத்தைக் கூவி அழைத்தாரா?

அழைக்காதது மட்டும் அல்ல; அதை அழித்தவரும் அவர்தானே!

அப்பொழுது இரவு இரண்டு மணி இருக்குமா?

இரும்புப் பெட்டிக்குள் இருந்த 'லட்சுமி'யோடு கொஞ்சிக் குலவிக் கொண்டிருந்தார் ஜம்பு.

அவர் தோளில் குழைந்து சுடுகிறது பெருமூச்சு. அயர்ந்து மணக்கிறது மல்லிகை. யாரோ தீச்சுட்டமாதிரி தீண்டுகிறார்கள்.

திரும்பிப் பார்க்கிறார் ஜம்பு.

எதிரே தித்திக்கும் பலாச்சுளையாய் திலகவதி!

அள்ளிக்கொள்ள வேண்டியவர் தள்ளி நிற்கிறார்.

"என்ன திலகவதி இது?" என்று வெறிக்கிறார்.


"இதுவா! என் ஆத்ம சமர்ப்பணம்! அதை நீங்கள் ஏற்றுக் கொள்ள மறந்துவிட்ட பொழுது, நினைவூட்ட வேண்டியவள் நான் தானே? வைரம் மனிதர்களை நோக்கி வருவதில்லை. மனிதர்கள் தாம் வைரத்தை நோக்கிப் போக வேண்டும். நான் அதைத்தான் செய்து கொண்டிருந்தேன்!" இலைத் தளிர் போல முறுவலிக்கிறாள் திலகவதி.

"ஆத்ம சமர்ப்பணம், வைரம்! அழகான வார்த்தைகள்!... நான் அழகைத் தேடுபவனல்லன்; பொருளைத் தேடுபவன் இரவில் நான் பணத்தை எண்ணுகிறேன். நீ இன்பத்தை எண்ணுகிறாய். இன்பத்தையே 'ஆத்ம சமர்ப்பணம்' என்ற கௌரவமான சொற்பேழையில் இழைத்து வாசிக்கிறாய்! நான் மறந்து விட்டதை நீ நினைவூட்டுவதில் பண்பு இருக்கிறதா? ஒரு மனைவி தன் கணவனின் தோளில் விழுந்து நினைவூட்டுவது கீழ்த்தரமாக இல்லையா, திலகவதி?"

"எப்படிக்கீழ்த்தரமாகும்? தெய்வத்தின் காலடியில் விழுந்தால் என்ன? தோளில் விழுந்தால் என்ன?"

"ஓ! என்னைத் தெய்வமாக்குகிறாயா?" என்று கடகடவென்று சிரித்தார் ஜம்பு. "என்னைத் தெய்வமாக்கு

★ அனைவருக்கும் எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள் ★



∴ பெரியார் அன்பிற்குரியது!

∴ பேரறிஞர் அண்ணா திறந்து வைத்தது!

∴ கரூரில் நவீன வசதிகளுடன் அமைந்தது!

∴ சைவ அசைவ உணவுகளுக்குச் சிறந்தது!

வணக்கம்

பெரியார் உணவு விடுதி

(போர்டிங் அண்டு லாட்ஜிங்)

தொலைபேசி எண்: 14

ஜவஹர் பஜார், — கரூர்.

உரிமையாளர்: எஸ்.நல்லசாமி

வதில் உனக்கு லாபம் இல்லாவிட்டாலும், திருப்தி இருக்கிறது. இந்த நாட்டில் ஒரு திருடனுடைய மனைவிக்குக் கூட அவன் தெய்வம் தான்! அந்த வகையில் இந்த நாட்டில் மனிவிமார்கள் சிருஷ்டித்த தெய்வங்கள் ஏராளம். திலகவதி! அந்தத் தெய்வங்களின் ஒன்றாக இருக்க எனக்கு விருப்பம் இல்லை. நான் பணம் பண்ணுபவன். பாவத்தின் வழியாகக் கூடப் பணம் வந்து தொலைக்கும் என்றால் பாவத்தையும் விட முடியாது. தெய்வமாகவும் முடியாது. நீ போய்ப் படுத்துக் கொள்!" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டு விட்டார் ஜம்பு.

பிறகு அவள் பக்கம் திரும்பிப் பார்க்கவே இல்லை அவர்.

நெஞ்சில் நெருப்பை ஏந்திக் கொள்ள, ஒரு பெண்ணுக்கு இத்தனை போதாதா?

திருமணத்துக்கு மறுநாள் திலகவதியின் நெஞ்சில் பிடித்த நெருப்பு, இரண்டு வருடங்கள் வரை எரிந்து, அவளைப் பிடிசாம்பலாக்கும் வரை அணையவே இல்லை.

இரும்புப் பெட்டியை நோக்கித் திரும்பி இருந்த ஜம்புவின் மனம், இறந்து போன தன் மனைவிக்காக இரண்டொரு பெரு மூச்சுக்களை விட்டுத் தன் கடமையை முடித்துக் கொண்டு விட்டது.

அவர் ஆடி அணைந்த வாழ்க்கைக் கடலில் திலகவதியின் பங்கு ஒரு துளி அளவில் தான் இருந்தது.

'திலகவதி! துளியா நீ? இல்லை, துணை. நீ என் துணை!...'

ஜம்புவின் மனம் அலறுகிறது. காலை இழந்த நிலையில், இழந்து விட்ட மனைவியின் நினைவு கொளுத்துகிறது.

'இந்தக் காலை அன்றே நான் இழந்திருக்கக் கூடாதா? இழப்பின் வேதனையைப் புரிந்து கொள்ள ஏற்கனவே எனக்கொரு சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் திலகவதியை இழக்க நான் காரணமாக இருந்திருக்க மாட்டேனே!'

அறுந்த தந்தியில் அழுகையை மீட்டுகிறார்! காலம் கடந்த கனிவுக்குக் கண்ணீரால் கவிதை பாடுகிறார்!

"மிஸ்டர் ஜம்பு!"

குரல் கேட்டுத் திரும்பினர் ஜம்பு.

எதிரே புன்னகையுடன் நிற்கிறார் டாக்டர்.

"மிஸ்டர் ஜம்பு! நீங்கள் அதிர்ஷ்டக்காரர். அவ்வளவு பெரிய விபத்திலிருந்து ஒருவர் உயிர் தப்பிப் பிழைப்பது அபூர்வம். அந்தக் காட்டுச் சாலையில் நீங்கள் விபத்துக்கு ஆளாகிக் கிடந்த போது நான் ஓர் அவசரக் கேஸைப் பார்ப்பதற்காக அந்த வழியே காரைச் செலுத்திக் கொண்டு வந்தது அதை விட அதிசயம். உங்களுடைய அதிர்ஷ்டம் உங்களைக் காப்பாற்றுவதற்கென்றே என்னை அந்த வழியே செலுத்தி வந்திருக்கிறது. அதை அதிர்ஷ்டம் என்றா சொன்னேன்? அது தவறு. உங்களுக்கு ஆண்டவன் அருள் நிறைய இருந்திருக்கிறது. பிழைத்து விட்டீர்கள்" என்றார் டாக்டர்.

'ஆண்டவா! நீ செய்தது அருளா? நான் நொண்டியாய்க் கிடந்து சீரழிய வேண்டும் என்பதுதான் உன் அருள் என்றால், உன் தெய்வீகம் தோற்று விட்டது! என்று தனக்குள்ளேயே கதறுகிறார் ஜம்பு.

"மிஸ்டர் ஜம்பு! நாளையிலிருந்து நீங்கள் நடக்கப் பயிற்சி செய்யுங்கள். அதோ அந்த மூலையில் இருக்கிறது உங்கள் கால்."

டாக்டரின் கரம் நீண்ட திசையில் ஜம்புவின் கண்கள் ஊர்ந்தன.

அங்கிருந்து—

கட்டத்தில் இடுக்கி நடக்க உதவி புரியும் ஒரு மரக் கொம்பு.

உயிரும் உணர்வும் கொண்டு அவர் தோளைத் தழுவிய கொடிக்குக் கொழுகொம்பாக இருக்க வேண்டிய அவர், அன்று இரும்புப் பெட்டியிலே இருதயத்தை வைத்து முகத்தைத் திருப்பிக் கொண்டார். அந்தப் புயலில் அவருடைய வாழ்க்கைத் துணை வாழை மரமாகச் சாய்ந்து விட்டது.

இதயம் இல்லாத இந்தத் துணை—

இனி எதிர் காலத்தின் இருளுக்கு வழி நடத்திச் செல்லும் மோசமான துணை இந்த மரக் கால் தான்!

திலகவதியைப் போல அல்ல—

வெறுத்தாலும் விலக்கி ஒதுக்க முடியாத துணை.

அடேயப்பா! அவ்வளவு நீளமா?

அமெரிக்காவில் ஜாப்பர்சன் நகரில் உள்ள மியூசியத்தில் விந்தையான காட்சிப் பொருள் ஒன்றுள்ளது. என்ன தெரியுமா? ஒரு பெண்ணின் ஒரு ஜோடி செருப்புக்கள்தான். செருப்பிற்கு இவ்வளவு சிறப்பா எனக் கேட்காதீர்கள்: அச்செருப்பின் நீளம் 22 அங்குலம். அதை அணிந்திருந்த பெண் 8 அடி 4 அங்குலம் உயரமுடையவளாம்.


அமைதி
ராத்திரி
குடை
வழக்குரைஞர்
திலீப் வில்லாளன்
எஸ். பாஸ்கர்

அப்பனுக்கு வாழ்வு வந்தால், அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்—இது பழமொழி.

ஆமாம், அர்த்த ராத்திரி, மழையில்லாத ராத்திரி—குறும்புக்காரருக்கு விளக்க மொழி, இது.


இதற்கு, உயிருள்ள நடமாடும் விளக்க உருவம் அரசப்பன். அவனைப் பார்த்தாலே, இப்படி மொழிக்கு, பதவுரை, பொழிப்புரை, கருத்துரை எல்லாம் படித்தது போலாகிவிடும்.

அடக்கம், ஆயிரம் பொன் தரும் என்பார்கள். ஆனால் அடங்கியிருக்கும் அருங்குணம் எல்லோருக்கும் வருவதில்லையே! அர்த்த ராத்திரிக் குடைக்காரர்கள் தான் நிறைந்திருக்கிறார்கள், உலகில். இதோ ஒரு பழமொழிக்கதை — அரசப்பன், அன்னக் காவடியாய், ஆதரிப்பார் யாருமின்றி அண்ணன்குளம் கிராமத்திற்கு வந்து சேர்ந்தான். அண்ணன் குளம், தம்பியாறு கரையில் அமைந்துள்ள அழகான சிற்றூர். வயல்களும், வனப்புமிகு வாழைத் தோட்டங்களும், செழிப்பான கரும்பு, வெற்றிலைத் தோட்டங்களும் நிறைந்த இடம். அவ்வூரில் கண்ணப்பர் தான் முதல்வர். எல்லா வகையிலும். அவ்வூரின் ஊராட்சி மன்றத்திற்கு தலைவரானதற்குக் காரணம், அவ்வூரில் மற்ற வகை முழுவதிலும் அவர் தலைவராக இருந்ததே!

கண்ணப்பர் வீட்டுத் திண்ணையில்தான், முதன் முதல் அரசப்பன் வந்து அமர்ந்தான். அவர் வீட்டு சோறுதான். பசித்த அவன் வயிறு இளைப்பாற உதவிற்று. கண்ணப்பர் ஒரு நாள்கூட ஓய்வு உள்ளவர் அல்லர். தினந்தினம் ஏதேனும் புதுப்பணி—அவர் ஆற்றி வரும் பொதுப்பணியில்...நோயாளிக்கு, மருத்துவர் விடுதியில் இடம் வாங்குவதிலிருந்து, மத்திய ஆட்சியில் அமைச்சராக இருப்பவருக்கு ஏற்படும் சங்கடம் தீர்க்கும் வரை எல்லா வகையிலும் ஈடுபாடு கொள்வார். சொந்த வேலை என்பது ஏதோ இரவலுக்குப் பார்ப்பதுதான்.

வாழைத் தோட்டம்





உண்டு—அதனை வாடாது பார்த்து. வகையாகச் செய்தால், ஆண்டில் பல ஆயிரங்கள் கிடைக்கும். ஆனால் பார்ப்பதில்லை. இருந்தாலும், பணம் வேண்டுமே! இக்காலத்தில் பணமின்றி என் செய்வது? குணம் இருக்கிறது, குணம் இருக்கிறது என்று கூவிக் கூவினாலும் பலன் என்ன? அப்படிக்கூவிக் கூறுவதற்கே பணம் தேவை! ஆனால் அப்பணத்தைக் கண்டு பல்லிளித்து நிற்க முடியுமா?

ஆமாம், அந்த வாழைத் தோட்டத்திற்கு ஆள் தேடினார். 'அடியேன். பார்க்கின்றேன்' என்றான் அரசப்பன். அவன் வறிய நிலையையும், வாடிய தோற்றத்தையும் கண்டு, சரியென்று கூறினார். வாழைத் தோட்ட வேலை பார்த்திடத் தொடங்கினான் அரசப்பன்.

வாழை . ஒரு நல்ல நீதி மரம். ஆம். அப்படித்தான். கண்ணப்பர் அரசப்பனிடம், முதலில், அறிவுரை கூறினார்.

"அரசப்பா, வாழைமரம், தன்னைப் பாதுகாப்பாருக்கு, பலன் தரும் முறையிருக்கிறதே, அது பாடங்களிலெல்லாம் பெரிய பாடம். ஒருவன் சாக்கடை நீரை அதன் அடிவேரை நனைக்கிற அளவு றூற்றினால் போதும். தன் உயிர், உடல் முழுவதும் அவனுக்கு அது தன்னை அர்ப்பணித்துவிடும்.

அத்தகைய நன்றியுணர்ச்சி. அதனுடைய, இலை உணவு படைக்க, அதனது மட்டை, கட்டுக்கட்ட-நார், பூதொடுக்க, தண்டு உணவாக்க, தார் சுவைக்கு, பூ கறி சமைக்க—அப்பப்பா, தன் உடலையே, அவனுக்கு அர்ப்பணித்து விடுகிறது—தார் விழுந்து விட்டால், உயிரையே கொடுத்து விடுகிறது-அது மட்டுமோ? பக்கத்திலேயே வேறொரு உயிரைப் படைத்து, அதனை அவனிடம் ஒப்படைத்து விடுகிறது. மேலும் தார் வரும் வரை தலைநிமிர்ந்து நிற்கும். தார் வந்தால், தலை தாழ்த்தி அடக்கத்திற்கு எடுத்துக்காட்டாகி விடும். இவை மனிதர்களுக்கு, மரம் தரும் நீதிகள்.'வாழை நீதி என்றும் வாழ்க' என்று கூறித்தான் வேலைக்கு அமர்த்தினார், கண்ணப்பர்.

வாழைத்தோட்ட வேலை பார்த்தான், அரசப்பன். அவன் வாழ்வு பெறத் தொடங்கினான். வயிற்றைக் கழுவினான் முதலில். அப்புறம், உடலை மினுக்கினான். பிறகு, உள்ளத்தில் திருப்தியைத் தேக்கினான். ஆமாம், வழக்கமாகக் கதைகளில் வரும் சம்பவம், அவன் வாழ்விலும் வந்தது.

வாழை இலை வாங்க வழக்கமாக வந்தாள், அன்னம்மாள்.

அவள் இலைக் கட்டோடு, அவன் இதயக் கட்டையும் அவள் சேர்த்து எடுத்துக் கொண்டு போய் விட்டாள்.

தாரை வெட்டிவிட்ட பிறகு, தண்டை விட்டு வைத்திட முடியுமா? இதயத் தார் வெட்டுபட்டு விட்டது. இனி தண்டு, அவள் தாளடியில். கண்ணப்பர் காதுக்கு எட்டிற்று. இரண்டு வாழை மரங்களை வெட்டிவரச் சொன்னார். பந்தலைப் போட்டார். வாழை மரங்களைக் கட்டினார்...எல்லாம் முடிந்தது. அரசப்பன் — அன்னம்மாள் இணைந்தனர், இல்லறத் துணைவர்களாக!

கண்ணப்பர் வாழ்வில் இப்படி, வாழ்வு பெறுபவர்கள் பலர். அவர் சக்திக் கேற்ற அளவில், உதவிடுவார். அவர் வாழ்க்கை சலனமற்ற ஆற்றுப் போக்கு வெள்ளமோ, அல்லது வற்றிய நிலையோ இல்லாத நிதானமான நீரோட்டம். அதில் தண்ணீர் அள்ளிக் குடிப்போர் அநேகர். அதை இனிய நீர் என்பர் சிலர். அவரே கசந்திடும் காட்டு நீர் என்பர்சிலர், சிலவேலைகளில். இவை எதனையும் அவர் சட்டை செய்வதில்லை.காரணம், இதற்கு குடிப்போர் நிலையே தவிர, கண்ணப்பர் காரணமாக மாட்டார்.

வாழைத் தோட்ட அரசப்பன், வாழ்வில் திருப்பம் தேடி நகர்ந்தான். கண்ணப்பரே வாழ்த்துக் கூறி அனுப்பி வைத்தார்

அரசப்பன் போனான். அரசப்பன் வந்தான். வாழைத் தோட்டம், வழக்கம்போல் செழிப்பாக வளர்ந்து நின்றது. வாழைக்கு உள்ள

குணமே, வாழையடி வாழையாக வளரும் பரம்பரைக் குணமாயிற்றே! போன அரசப்பன், வாழையை விட்டு, தாழையைப் பிடித்தான்! தாழங்குடைகள் செய்யும் புதிய வியாபாரம் செய்தான். மிச்சங்கிடைத்ததாக, பிறர் மெச்சும்படி, கூறி வந்தான்.

கண்ணப்பர் மகிழ்ந்தார். தாழங் குடைகளை கேரளத்திற்கு அனுப்பிவிட தனியுரிமை பெற்றுத் தந்தார். மழைக் காலத்தில், குடைகள் தேவைப்படும், மாவட்டங்களில், ஆட்சிமன்ற அலுவலர்களுக்கு இந்தக் குடைகளே கொடுக்க பரிந்துரைத்தார். அப்பப்பா குடை வியாபாரம் நடைபெற கண்ணப்பர் செல்வாக்கை தங்கு தடையின்றி கேட்டுப் பெற்றான் அரசப்பன். கண்ணப்பரோ, தன் மூலம், பிறர் வாழ்ந்தால், அதனை தான் வாழ்ந்ததாக எண்ணிக் களிப்பவராயிற்றே மகிழ்ந்தார். அதனால்தான் அவர் வாழ முடிகிறது! அவரிடம் எப்பழியும் சேர முடியவில்லை!

குடை வியாபாரம் பெருகியவுடன் அரசப்பன் நடையில் கொஞ்சம் வேறு வகையானபோக்குத்தோன்றிடத் தொடங்கிற்று. அன்னம்மாள் தடுத்தாள். அவனுக்கு ஆனவர்கள் தடுத்தனர். ஆனால், குடை சாய்ந்தது, சாய்ந்ததே!

அன்னம்மாள் அழுதாள்-தொழுதாள். ஆனால் பலன் இல்லை. கண்ணப்பரிடம் கூறினாள். கண்ணப்பர் சாய்ந்த குடையை நிமிர்த்தப் பார்த்தார்—முடியவில்லை. என் செய்வார்? அவர் சுபாவப்படி, ஒதுங்கிக் கொண்டார்.

குடை வியாபாரத்தால், வாழ்வு வந்தது, அரசப்பனுக்கு. ஆனால், அவன் அற்பனாக இருப்பான் என்பது அந்த வாழ்விற்குத் தெரியவில்லை. தெரிந்தால் வந்திருக்காதே! ஆகவே, குடை பிடிக்க ஆரம்பித்து விட்டான், அர்த்த ராத்திரியில்! மழைக்காக என்று கருத வேண்டாம். மழையில்லை. ஆனால் இருள் மழை—உள்ளும், புறமும்! இந்த அர்த்த ராத்திரிக் குடையை வாழ்க்கையில் பிடிப்பவர்கள், பிறகு நிரந்தர வெயிலில் நிற்பார்கள். ஆனால் நமக்குப் புரியும், குடை பிடிக்கும் அற்பர்களுக்கு புரிவதில்லையே! புரிந்தால். பழமொழி எப்படி ஏற்படும்?

பொங்கல் வாழ்த்துக்கள்

ஒரே விலை! **புதிய ரகம்!**

புத்தம் புதிய டிசைன்களில் கோடம்பாக்கம், கத்தான், உறையூர், ஸ்பன், கோயமுத்தூர் சேலைகளும் நைலான், நைலக்ஸ், டெரிகாட்டன் சேலைகளும் கண்கவரும் ரகங்களில் நம்பிக்கையாய் வாங்க சிறந்த இடம்:

பாலாஜி டெக்ஸ்டைல்ஸ்

ஜவுளி வியாபாரம் மெயின் பஜார்

வேலூர். (வ. ஆ.)

உரிமையாளர்: பி. சச்சுதாநந்தம் (அண்டு) பிரதர்

"சுதர்ஸன் சீட்டு வளமான வாழ்க்கைக்கு ஓர் வழிகாட்டி"

என்று சினிமா நட்சத்திரம் ஜயந்தி கூறுகிறார்.

உங்களை வரவேற்கிறோம்.

மிகப்பெரிய சிட் பண்ட் நடத்துபவர்கள்.

சுதர்ஸன் டிரேடிங் கம்பெனி லிமிடெட்,

ரிஜிஸ்டர்ட் அலுவலகம்: கள்ளிக்கோட்டை - 2.

சென்ட்ரல் ஆபீஸ்: சுதர்சன் பில்டிங்ஸ், ஓயிட்ஸ் ரோடு, சென்னை - 14.

இந்தியா முழுவதிலுமுள்ள
33 கிளைகள்
உங்கள் சேவையில்



சென்னை கிளைகள்:

120, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. போன்: 88250.

54, பந்தர் தெரு, சென்னை-1. போன்: 26548.

160, புரசவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-7. போன்: 63496.

தயாராகிறது!

ஏவிஎம்

அளிக்கும்

சிவாஜி கணேசன்

சௌகார் ஜானகி

அசோகன் • V.K.ராமசாமி

பாரதி • வாணிஸ்ரீ • மனோரமா

மற்றும் சிவகுமார் நடிக்கும்

புதிய கருத்துக்கள் நிறைந்த சமூகச் சித்திரம்

டைரக்ஷன் :

கிருஷ்ணன் பஞ்சு

இசை : விஸ்வநாதன்

பாடல்கள் : வாலி

திரைக்கதை, வசனம் :

ஜாவர் சீதாராமன்

AVM PRODUCTIONS





நழுவிய கருப்பு

ஜெகசிற்பியன்



இரண்டு ரூபாய் எழுபது பைசா என்று காட்டிய மீட்டரைப் பாக்காமலே, மூன்று ஒற்றை ரூபாய்த்தாள் களை டாக்சி டிரைவரிடம் கொடுத்துவிட்டு உல்லாசமாக விசிலடித்தவாறு வீட்டினுள் பிரவேசித்தான் ரமணி.

"அம்மா, அப்பா வந்துட்டார்!" என்று வாசலில் விளையாடிக் கொண்டிருந்த வாண்டுப்பயல் ராமுவும், குட்டிப் பெண் ரங்குவும் ஒரே சமயத்தில் ஒலிபரப்பினர்.


அப்போதுதான் குளித்து, வேறு ஆடை புனைந்து கொண்டு புதுப்பொலிவுடன் கூடத்து அறைக்கு வந்த சீதா புன்முறுவல் காட்டித் தன் கணவனை வரவேற்றாள்.

"சரியான நேரத்துக்கு வந்து விட்டேன் பார்த்தாயா?" என்று உற்சாகத்துடன் சொல்லிக் கொண்டே கையிலிருந்த ஆபீஸ் ஃபைலை மேசைமேல் போட்ட ரமணி, ஜேபியிலிருந்து ஒரு பூப் பொட்டலத்தை எடுத்து அவளிடம் நீட்டினான். 'கோயிலுக்குப் போகத்தானே தயாராயிருக்கிறாய்?"

ஆவலுடன் பூவை வாங்கி முகர்ந்து பார்த்துப் பரவசமடைந்த சீதா, "கோயிலுக்கா?...நாளை...?" என்று இழுத்தவாறு பூச்சரத்தைக் கொண்டையில் வட்டமாகச் சுற்றிச் செருகினாள்.

"இன்றைக்குக் கிருத்திகையாச்சே! அதனால்தான் காலையில் நீ சொல்ல மறந்து விட்டாலும் நானே ஞாபகமாகப் பூ வாங்கி வந்தேன்" என்று தன் கரிசனத்தையும் நினைவாற்றலையும் அவளுக்கு உணர்த்தித் தானும் பெருமைப்படுகிறவன்போல் சிரித்தான் ரமணி.

"ஓ..... எனக்கு அது மறந்தே போச்சு!" என்று மென்னகை பூத்த சீதா,



தீபச் சுடர் விழித்திருக்க...
திருவிளக்குக் கண்ணேயர...

இன்று கோயிலுக்குப் போவதா, வேண்டாமா" என யோசிப்பவள் மாதிரி சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தாள்.

"போவதானால் சீக்கிரமாகப் புறப்படு. இப்போதே மணி ஐந்தரையாகி விட்டது" என்று அவளை அவசரப்படுத்திய ரமணி தன் உடைகளைக் களைய அடுத்த அறைக்குச் சென்றான்.

கோயிலுக்குப் போவது பற்றி இன்னமும் ஒரு முடிவுக்கு வராதவள்போல் கடிகாரத்தையும், அடுக்களையையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு கூடத்து அறையிலேயே நின்றிருந்தாள் சீதா.

லுங்கியும் பனியனும் அணிந்து, துவாலையால் உடம்பைப் போர்த்திக் கொண்டு வந்த ரமணி, "இன்னுமா புறப்படலே? நேரமாச்சே" என்றவாறு சோபாவில் சாய்ந்தான்.

"போகணும்னுதான் நினைக்கிறேன். ஆனால் இது ஞாபகமில்லாமல் அடுப்பிலே உலை போட்டு அரிசி களைஞ்சும் கொட்டிட்டேனே...

"அதுதான் யோசனையா? சாதம் எப்போது வேகிறது, அதை வடிச்சுட்டுக் கிளம்புவது எப்போது? இருட்டிப் போய்விடுமே! சரி, சரி; நீ புறப்படு. நான் பார்த்துக் கொள்கிறேன்"

அவள் கோயிலுக்குப் போக வேண்டுமென்பதில்லை அவன் காட்டிய இந்தத் தீவிரம் அவளுக்கு வியப்பாயிருந்தது. என்றைக்குமே அவன் இம்மாதிரி உதவிகள் செய்ய எக்காரணத்தைக் கொண்டும் முன் வந்ததில்லை — செய்யக் கூடாது என்பதால் அல்ல, செய்யத் தெரியாது என்பதால்!

எனவே, சீதா அவனைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்தவாறு, "இன்னைக்கு மழை தான் வரும்" என்றாள்.

"அது வரும்போது வரட்டும் நீ புறப்படு" என்று கேலி செய்தான் ரமணி.

அவனுடைய உற்சாகத்தைக் கண்டு கிறங்கிப்போன சீதா, 'நீங்களும் வாங்களேன்? இருபது நிமிஷத்திலே சாதம் வெந்துடும். அதோடு அடுப்படி வேலையை ஏறக்கட்டிடுவேன். பிள்ளைகளையும் அழைச்சுக்கிட்டுப்போய் வருவோம்" என்றாள்.

"நானா?...சரிதான்!" என்று அலட்சியமாகத் தலையசைத்தான் ரமணி. "இதோ பார் ஒரு கட்டுஃபைலைத் தூக்கிக் கொண்டு வந்திருக்கிறேன். இரவு எந்நேரமானாலும் இவை பூராவையும் பார்த்துத் தீர்த்து நாளைக் காலையில் அந்த மூசுடு ஆர். ஓ. வின் மேசை மேலே கொண்டு போய்ப் போட்டாகணும், இல்லையென்றால்... அவ்வளவு தான். என்னை இரண்டிலே ஒன்று தீர்த்துக்கட்டி விடுவான்."

சீதாவின் மகிழ்ச்சிக் கிறக்கம் கலைந்தது. "அப்ப சரி; மறந்துடாம சாதத்தைப் பார்த்து வடிச்சுடுங்க."

"பிள்ளைகளையும் கூட அழைத்துக் கொண்டு போயேன்! அவர்கள் இங்கே என்னை ஒரு வேலையும் செய்ய விடமாட்டார்கள்."

"வேண்டாம், வேண்டாம். பனி வாடையாயிருக்குது. பொழுது சாய்கிற வேளையிலே பிள்ளைகளை அவ்வளவு தூரத்துக்கு இழுத்தடிப்பானேன்? பக்கத்து வீட்டுப் பிள்ளைகளோடு விளையாடிக்கிட்டு இருக்கும்படி நான் சொல்லிட்டுப் போறேன். நீங்க உங்க வேலையைக் கவனிங்க. அடுப்பிலே சாதம் இருக்குது மறந்துடாதிங்க,"

சீதா கோயிலுக்குப் புறப்பட்டாள்.

2

கோயில் அதிகத் தொலைவில் இல்லை ஐந்தாறு பர்லாங்குத் தூரம்தான். டஸ் வசதியும் உண்டு. ஆனால் சீதா பஸ்ஸுக்கு நிற்காமல் நடக்கலானாள். ஒரே நேர்ச்சாலை. கோயில்மட்டும் ஒரு குறுகலான தெருவில் இருக்கிறது.

இறுதி முனையில் போய் வலது புறம் திரும்ப வேண்டும்.

அது பகல் போது மிகுதியான காலம். அதனால் மாலை ஆறு மணியாகியும் கதிரவன் இன்னும் மறையவில்லை. மஞ்சள் வெயில் மரங்களின் பசிய சிரப் பரப்புக்களிலும், உயரமான கட்டிடங்களின் சுவர்களிலும், மின் விளக்குக் கம்பங்கள் மீதும் நவீன பாணி ஓவியங்களைத் தீட்டிக் கொண்டிருந்தது. சாலையில் ஜனநடமாட்டமும் வாகனங்களின் போக்கு வரத்தும் அமளி துமளிப்பட்டன.

பாதித்தூரம் சென்ற சீதா, தான் கோயிலுக்குப் போகும் போதெல்லாம் வழக்கமாகத் தேங்காய், பழம், பூ வாங்கும் கடைகளைப் பார்த்துத் தயங்கி நின்று தன் கைப் பையைத் திறந்தவள் திடுக்குற்று உதட்டைக் கடித்துக் கொண்டாள். பையில் இருபது காசு மட்டுமே இருந்தது. வேறு பணம் கொண்டுவரமறந்து விட்டாள்

"இப்போது என்ன செய்வது? காணிக்கைப் பொருட்கள் ஏதுமின்றியே முருகனைத் தரிசித்து விடலாமா? அல்லது வீட்டுக்குப் போய்ப் பணம் எடுத்துக் கொண்டு மறுபடி வரலாமா?"

சீதா திரும்பி நடந்தாள். அவளுக்குத் தன் கணவன் மீது கோபம் கோபமாக வந்தது. அவன் அவளைக் கோயிலுக்குப் புறப்படச் சொல்லி அத்தனை அவசரப் படுத்தியதால்தான், மேசை மேல் எடுத்து வைத்த ஐந்து ரூபாய் நோட்டைப் பையில் போட்டுக்கொள்ள மறந்து வந்து விட்டாள். 'என்றைக்குமில்லாத அதிசயமாக இன்றைக்கு ஏன் நான் கோயிலுக்குப் போக வேண்டும்-அதிலும் தேரைத் தொடுபுறப்படவேண்டும்-என்பதில் அவர் அவ்வளவு அக்கறை காட்டினார்?



என்று எண்ணியபடி நடந்த அவள் தன் அருகில் ஒரு கார் வந்து நின்றதை அறிந்து சற்றே ஒதுங்கிக்கொண்டு திரும்பிப் பார்த்தாள்.

"ஹலோ, சீதா!" என்று இனியகுரலில் எழிலுவழிய முறுவலித்தபடி காரை விட்டு இறங்கினாள் ஓர் அழகிய பெண்.

அவள் பெயர் நளினி. சீதாவின் பக்கத்து வீட்டுக்காரி. ஒரு கல்லூரியில் தத்துவப் பேராசிரியராயிருக்கும் ராமலிங்கம் என்பவரின் மனைவி. சீதாவைவிட மூன்று அல்லது நான்கு வயது மூத்தவள். வயது முப்பத்திரண்டு இருக்கலாம், இன்டர்வரை படித்தவள். வசதியான குடும்பத்தில் பிறந்தவள். நாகரிக வாழ்க்கையில் அபாரமோகம்கொண்

டவள். இரண்டு பிள்ளைகளுக்குத் தாயான பின்னும் அவளுடைய பேச்சு சிரிப்பு, நடை உடை, பாவனைகள் எல்லாம் பதினெட்டு வயதுக் குமரிப் பெண்ணுக்குரியனவாகவே இருந்தன அவளைப்பற்றி இன்னும் சுருக்கமாகவும் பொருத்தமாகவும் சொல்ல வேண்டுமானால், அவள் பேராசிரியர் ராமலிங்கத்தின் மனைவி என்பதைவிட நளினியின் கணவர் ராமலிங்கம் எனலாம்!

சீதாவும் நளினியும் அக்கம் பக்கத்து வீட்டுக்காரிகள் தானென்றாலும் அதிக நெருக்கமான பழக்கம் இல்லாதவர்கள். பொருளாதார, சமூக அந்தஸ்து நிலைமைகளில் இருவர்க்கிடையே அப்படியொன்றும் பெரிய ஏற்றத் தாழ்வு இல்லையெனினும் அவர்களது குணப்போக்கும் செயல்போக்கும் அத்தகைய நெருக்கத்துக்கு இடந்தராமல் அவர்களை ஒதுக்கி வைத்திருந்தன. சீதா ஓர் ஐம்பது வருடங்களுக்கு முன்னும், நளினி நூறு வருடங்களுக்குப் பின்னும் பிறந்திருக்க வேண்டியவர்கள். இதுவே அவர்களிடையிருந்த சங்கம தோஷத்துக்கு அடிப்படை.

அவர்கள் தாம் இப்படியென்றால் அவ்விருவரது கணவர்மார்களும் — அதாவது, ரமணியும் ராமலிங்கமும் கூட — அவ்வாறே பட்டும் படாமலும் பழகி வந்தனர். இதன் காரணமும் மேலே கூறியது போன்றதுதான். ஆனால் அதை அப்படியும் இப்படியுமாக மாற்றிப் போட்டுக்கொள்ள வேண்டும்.

"எக்ஸ்கியூஸ், சீதா! வீட்டுக்குத்தானே போகிறாய்?" என்று கேட்டவாறு தன் மேலாக்கு நழுவினதையும் கவனியாமல் டம்பப்பையைத் திறந்தாள் நளினி.

"ஆமாம்" என்று சீதாவும் ஒரு நேசப்புன்னகை பூத்தபடி அவசரமாகத் தனது முந்தானையை இழுத்து முதுகைப் போர்த்திக் கொண்டாள்.

"ஒன்றுமில்லை, நான் டென்னிஸ்கிளப்பிலிருந்து இப்ப நேரே ஒரு ஃபேன்சி ஃபேருக்குப் போறேன். இந்நேரத்துக்குக் காலேஜிலேயிருந்து 'அவர்' வந்துட்டிருப்பார். வீடு பூட்டிக்கிடக்குது. பிள்ளைகள் வராந்தாவிலே விளையாடிக்கிட்டு இருக்கும். இந்தச் சாவியை அவர்கிட்ட கொடுத்துட முடியுமா? ப்ளீஸ்!"

"ஓ... அதற்கென்ன? கொடுத்துடறேன்"

"ரொம்ப தாங்க்ஸ்"

கொத்துச் சாவியை சீதாவிடம் கொடுத்துவிட்டு, சற்றுத் தொலைவில் போய் நின்றிருந்த காரை நோக்கி ஒல்கி ஒசிந்து நடந்தாள்.

அவளைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணமில்லாமலே அவள் போவதைப் பார்த்த சீதா ஏதோ காணக் கூடாத காட்சியைக் கண்டுவிட்டவள் போல் சட்டென்று தலை குனிந்து கொண்டு விரைந்து நடக்கலானாள். காரணம் அந்தக் காரின் முன் ஆசனத்தில் யாரோ ஒரு வாலிபன் அமர்த்தலாக உட்கார்ந்திருந்ததை இவள் பார்க்க நேர்ந்ததே!

'பெண்கள் பலவிதம், அதில் நளினி ஒரு விதம்' என்று எண்ணி அதற்கு மேல் அது பற்றிய சிந்தனையில் அதிகம் ஆழாமல் உதறித்தள்ளி விட்டு தன்னுடைய மறதியால் தனக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் வீணான நடைச் சிரமத்தை நினைத்துத் தன்னைத் தானே கடிந்துகொண்டபடி கால்களை எட்டுப் போட்டு நடந்த சீதா தன் வீடு சமீபித்து விட்டதை உணர்ந்து நடை வேகத்தைக் குறைத்துக் கொண்டு, குனிந்த தலையை மெல்ல நிமிர்த்தியவள் ஏதோ நெருப்பை மிதித்து விட்டவள் போல் பதறித் துடித்துப் பின்னால் நகர்ந்து அதே பரபரப்புடன் பார்வையை நிமிர்த்தினாள்.

அங்கே, அவளது வீட்டின் காம்பௌண்ட் கேட்டைத் திறந்து கொண்டு அப்போதுதான் வெளிப்பட்ட ஓர் அழகிய இளம் பெண் தொய்ந்து துவண்ட கோலத்தில் கலைந்து குலைந்த ஆடைகளைச் சரி செய்தவாறு திரு திருவென்றும் முற்றும் பார்த்தபடி தெருவில் இறங்கி விடுவிடுவென்று நடந்தாள். வாசல் வரை வந்து அவளை வழியனுப்பிய ரமணியும் வீட்டினுள் திரும்பிச் சென்றான். அவனுடைய பிள்ளைகள் இரண்டும் பக்கத்து வீட்டு ராமலிங்கத்தின் பிள்ளைகளோடு விளையாடிக் கொண்டிருந்தனர். அந்த வீட்டின் கதவு பூட்டிக் கிடந்தது. ராமலிங்கம் இன்னும் வரவில்லை போலும்!

நெருங்கி ஓரத்திலிருந்த தபால் பெட்டியொன்றைப் பிடித்தபடி அதன் மறைவில் வெலவெலத்து நின்றுகொண்டிருந்த சீதாவின் உடலில் ஏற்பட்ட நடுக்கம் இன்னமும் நீங்கவில்லை.

அவளுக்கு எல்லாம் புரிந்து விட்டது. அந்த ஒரே விநாடியில் அவளுக்கு எல்லாமே புரிந்து போயிற்று.

'இப்போது பணம் எடுத்துவர வீட்டுக்குப் போவதா, அல்லது வந்த வழியே திரும்பிச் கோயிலுக்குச் செல்வதா?

கால்கள் தள்ளாடித் துவள அப்படியே கோயிலை நோக்கி நடந்தாள் அவள், பாதித் தூரம் செல்லும் வரையில் அவளுக்கு அவளின் உணர்வே இல்லை. அந்தச் சமயம் அவளெதிரே வந்த பஸ், லாரி, கார். ஸ்கூட்டர் எல்லாம் ஏதோ ஒரு சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு அவளை ஒதுக்கி விட்டு ஒதுங்கிச்சென்றன. இல்லையானால் இந்

நேரத்திற்கு அங்கே ஒரு சென்சேஷனல் செய்தி கிடைத்துப் போயிருக்கும்.

சீதா தன்னைச் சமாளித்துக் கொண்டாள். அந்தக் காட்சியைக் கண்டு தான் அடைந்த அதிர்ச்சியை இப்போது நினைத்துப் பார்க்கையில் அவளுக்கு வியப்பாகவும் வேடிக்கையாகவும் இருந்தது. தன்னையே வெறுத்துக் கொள்கிறவள் மாதிரி முகத்தைச் சளித்துச் சிரித்தாள்.

ஆமாம், அது என்ன, புது விஷயமா? கல்யாணமான மறு வருடம் முதலே அவளால் அறியப்பட்டுப்போன மிகப் பழைய விஷயம் தான். எனினும் அது இவ்வளவு காலம் வெளியில் நடை பெறுவதாகவே அவள் கேள்விப் பட்டு வந்தாள்; சும்மா காற்று வாக்கில் அல்ல— ஆகாரபூர்வத்தோடு. ஆனால் இன்று அந்த "விஷயம்" தன் வீடேறி வந்து கடந்ததைத் தானே கண்ணரைக் கண்டு விட்டாள். இதுதான் வித்தியாசம்.

இன்று அந்த அழிச் சாட்டியமான காரியத்தைத் துணிந்து தன் வீட்டிலேயே வந்து நடத்தியதைக் காண நேர்ந்தது கூட அவளுக்கு அத்தனை அதிர்ச்சியளிப்பதாயில்லை. ஏனெனில் இம்மாதிரி என்றேனும் ஒரு நாள் நடக்கலாம் என்று அவள் ஏற்கனவே எதிர் பார்த்தும் இருந்தாள். ஆனால் அந்தத் துரோகச் செயலை நடத்துவதற்குத் தேவையான சந்தர்ப்பச் சூழ்நிலையை உண்டு பண்ணிக் கொள்ளும் பொருட்டுக் கையாண்ட உபாயத்தை அறிந்த போதுதான் அவளுக்கு அதிர்ச்சியாகி விட்டது.

"இன்று கிருத்திகையல்லவா? அதனால் நீ கோயிலுக்குப் போவாய் என்று நானே ஞாபகமாய் பூ வாங்கி வந்திருக்கிறேன். சரி; சீக்கிரம் புறப்படு! உலையில் வெந்து கொண்டிருக்கும் சாதத்தை நான் பார்த்து வடித்து விடுகிறேன்.

எவ்வளவு சமத்காரமான திட்டம்! எத்தனை கேவலமான உபாயம்!

'இப்படி ஓர் இழி செயலை இன்று வீட்டிலேயே நடத்தப் போகிறேன்: அதனால் நீ உள்ளே இருக்காதே. வெளியே போய் நில் என்று பச்சையாகச் சொல்லிவிட்டிருந்தால் அதை நானும் தட்டாமல் ஏற்று நடந்திருப்பேனே. அவ்வாறு கூறத் துணிவு இல்லையென்றால், கறி காய்க் கடைக்கோ, ஜவுளிக் கடைக்கோ. சினிமாவுக்கோ போய் வா என்றாவது சொல்லியிருக்கலாம். இதையெல்லாம் விட்டு விட்டு, கோயிலுக்குச் சென்று ஆண்டவனை தரிசித்து வா என்றுதான சொல்ல வேண்டும்? தன் அநியாய அக்கிரமத்தைச் செயல்படுத்த



கோயிலையும் கடவுளையும் உபாயக் கருவிகளாகத் தேர்ந் தெடுக்கும் அளவுக்கு நெஞ்சில் துணிவு வந்துவிட்டதென்றால் வேறு எதற்குத்தான் துணிவு வராது?

சீதாவின் அதிர்ச்சியுற்ற மனமும், மடுங்கி மரமரத்த உணர்ச்சிகளும் ஒருமுகப்பட்டுத் தெளிவடைந்தன. ஆயினும் அவற்றின் பாதிப்பால் ஏற்பட்ட பலவீனம் அவளைக் கண்ணீர் வடிக்க வைத்தது. பசித்த கன்று தாய்ப் பசுவைத் தேடி ஓடுவதுபோல் ஒருவித ஆவேச வேகத்துடன் கோயிலை நோக்கி விரைந்து நடந்தாள் அவள்!

4

அன்று கோயிலில் எக்கச் சக்கமான கூட்டம். அதிலும் பெண்கள் கூட்டமே அதிகமாயிருந்தது. அதனால் 'கியூ' நியதியும் அங்கே ஏற்பாடாகி விட்டிருந்தது.

ஆண்டவனை மட்டுமே 'அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்க மற நிறைந்தவன்' என்று இனிச் சொல்லிப் பெருமைப் பட்டுக் கொள்ள முடியாது. ஏனென்றால் இப்போதெல்லாம் இந்தக் 'கியூ' வுக்கும் அந்தப் பெருமை உண்டு. இதோ கோயிலிலும் அது கொண்டுவரப்பட்டுவிட்டதே!

பெண்களுக்குரிய 'கியூ'வில் போய் நின்று கொண்டாள் சீதா. இங்கே இதற்கு முன்னெல்லாம் அவள் இம்மாதிரி நிற்கும்போது தனக்கு முன்னாலுள்ள பெண்கள் அணிந்திருக்கும் புடவை வகைகள், ஜாக்கட் ரகங்கள், நகை தினுசுகள்; கொண்டை அலங்காரங்கள் முதலானவற்றைக் கவனிப்பதிலேயே கருத்தாயிருப்பாள்.

ஆனால் இன்றோ? தனக்கு முன்னும் பின்னுமாக நின்று கொண்டிருந்த பெண்களைத் தனது வழக்கமான கண் ணோட்டத்துடன் காணமல் வேறோர் எண்ணப் போக்கில் கவனிக்கலானாள்.

'இங்கே சாமி கும்பிட வந்திருக்கும் இந்தப் பெண்களில் பெரும்பாலோர் என்னைப் போலவே நித்தமது சணவன் மாரால் ஏமாற்றப்பட்டவர்களாகவோ, துரோகத்துக்குள்ளானவர்களாகவோ தான் இருப்பார்களோ? அத்தகைய அதிர்ச்சிப் பேரவதியிலிருந்து மீளவும், மனச்சாந்தி பெறவும் தான் இங்கு இப்படிப் படை திரண்டோடோடி வந்திருக்கிறார்களோ?

தன்னை மீறிய ஒரு படபடப்புடன் அப்படியும் இப்படியுமாகச் சாய்ந்து நிமிர்ந்து அப் பெண்களின் முகங்களையெல்லாம் கூர்ந்து நோக்கினாள் சீதா. அப்போதைக்கு அவளுடைய ஊகம் சரியென்றே அவளுக்குத் தோன்றியது. மனித மனத்தைக் கண்ணாடிக்கு ஒப்பிட்டவன் பைத்தியக் காரனையிருக்க முடியாதல்லவா? 'ஐயோ பாவம்!' என்று அவர்களுக்காக அவள் மனம் உருகி அனுதாபப் பட்டுக் கொண்டு பெருமூச் செறிந்தாள். அதில்தான் அவளுக்கு எவ்வளவு ஆறுதல்



பாச மலர்களின்
பார்வையில்
குமிழ்ச் சிரிப்பில்...

சுவாமி தரிசனம் முடிந்தது! மேலண்டைப் பக்கமிருந்த அம்பாள் சந்நிதிக்கும் போய்த் தன் நெஞ்சக் குறைகளைக் கொட்டித் தீர்த்துவிட்டு, அப்படியே இரண்டாம்பிரகாரத்து வாயில் வழியே வெளியேறி மெல்ல நடந்தாள்.


பிரகாரத்தைக் கடந்து கல்யாண மண்டபத்தினுள் நுழைந்த அவள் சட்டென்று நின்றாள். அப்போதுதான் எதையோ நினைத்துக்கொண்டவள்போல் தன் இடுப்பை அவசரமாகத் தடவினாள். பக்கத்து வீட்டுக்காரி நளினி கொடுத்துவிட்டுப் போன சாவிக் கொத்துகையில்தட்டுப் பட்டது அதை மெல்ல எடுத்தபடி எதிரே பார்வையைச் செலுத்தினாள்.

ஜனநடமாட்டமின்றிவெறிச் சோடிக் கிடந்த அந்த மண்டபத்தின் தூண் ஒன்றில் சாய்ந்து நின்று கொண்டிருந்தார் பேராசிரியர் ராமலிங்கம்!

'தன் கணவர் கல்லூரியிலிருந்து இன்னும் வீட்டுக்கு வரவில்லை என்று சொல்லியல்லவா நளினி சாவியைக் கொடுத்து விட்டுப் போனாள்? இவரோ இங்கு வந்து நிற்கிறாரே! கல்லூரியிலிருந்து நேரே கோயிலுக்கு வந்து விட்டிருப்பாரா? அல்லது வீட்டிற்குப் போய் கதவு பூட்டப்பட்டிருப்பதைப் பார்த்துவிட்டு, மனைவி வரும் வரை கோயிலுக்காவது சென்று வரலாம் என்று கிளம்பி வந்திருப்பாரா? சாவியை வாங்கிக் கொண்ட நான் அதை இவரிடம் கொடுக்க வேண்டும் என்ற நினைப்பே இல்லாமல் இவ்வளவு நேரத்தைக் கழித்து விட்டேனே! மறு முறை வீட்டுக்குப் போன போதாவது இவரைப் பார்த்துச் சாவியைக் கொடுத்திருக்கலாமே! பாவம் இவருக்கு என்னால் எவ்வளவு சிரமம்! ஒரு கால், நளினி தான் செல்ல விருந்த நிகழ்ச்சிகளுக்குச் செல்லாமல் வீட்டுக்குத் திரும்பி வந்து, சாவியை என்னிடமிருந்து பெற்று வருமாறு இவரை இங்கு விரட்டியிருப்பாளோ? அப்படி வந்தவரா யிருந்தால் என்னைக் கோயிலினுள் அல்லவா தேடிப் பார்க்க வேண்டும்? அதை விடுத்து இந்தத் தனிமையான இடத்தை நாடி வந்து நிஷ்டையில் ஆழ்ந்தவர்போல் தம்மை மறந்து நின்றுகொண்டிருக்கிறாரே!'

உள்ளார்ந்த தவிப்பும் பரபரப்பும் அடைந்த சீதா தன் முந்தானையால் உடம்பை நன்றாகப் போர்த்துக் கொண்டு தயக்கத்துடன் அவரை நோக்கி மேலும் சற்று நெருங்கிச் சென்றாள். அவரோ அவளைப் பார்த்த தாகவே தெரியவில்லை. கண் மூடிய நிலையிலே தூணில் செதுக்கிய சிலைபோல் அசைபாது நின்று கொண்டிருந்தார்.

பொழுது சாய்ந்து போனதால் அந்த மண்டபத்தில் பூஞ்சை இருள் பரவியிருந்தது. பிரகாரச் சுவரில் பொருத்தியிருந்த ஒரே ஒரு மின் விளக்கின் ஒளி, மண்டபத்தின்பாதியளவுக்கு மட்டுமே எட்டியது. அதனால் சீதா மேலும் சற்று முன் சென்று அவர் முகத்தை உற்று நோக்கினாள். மறுகணம்



ஆயிரங் கதைகள்
அடங்கிக்
கிடக்கின்றதோ

திடுக்குற்று ஒரடி பின்னால் நகர்ந்து கொண்டாள். காரணம், தியானத்தில் ஆழ்ந்தவர் போல் நின்றிருந்த ராமலிங்கத்தின் மூடிய கண்களிலிருந்து கண்ணீர் கசிந்து கன்னங்களில் வழிந்து கொண்டிருந்தது!

உள்ளமும் உடலும் பதறித் துடிக்க, என்னசெய்வதென்று தோன்றாமல் தவித்த சீதா அங்கிருந்து போய்விடலாமா என்று ஒரு கணம் எண்ணினாள். பிறகு, சாவியை அவரிடம் கொடுக்க வேண்டுமே என்ற நினைப்பு, அதைத் தொடர்ந்து அவரை என்னவென்று கூப்பிட்டுச் சாவியைக்கொடுப்பது என்ற குழப்பம். திருதிருவென விழித்தபடி இடது கையிலிருந்து சாவிக் கொத்தை வலது கைக்கு மாற்றினாள் 'ஜல்'லென்ற ஒலி எழும்பியது.

அந்த ஓசை கேட்டுத் தியானம் கலைந்தவராய் மெல்லக் கண் திறந்தார் ராமலிங்கம், அப்போதுதான் தம் எதிரே சீதா நின்றிருப்பதை அறிந்தார் என்பதற்கறிகுறியாக அவரது கண்ணிமைகள் படபடத்தன. "ஓ,...நீங்களா?" என்றவாறு அசட்டுப் புன்முறுவலுடன் அசைந்து நிமிர்ந்து முகத்தைத் துடைப்பது மாதிரி அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

குழப்பமும் திகிலுமாக அவரையே சில விநாடி கூர்ந்து நோக்கிய சீதா சட்டென்று தலை குனிந்து கொண்டாள். ஓர் ஆடவரை நேரிட்டுப் பார்த்ததாலோ என்னவோ அவளையும் மீறிக் கிளர்ந்த நாணம் அவளுடலைக் கூனிக் குறுக்கியது. நெளிந்து பின்னால் நகர்ந்து கொண்டே. "இதோ, உங்கள் வீட்டுச் சாவி! கவினியை வழியில் சந்தித்தேன். உங்களிடம் இதைக் கொடுக்கச் சொல்லிக் கொடுத்தது..." என்றவாறு சாவியை அவரிடம் நீட்டினாள்.

இவ்வளவு நேரம் அமைதி நிலவியிருந்த ராமலிங்கத்தின் முகம் இப்போது ஏனோ திடுமென்று வெளிறிச் சிறுத்தது எதிர்பாராத அவமானத்துக்கு உள்ளானவர்போல் திக்கித் திணறிய அவர், "அப்படியா?...மிக்க நன்றி!" என்று குழறியவாறு சாவிக் கொத்தை வாங்கிக் கொண்டார்.

அவரின் இந்தத் தடுமாற்றத்தைக் கண்ட சீதாவுக்கு மேலே என்ன பேசுவதென்று தோன்றவில்லை. மரியாதைக் கறிகுறியாக அவரைப் பட்டும் படாமல் பார்த்துப் புன்னகை பூத்துவிட்டு அங்கிருந்து மெல்ல இறங்கி நடந்தாள்.

5

பஸ் ஓடிக்கொண்டிருந்தது. உள்ளேயோ நெரிசல். உட்கார இடம் கிடைக்காத சீதா மேல் வாரைப் பிடித்தபடி நின்று கொண்டிருந்தாள். 'இப்படி அவஸ்தைப் படுவதைவிட நடந்தே போயிருக்கலாமே! இத்தனை அவசரமாக ஏன் இந்த பஸ்ஸில் ஏறினேன்?' என்று அவள் உள்ளூர முணுமுணுத்துக் கொண்டாள். இப்போதே மணி ஏழரையாகி விட்டிருந்தது. இதற்கு முன்னெல்லாம் கோயிலுக்கு வந்து வீடு திரும்பச் சற்றேதாமதமானாலும் ஆலாய்ப் பறந்து அலைமோதி விடுகிற அவளுக்கு, இன்று இவ்வளவு நேரமாகியும் அத்தகைய உணர்ச்சியே ஏற்படவில்லை. 'ஆமாம் அங்கே போய் அந்தத் துரோகியின் முகத்தில் அல்லவா விழிக்க வேண்டும்?'

அடுத்த பஸ் நிலையத்தில் இறங்கி மறுபடியும் கோயிலுக்கே திரும்பிப் போய் ஒதுக்குப்புறமான இடம் ஒன்றைப் பார்த்து இரவெல்லாம் அங்கேயே உட்கார்ந்து விட வேண்டும் போன்ற ஒரு விசித்திரமான எண்ணம் தோன்றி அவளை உலுக்கியது. அத்துடன் பஸ்ஸும் ஒரு குலுக்குக் குலுக்கவே அவள் தட்டுத் தடுமாறிச் சாய்ந்து நிமிர்ந்தாள் மறுகணம் அவளுடைய குழந்தைகளைப் பற்றிய நினைப்பு 'ராமுவையும் ரங்குவையும் பக்கத்து வீட்டுப் பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டிருக்கச் சொல்லிவிட்டு வந்தேனே! எவ்வளவு நேரம் அங்கே அதுகள் இருக்கும்? பசி யெடுத்துக் கொண்டு அழ ஆரம்பித்து விடுவார்களே!'

இப்போது இறக்கை கட்டிக்கொண்டு வீட்டுக்குப் பறந்து செல்ல வேண்டும் போல் ஆகிவிட்டது சீதாவுக்கு பஸ் இன்னும் வேகமாக ஓடவில்லையே என்று மனத்துக்குள் சபிக்க ஆரம்பித்து விட்டாள்.

"நிற்கிறீர்களே, இப்படி உட்காருங்களம்மா!"

நெரிசலில் தவித்தபடி நின்று கொண்டிருந்த சீதா இந்தக் குரல் கேட்டுச் சட்டென்று திரும்பினாள் அவளருகிலிருந்த ஓர் ஆசனத்திலிருந்து அப்போதுதான் அவசரமாக எழுந்தார் பேராசிரியர் ராமலிங்கம்.

வலிய வருவித்துக்கொண்ட புன்னகையுடன் மெல்லப் போய் அந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள் சீதா. 'இவர் எப்போது வந்து இந்த பஸ்ஸில் ஏறினார்? நான் கவனிக்கவே இல்லையே!'

அவளுக்கு அவரை நிமிர்ந்து பார்க்க வெட்காமயிருந்தது. அதனால் தலைகுனிந்தபடி வெளியே பார்ப்பது மாதிரி பாவனை செய்யலானாள் ஆயினும் அவர் எங்கே நிற்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளத் தன் பார்வையைக் கீழாக ஓட்டினாள். அவளுக்கு உட்கார இடம் கொடுத்துவிட்டு எழுந்த அவர் அவ்விடத்தில் நிற்காமல் முன்பக்கமோபின்

பக்கமோ நகர்ந்து போய் விட்டிருந்தார்.

அவரின் இந்தப் பண்பான செயல் அவளது மனத்துக்கு மிகவும் உவப்பா யிருந்தது. அத்துடன் தன்னை அவர் பன்மையில் விளித்த பாங்கும் நெஞ்சில் ஒருவித குளிர்ச்சியை ஊட்டியது. ஏனென்றால் அவளைவிட அவர் பத்துப் பன்னிரண்டுவயதாவது மூத்த வராயிருப்பார். பெரும் படிப்பாளி, சமூக, பொருளாதார அந்தஸ்திலும் ஒரு தனியான கௌரவமும் மதிப்பும் பெற்றவர். எனவே அவளை ஆவர் ஒருமையிலேயே விளித்திருக்கலாம், அதில் தவறே தரக் குறைவோ எதையும் அவளால் பாராட்ட முடியாது. அப்படியிருந்தும் அவளுக்கு எத்தனை மரியாதை கொடுத்துப் பேசினார்! இதை நினைக்க நினைக்க ஏதோ ஒருவகையான தாழ்மையுணர்ச்சியால் உள்ளம் கூசினாள் அவள்

தான் இறங்க வேண்டிய இடத்தில் பஸ் நிற்கவே அவசரமாக இறங்கிச் சற்றுத் தூரம் நடந்த சீதாவுக்கு ராமலிங்கம் இறங்கி விட்டாரா என்பதை அறிய வேண்டுமென்ற ஆவல் எழுந்தது அவரும் இவ்விடத்தில்தான் இறங்கியாக வேண்டும். ஆனால் பின்னால் திரும்பி அவரைப் பார்க்க அவள் விரும்பவில்லை. அப்படிப் பார்ப்பது நல்ல செயல் ஆகாதென்ற தோடு ஒருவித அச்சமும் கூச்சமும் சேர்ந்து அவளை ஆட்கொண்டு விடவே தலைகுனிந்தபடி மேலே நடக்கலானாள் எனினும் அவளது செவிப் புலன் மட்டும் இதற்கெல்லாம் கட்டுப் படாமல் வெகு சுறுசுறுப்புடன் பின்னோக்கிச் செயல்படலாயிற்று. இறுதியில் அதற்குக் கிடைத்தது பெரும் ஏமாற்றமே! அதாவது பின்னால் சாலையில் யாரும் நடந்துவரும் காலடி ஓசையே கேட்கவில்லை.

காலில் கல் உறுத்திவிட்டாற் போன்ற பாசாங்குடன் நின்றபடி திரும்பிப் பார்த்தாள். ராமலிங்கம் வரவில்லை என்ற அவளது செவிப் புலனின் ஊகம் உண்மையாயிற்று அவ்வாறாயின் அவர் பஸ்ஸை விட்டு இவ்விடத்தில் இறங்கவில்லையா?—ஏன் இறங்கவில்லை? இதற்கு முந்தைய நிறுத்தத்திலேயே இறங்கிப் போய்விட்டாரா? அல்லது அடுத்த நிறுத்தத்தில் இறங்கிக் கொள்ளலாம் என்று பஸ்ஸிலேயே இருந்துவிட்டாரா?

'எனக்கெதற்கு இந்த அர்த்தமற்ற அநாவசிய ஆராய்ச்சி?' என்று தன்னையே கடிந்து கொண்டவளாய் தன் வீட்டை நோக்கி விரைந்து நடக்கலானாள்.

6

வீட்டினுள் காலை வைத்ததுமே சீதாவுக்குத் திடுமென்று அந்த வீட்டுத் தளம்

அனைவருக்கும் எமது பொங்கல் நல் வாழ்த்துக்கள்.

தமிழர்திரு நாளிலே ஒரு "பிலிப்ஸ் மாடல்"

ரேடியோ, PHILIPS டிரான் சிஸ்டர்

தேர்ந்தெடுத்து அன்பளிப்பாகக் கொடுங்கள்.
ரேடியோ வாங்குவதானால் மறவாதீர்கள்.

கிடைக்குமிடம்:

—: வேலூரில் அங்கீகாரம் பெற்ற பிரதான விற்பனையாளர்கள் :—

★ சுந்தர் ரேடியோ ஹவுஸ் ★

74, லாங்கு பஜார் -:- வேலூர். (வ. ஆ.)

போன்:344 கிளை: (பஸ்ஸ்டாண்டு சமீபம், ஆற்காடு) உரிமையாளர்: வி.டி. துளசிராமன்

ஒலி, ஒளி, அமைப்புகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

இடிந்து தன்மீது விழுந்தாற் போன்ற ஒரு பலத்த அதிர்ச்சி ஏற்பட்டது. அத்துடன் தனது கால் பாதங்களுக்குக் கீழே செந்தழல் குழம்பு ஆறாகப் பிரவகித்து ஓடுவது போன்ற பயங்கர எரிச்சல் வேதனை தட்டுத் தடுமாறி விழப்போனவள் எப்படியோ தன்னைச் சமாளித்துக்கொண்டாள்.

இந்நேரம் மாடி வராந்தாவில் கிடந்த ஒரு பெஞ்சுமேல் ஏறி நின்றபடி, தங்கள் அம்மா வரும் வழிமேல் விழிவைத்துப் பார்த்துக் கொண்டிருந்த ராமுவும் ரங்குவும் மகிழ்ச்சிப் பெருக்குடன் தட தடவென்று படிகளில் இறங்கி ஓடிவந்து அவள் காலைக் கட்டிப் பிடித்துக் கொண்டார்கள்.

சீதாவுக்கு ஏற்பட்ட அவ் விசித்திர அதிர்ச்சி இப்போது ஒருவாறு நீங்கியது. பிள்ளைகளை அணைத்தபடி உள்ளே நடந்தாள்.

ரமணி தன் அறையில் அமர்ந்து ஆபீஸ் வேலையில் வெகு முழுமுரமாக ஈடுபட்டிருந்தான். சீதாவுக்கு அவன் இருக்கும் பக்கமே திரும்பப் பிடிக்கவில்லை. ஆனாலும் அவனை ஒரு வித்தாரப் புன் முறுவலுடன் பார்த்தாள். அவனும் அவளை நிமிர்ந்து நோக்கி அழகாகச் சிரித்தான். 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா?' என்று எண்ணி ஏமாறச் செய்யும் அதே வெகுளிப் பார்வை, அவனுக்கே உரிய அந்த மாயச்சிரிப்பு! தனக்குச் சொந்தமில்லாத அயலார் வீட்டில் நுழைந்து விட்டவள் போல் ஒருவித மிரட்சியுடன் அங்குமிங்குமாகப் பார்த்தாள் சீதா.

"என்ன, இவ்வளவு நேரம்? பஸ் கிடைக்கவில்லையா?" என்று தன் வேலையில் கவனமாயிருந்தபடியே சாதாரணமாகக் கேட்டான் ரமணி.

"ஆமாம்" என்று சீதாவும் அதே தோரணையில் பதிலிறுத்திவிட்டுச் சமையலறைக்குச் சென்று விட்டாள்.

பிள்ளைகளுக்கு உணவு படைத்து உண்ண வைத்து விட்டு வெளிப்பட்ட அவளின் கையில் ஒரு துடைப்பமும் வாளியும் இருந்தன.

"ஏன், என்ன பண்ணப் போகிறாய்?" என்று வினவினான் ரமணி.

"வீட்டைக் கழுவிப்பெருக்க வேண்டும்"

"இந்த நேரத்திலா?"

"காலையிலிருந்தே நினைத்துக் கொண்டிருக்கிறேன்."

"கோயிலுக்குப் போய்க் களைப்பாக வந்திருக்கிறாயே..."

"அதெல்லாம் ஒன்றுமில்லை."

"இன்று வெள்ளிக்கிழமை, விளக்கு வைத்தபின் வீட்டைக் கழுவலாமா?"

கடுமையாக ஏதோசொல்ல வாயெடுத்தசீதா, சட்டென்று அதை விழுங்கிவிட்டு, "பரவாயில்லை. சாஸ்திரம், சாங்கியம் எல்லாமே நாமே பார்த்து வைத்துக் கொண்டதுதான்' என்று அமைதியாகச் சொல்லிக் கொண்டே வாளியில் இருந்த தண்ணீரைக்கவிழ்த்து என்றுமில்லாத ஒரு முரட்டுத் தனத்துடன் பெருக்கத் தொடங்கி விட்டாள்.

ரமணி எழுந்து வந்து அவளுக்கு உதவியாகத் தண்ணீர் பிடித்துத் தரவும், அறைகளிலுள்ள சாமான்களை நகர்த்தித் தூக்கி வைக்கவும் செய்தான். அவள் அவனைத் தடுக்கவில்லை. எப்போதும்போல் சகஜமாகப் பேசி நடந்து கொண்டாள். ஆனால் அப்படிப் பேசுவதிலும் நடந்து கொள்வதிலும் உள்ள கொடிய வேதனையை இப்போதுதான் அவளால் உணர முடிந்தது.


சகிக்கவொண்ணா அருவருப்பினாலும், கட்டுப்படுத்த இயலா வெறுப்பினாலும் மோதி யெழுந்த ஆவேசத்துடன்-சோயிலுக்குச் சென்று வந்த களைப்பையும் பொருட்படுத்தாமல்-வீட்டைக் கழுவுவதில் ஈடுபட்ட சீதாவுக்கு அவ்வேலை முடிந்ததும் ஒரே சோர்வும் ஆயாசமுமாகிவிட்டன. நிமிர்ந்து நிற்கவும் அவளால் இயலவில்லை. இந்தக் களைப்போடு ஒவ்வோர் அறையிலும் ஊதுபத்திகளைக் கொளுத்தி வைத்தாள் இதற்குள் சாப்பிட்டுஎழுந்த பிள்ளைகள் தூக்கச் சிணுங்கலுடன் கண்ணைக் கசக்கியபடி வந்தார்கள். மாடியறையில் தூங்கப் பண்ணுவதற்காக அழைத்துக் கொண்டு படிகளில் தள்ளாடித் தள்ளாடி ஏறி நடந்தாள்

ரமணி மறுபடியும் தன் காரியாலய வேலைகளைக் கவனிக்க உட்கார்ந்தான்.

மாடிப்பகுதி இரண்டு அறைகளும், இரும்புக் கிராதியுடன் கூடிய ஒரு நீண்ட வராந்தாவும் மட்டுமே கொண்டது. வீட்டின் எதிர்ப்புறமாக அந்த வராந்தா இல்லாது வலப்பக்க வாட்டில் அமைந்திருந்தது. அறைகளுக்குப் பின்னால் அவற்றின் முக்கால் அளவு பரப்புள்ள மொட்டைத்தளம். நாலு பேர் கொண்ட அச்சிறு குடும்பத்துக்கு நூற்றிஐம்பது ரூபாய் வாடகையில் இவ்வளவு பெரிய வீடு தேவையில்லைதான். ஆனால் டாய்பீகப் பிரியனான ரமணி இவ்வீட்டை விடாமல் வைத்திருந்தான்.

பிள்ளைகளைத் தட்டித் தூங்கப் பண்ணியவாறு தன் களைப்பையும் ஒருவாறு போக்கிக் கொண்ட சீதா, மெல்ல எழுந்து வந்து வராந்தாவில் அமர்ந்தாள்.

நீள வாட்டத்திலிருந்த அவ் வராந்தாவின் குறுக்களவு மிகக் குறைவே, ஓர் ஆள்தான் அதில் உலாவ முடியும். அங்கிருந்து சுமார் பதினைந்தடி தூரம் தள்ளிப் பேராசிரிய



ரின் வீடு இருந்தது. அது மொட்டை மாடி வீடு இவ் விரண்டு வீடுகளுக்கும் நடுவே முள்ளுக் கம்பி வேலி. எதிர்ப் புறம் மட்டும் தனித் தனி வாயில்கள் கொண்ட மதில் சுவர்கள். வேலியோரம் நெடுக அழகழகான பூச்செடி கள் வைத்து வளர்த்திருந்தார் ராமலிங்கம். ரமணிக்கு இதி லெல்லாம் ருசி கிடையாது. வாடகை வீடுதானே என்ற அலட்சியம் வேறு. இதனால் வீட்டைச் சுற்றி ஒரே கட்டாந் தரையாகக் கரடு கட்டிக் கிடந்தது.

தனியே வந்து உட்கார்ந்த தும் சீதாவுக்கு இவ்வளவு நேரம் அழுத்திப் புதைத்து வைத்திருந்த துயரமெல்லாம் அழுகையாகவெடித்து வெளிப் படலாயிற்று. அவள் ஓசை யின்றிப் பொங்கிப் பொங்கி அழுதாள்.துடைக்கத்துடைக்க கண்கள் வற்றுச் சுனையாக நீரை வடித்தன. தன் கணவ னின் துரோகச் செயல் பற் றிய சிந்தனையில் ஆழ்ந்த வளாய் தலைகுனிந்தபடி யிருந்த அவளது விழிகளி லிருந்து சிமிண்டுத் தரையில் கொட்டிய கண்ணீர்த் துளி களை வலக்கைச் சுட்டுவிரலால் ஒன்றுடன் ஒன்றை இழுத்துச் சேர்த்துக் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.

தெருவில் ஒரு கார் வந்து நின்று, கிளம்பிச் செல்லும் ஓசை. அவ்வோசையால் தன் துன்பமயமான சிந்தனையிலி ருந்து விடுபட்டு நிமிர்ந்து நோக்கினாள்.

ராமலிங்கத்தின் மனைவி நளினி அப்போதுதான் வீட் டில் பிரவேசித்துக் கொண் டிருந்தாள். அவளைப் பார்த் ததுமே சீதாவுக்கு ராமலிங்கத் தைப் பற்றிய நினைவு எழுந் தது.

அவருடைய வீட்டில் விளக்குகள் எரிந்துகொண் டிருந்ததிலிருந்து அவர் முன்பே வந்து சேர்ந்து விட்டார் என் பது புலனாயிற்று. அன்று பிற் பகல் வீட்டை விட்டுக் கிளம் பிய நளினி இப்போதுதான் திரும்பி வருகிறாள் போலும்! அவள் வந்ததுமே வீட்டில் ரேடியோ அலற ஆரம்பித்து விட்டது. அதையும் மேவிக் கொண்டு அவளின் பேச்சுக் குரல், கலீர்ச் சிரிப்பொலி. பிள்ளைகளின் கும்மாள ஓசை. இவ்வளவுக்கும் ராமலிங்கம் எங்கே இருக்கிறார் என்றே தெரியவில்லை. அவரது பேச் சுக் குரலையும் காணோம்.

அந்த விசித்திரமான தம் பதியைப் பற்றி சீதா ஏற் கனவே பலவும் கேள்விப்பட் டிருக்கிறாள். ஜாடைமாடை யாகச் சில விஷயங்களைத் தானும் கவனித்தறிய நேர்ந்து மனம் கசந்துமிருக்கிறாள்.

ராமலிங்கம் கண்ணியமான பெரியதொரு குடும்பத்தைச் சேர்ந்தவர். அதற்கேற்ற கல்வி பெற்று கௌரவமான தொழிலையும் அமைத்துக் கொண்டவர் பூர்வீகச் சொத் தும் ஓரளவு உண்டு. இவை யெல்லாம் ஒருபுறமிருக்க, ஒழுக்கத்தையும் நேர்மையை யும் உயிரென நம்பி அவற் றைத் தம் நடை - உடை - பாவனைகள், பேச்சு, செயல் சிந்தனை அனைத்திலும் பரிம ளிக்க வைத்து வருபவர் என் பதில்தான் அவரை அறிந் தோர் தெரிந்தோரிடையே அவருக்கு மதிப்பும் பெருமை யும் இருந்தன. எனினும் ஒழுக்கம், நேர்மை, உண்மை கொள்கைப் பற்று முதலான அக அழகு படைத்தோர் சில

நிடம் புறஅழகுகள் மட்டுப் பட்டு இருப்பதும், அந்தக் குறைபாடுகளை மறைக்கவே அகக் கவர்ச்சிகளை அவர்கள் மிகுதியாக வளர்த்து வெளிக் காட்டுவதும் உண்டல்லவா? சந்தர்ப்பக் குறைவு, பொருளா தார வறட்சி உடற் பலவீனம் இவற்றின் கெடுபிடிகளால் சத்தியவான்களாக இருப்ப வர்களும் உண்டே! இவற்றி லெல்லாம் கூட ராமலிங்கம் தனித்தன்மைபெற்றவராகவே விளங்கினர். அதாவது புற நிலைமையில் எவ்விதக் குறை யின்றியே அவர் அகச் செல் வத்தில் பூரணத்துவம் பெற் றிருந்தார்.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த ஒரு நல்ல மனிதரின் மனைவிதான் நளினி. 'மனைவி தான்...' என்று ஒரு இழுப்பு இழுத்து நிறுத்தி விட்டாலே போதும், அவருடைய குணச் சித்திரம்' என்ன என்பதை ஓரளவேனும் விளங்கிக்கொள் ளலாம். அப்படியும் விளங்க வில்லையென்றால் இன்று மாலை எவனோ ஓர் அயல் வாலிபனின் காரில் சென்ற அவள், வழி யிலே சீதாவைப் பார்த்து தன் சாவியைக் கொடுத்து விட்டுப் போனாளே, அந்த நிகழ்ச்சியை நினைவுப்படுத்திக் கொண்டால் அவளைப் பற்றிய முழுச் சித்திரமும் புரிந்து போய்விடும்!

பலா மரத்தில் இந்த எட் டிக்கனி ஒட்டிச் சேர்ந்தது எங்ஙனம்?

'திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது' என்று சொன்னவனிடம்தான் இதற்கு விடை கோர வேண்டும்!

சமுதாயத்தில் தனக்கென ஒரு கௌரவத்தையும் நற் பெயரையும் தேடி வளர்த்துக் கொள்கிறவனை ஒரு வகையில் அபாக்கியவான் அல்லது அச டன் என்றே சொல்லலாம். ஏனென்றால் அவற்றைப் பெற்றுவிட்ட அவன் அவற் றின் காப்புக்காகத் தன்னைப் பல சமயங்களில் கோழையா கவும், அசக்தனாகவும் அடிமை யாகவும் ஆக்கிக் கொண்டு தனது உணர்ச்சிகளையும் விருப்பு — வெறுப்புகளையும் கொன்று குவித்தபடி தானே தன்னைக் கண்டு அனுதாபப் பட்டு அழுது புலம்பி வாழ வேண்டியவனாகி விடுகிறான். இது போன்ற கொடிய 'தண் டனை' பெற்றோரில், பாவம் ராமலிங்கமும் ஒருவராயிருந் தார் இல்லையானால் இன்று மாலை அந்தக் கோயில் மண்ட பத்தின் தூணில் தம்மை மறந்த நிலையிலே சாய்ந்து நின்று கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பாரா?

'சாவியை நான் அவரிடம் கொடுத்த போது அவர் முகம் ஏன் அப்படி வெளிறிச் சிறுத் தது? கையும் இலேசாக நடுங் கியதே' தம் மனைவி அந்தச் சாவியை என்னிடம் கொடுத்து விட்டுப் போன சூழ்நிலையிலி ருந்து அவளின் முறைகேடான நடத்தையைப் பக்கத்துவீட் டுக்காரியான நான் ஊகித்துத் தெரிந்து கொண்டிருப்பேனே என்று நினைத்து, அதனால் கிளர்ந்த அவமானத்தால்தான் அவர் அப்படி முகம் சுண்டிச் சிறுத்திருக்க வேண்டும்! எவ் வளவு பரிதாபகரமான நிலை இது!

சீதா கண்கலங்கி மனம்



தத்துவச் சிந்தனையோ
தனிமையின்
பெருந்தவிப்போ
எத்தனை பொருளம்மா
உந்தன் விழிப்
பார்வையிலே!

பதறினாள். அதைத் தொடர்ந்து ராமலிங்கத்தின் நற்குண நன்னடத்தைகளைப் பற்றிப் பிறர் வாயிலாகவும் தானாகவுமறிந்தும் புரிந்தும் கொண்டவற்றை இப்போது தன்னை மீறிய ஓர் ஆர்வத்துடன் எண்ணிப் பார்க்கலானாள். அப்படி எண்ணுவதிலே இதுவரை கிடைக்காத ஒரு புதுவகை ஆறுதலும் சுகமும் தன் மனத்துள் ஊற்றெடுப்பதை உணர்ந்து அதிசயத்தும் போனாள். ஒழுக்க நெறிப் பிரக்ஞையின்றி வாழும் தன் கணவனின் சிறுமைச் செயல்களை நினைத்து நினைத்து வேதனையால் மனம்நொந்து நைந்து கொண்டிருந்த அதேபோது ஓர் உத்தம மனிதரை ஊடே வைத்து நினைக்க நேர்ந்ததால் நிகழ்ந்த 'அதிசயமே' அது என்பதை அவளால் எப்படி அறியக் கூடும்?

எனவே அந்தப் புதுமையான அனுபவத்தில் எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தோம் என்பது அவளுக்கே தெரியாது போயிற்று. இரவு உணவுக்காக கீழேயிருந்து ரமணி குரல் கொடுத்த பிறகுதான் அந்தச் சுகானந்தலயம் கலைந்து எழுந்து கீழே இறங்கிப் போனாள்.

7

நாட்கள் சில நடந்தன. சீதாவின் அகப் போக்கிலும் புறப் போக்கிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அவற்றில் சிலவற்றை அவள் தெரிந்தும் தேர்ந்தும் திட்டமிட்டும் செய்து கொண்டாள். சில அவளுக்குத் தெரியாமலே அவளிடம் தொற்றித் தொடர்ந்தன.

அநேகமாக அவள் பிறர் காரியங்களையோ நடவடிக்கைகளையோ, விஷயங்களையோ அதிகம் கவனிப்பதில்லை, கண்டு கொள்வதில்லை, கேட்டறிய அக்கறை காட்டுவதுமில்லை. இது அவளிடம் ஓர் இயற்கைக் குணமாகவே ஊறிப் போயிருந்தது இதனால் உலக நடப்புகள் மட்டுமின்றி ஊர் நிலவரங்கள்கூட தேவையளவுக்கும் குறைவாகவே அவள் தெரிந்திருந்தாள் உணவுப் பண்டங்களின் விலைகள், சவரன் விலை, சில ரக ஜவுளி விலைகள் முதலானவை பற்றி அவளிடம் கேட்டால் உண்டு, தன் வீட்டு வேலைகள் உண்டு — வேறு எதிலுமே நாட்டம் காட்டுவதில்லை, கவலைப்படுவதுமில்லை.


இப்படியெல்லாம் இருக்க வேண்டும் இவ்வாறெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்று அவளே எண்ணித் துணிந்து திட்டமிட்டு மேற்கொண்ட மாற்றங்கள் இவை. இன்னும் சிலவோ அவளுக்குத் தெரியாமலே அவளிடம் தொற்றித் தொடர்ந்தன.



சீவிமுடித்த சிங்காரக்
கூந்தலினே
காற்றுவந்து மோதி
கலைத்துவிட்டுப்
போனதுவோ

இன்னும் என் கடிதத்திற்கு
பதில் வரவில்லை!
என் கடிதம் போட்ட
இடத்திற்கு போய்ச்
சேரவில்லையோ?

அதில் சரியாக
விலாசம்
எழுதியிருந்தீர்களா?



ஒவ்வொரு நாளும் லட்சக்கணக்கான கடிதங்கள் தபாலில் சேர்க்கப்படுகின்றன. பலவற்றில் விலாசம் சரியாக இருப்பதில்லை. நீங்கள் அனுப்பும் கடிதங்களில் விலாசத்தை சிறிது கவனத்துடன் எழுதினால் அவற்றை விரைவாக பட்டுவாடா செய்ய வழி பிறக்கிறது. உங்கள் உற்றார் உறவினர்களுக்கு நீங்கள் எழுதும் கடிதங்கள் உரிய நேரத்தில் துரிதமாக போய்ச் சேருகின்றன. கீழ்க்கண்டவாறு தெளிவாகவும், சரியாகவும் முழு விலாசத்தை நீங்கள் எழுதினால் உங்கள் கடிதம் தாமதமின்றி உரிய இடத்திற்கு போய்ச் சேரும். விலாசத்தில் தபால் பிராந்திய எண்ணையும் குறிப்பிட மறவாதீர்கள்.

திரு. எஸ். பாலசுப்ரமணியன்,
எஞ்சினியர்,
38-ஸி, அடஞ்சாமுதலித் தெரு,
மந்தவெளிப்பாக்கம்,
சென்னை-28.

DAVP 67/104

இந்திய தபால் தந்தி இலாகா

பளீரென்று பதில் சொல்வாள். இதற்கு மேலே போய் ஏதேனும் கேட்டுவிட்டாலோ அவனைவிடக்கிணற்றுத்தவளை இன்னும் சரியாக விடைகூறி விடும்!

இத்தகைய குண இயல்புகளுக்குரியவளா யிருந்தவள் தான் இப்போது பிறர்பற்றிய விஷய சேகரிப்பில் பெருமளவு சிரத்தையும் ஆர்வமும் காட்டத் தொடங்கினாள்.

அன்றொருநாள் மாலை.

பேராசிரியர் ராமலிங்கம் கல்லூரியிலிருந்து வீடு திரும்பியசற்றைக்கெல்லாம் பையை எடுத்துக் கொண்டு கறிகாய் வாங்கப் போனதைத் தன் வீட்டிலிருந்தவாறே கவனித்தாள் சீதா. அவர் சென்ற ஒரு பதினைந்து நிமிடங் கழித்து அன்றொருநாள் காரில் பார்த்த அதே வாலிபன் ஸ்கூட்டரில் வந்து இறங்கினான். நளினி வாசலுக்கு ஓடிவந்து அவனைக் கைகுலுக்கி வரவேற்று உள்ளே அழைத்துச்சென்றாள். அப்புறம் ஓர் ஐந்து நிமிடங்களுக்குப்பின் அவளது பிள்ளைகள் இருவரும் மிட்டாய்க் கடையை நோக்கி ஓடினர். அதன் பிறகு ஓர் இருபது நிமிடங்களில் வாலிபன் புறப்பட்டுப் போய்விட்டான். பிள்ளைகள் கைநிறைய சாக்லட்டுடன் குதிபோட்டுக் கொண்டு வந்தனர். ராமலிங்கமும் பை நிறைய காய்கறிகளுடன் வீடு வந்து சேர்ந்தார். ஒரு மணி நேரத்திற்குள் நடந்து முடிந்தது இக்காடகம்.

இவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந்த சீதாவுக்கு எல்லாம் புரிந்து போயிற்று. அவளது கணவனும் கிட்டத்தட்ட இதே போன்றதொரு நாடகம் நடத்தியதைச் சில நாட்களுக்கு முன் கண்டறிந்து அனுபவப்பட்டவள் அல்லவா? அதனால் சந்தேகத்துக்கு இடமின்றி இதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

'அடி, பாவி! நாசகாரி! ஏன் இப்படி அக்கிரமத்தால் அழிகிறாய்? நீயும் ஒரு பெண்தானே உனக்கு என்ன கதி கிடைக்கும் தெரியுமா? நீ அழிந்து



வீதியில்சென்றுகொண்டிருந்த கழுதையைகாட்டி "இதோ உன் உறவு வருகிறது பார்" என்று சொல்லிச் சிரித்தான கணவன்.

அது கேட்ட மனைவி "ஆமாம் அது நான்புகுந்த வீட்டு உறவு" என்றாள் அமைதியாக.

போவாய்! சீக்கிரமே அழிந்து போவாய்!'

வெறுப்பின் எல்லை கடந்த வளாய் கோபாவேசத்தோடு நளினியைத் தன் மனத்துக் குள்ளாகவும் வாய்விட்டும் வைது தீர்த்தாள் சீதா. உடனே அவளுக்கு அழுகை வெடித்துக் கொண்டு வந்து விட்டது விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டாள் அந்தப் படுமோச துரோகத்துக்குள்ளான ராமலிங்கத்தை எண்ணி அவர்மீது ஏற்பட்ட பரிவினாலும் இரக்கத்தினாலுமே அவள் அப்படி மனம் குமுறிப் புலம்பித் தீர்த்தாள். அத்துடன் ஒரு விநோதமான யோசனையும் அவளுக்குத் தோன்றியது 'பாவம், நல்ல மனிதர் இனியும் இதுபோன்ற துரோகத்துக்கு உள்ளாகாமல் சாந்தியும் மகிழ்ச்சியும் பெற, நானே ஏதேனும் கடின விரதங்களை மேற்கொண்டால் என்ன?

சீதா மட்டுமே ராமலிங்கத்தின் மேல் இத்தகையதொரு மாசற்ற பாவனார்ச்சிகொண்டு அவரை மானசீகமாகப் போற்றியும் கௌரவித்தும் வந்தாள் என்பதோடு, ராமலிங்கமும் அவளை இதே வகையில் எண்ணி மதிக்கிறார் என்பது ஒரு சிறு தகவல் மூலம் தெரியலாயிற்று.

ராமுவும் ரங்குவும் பக்கத்து வீட்டில் போய் விளையாடுவது போல அந்த வீட்டுப் பிள்ளைகளும் இங்கு வந்து விளையாடுவது உண்டு. ராமலிங்கத்தின் பிள்ளைகளானதால் அவர்களை சீதா இப்போது மிகுந்த பாசம் காட்டி நேசித்தாள். அவர்களுக்குப் பட்சணங்கள் கொடுப்பாள்; முகம் கழுவித் தலைவாரி விடுவாள். அவர்களோடு விளையாடியும் பேசியும் மகிழ்வாள். அப்படிப் பேசிக் கொண்டிருந்தபோது ஒரு நாள் சிறுவன் கமலன் சொன்னான்:

"மாமி! உங்களைப் பத்தி எங்க அப்பா என்கிட்ட என்னென்னமோ சொல்றாரே!"

'என்னடா கண்ணு, சொன்னார்?"

"நீங்க ரொம்ப ரொம்பநல்லவங்களாம்!"

"அப்புறம்?"

"எங்களுக்கு நீங்க அம்மா வாயிருந்தா நாங்க ரொம்ப வும் சந்தோஷமாயிருப்போ மாம்! எங்க அப்பாவும் அதே மாதிரி—"

சட்டென்று தாவிப்போய் சிறுவனின் வாயைப் பொத்தி விட்டுக் கல கல வெனச் சிரித்தாள் சீதா. 'சரி, சரி போய் விளையாடு!' என்று அவனை அனுப்பிவிட்டுஉடனே அந்த அறைக் கதவைச் சாத் திக் கொண்டாள். தனக்கேற் பட்ட ஏதோ ஓர் அதிர்ச்சியி லிருந்து தன்னைச் சமாளித்துக் கொள்ளவே அவள் அவ்வாறு செய்தாள்.

இன்னொரு நாள். அன்று ஞாயிற்றுக் கிழமை பகல் உணவுக்குப் பின்; கட்டிலில் சாய்ந்து வெறுமே வெறுமே கண்ணை மூடிக் கொண்டிருந் தாள் சீதா. அப்போது அவள் வழக்கம்போல் ராமலிங்கத் தின் மேன்மையான குண நலன்களையும், இனிய பண்பு களையும், நெறி முறையான நடத்தைகளையும்பற்றி யாரோ புகழ்ந்து சொல்லக் கேட் டதை மீண்டும் தன் நினைவில் இழுத்து வைத்துக்கொண்டு ஒருவிதபிரமிப்புடன் அவற்றை மனத்துள் அசை போட லானாள்.

இந்தச் சமயம் அவளது முதுகை மெல்ல வருடியது ஒரு முரட்டுக் கரம், அதை உணர்ந்தும் உணராத மயக்க நிலையிலிருந்த சீதா நெளிந்து நெட்டுயிர்த்தபடி அந்தக் கரத்தை இதமாகப் பற்றி இழுத்து மார்பிலே சேர்த்துக் கொள்ளப் போனவள், திடீ ரென்று அதைத் தன் பலங் கொண்ட மட்டும் உதறித் தள்ளிவிட்டு வீறிலன அலறிய படி துள்ளி யெழுந்து உட் கார்ந்தாள் அதே சமயக் கட் டிலின் விளிம்பில் ஒருக்களித் துச் சாய்ந்திருந்த ரமணி அப் படியே உருண்டுகீழேவிழுந்து விட்டான்! ஆயினும் உடனே எழுந்து கொண்ட அவன் அவ ளைப் பார்த்து அசடு வழியச் சிரித்து, "சரி, தூங்கு! தூங்கு!' என்றவாறு அடுத்த அறைக் குப் போய் விட்டான். இம் மாதிரி எதிர்ப்பு தோரும் சம யங்களில் அவன்எப்போதுமே கோபித்துக் கொள்ள மாட் டான் அனுபவசாலி அல் லவா?

சற்றைக்குப் பின் சீதா சுயத் தெளிவு பெற்றாள் எனி னும் அவளது உடலின் நடுக் கம் மட்டும் நீங்கவில்லை ஏன் இப்படி நடந்து கொண்டாள்? தன் கணவனை இந்த வகை யில் ஒதுக்கவோ, இவ்வள வுக்கு அவனிடமிருந்து ஒதுங் கிப் போகவோ அவள் கனவி லும் கருதியதில்லை என்பது சர்வ நிச்சயம். ஆயின் இவ் வாறு நடந்து கொள்ளக் கார ணம்? அதைக் காரணத்தைக் கண்டு பிடிப்பதே அவளுக்கு வேதனை நிரம்பியதோர் அனு பவமாகி, அதனால் அதை அடியோடு மறக்க முற்பட் டாள்!

9

இந்தச் சம்பவம் நடந்த ஒரு வாரத்துக்குப் பின் ஒரு நாள் இரவு, எட்டு மணி இருக்கும்.

பிள்ளைகளுக்கு உணவூட்டி முடித்த சீதா, அவர்களை மாடி யறையில் தூங்கப் பண்ண அழைத்துச் சென்றாள். கீழே ரமணி செய்தித்தாள் படித் கொண்டிருந்தான்.

பிள்ளைகள் தூங்கியபின் அவ்வறையை விட்டு மாடி வராந்தாவுக்கு வந்த சீதா, கிராதியைப் பிடித்தபடிநின்று கொண்டு பக்கத்து வீட்டை நோக்கித் தன் பார்வையைச் செலுத்தினாள்.

நளினி அப்போது வெளியில் எங்கேனும் சென்றிருப்பாள் போலும். வீட்டில் சந்தடி ஏதும் இல்லை. பிள்ளைகள் தூங்கி விட்டிருக்கலாம். ஓர் அறையில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அது ராமலிங்கத்தின் படிப்பு அறை இந்த மாடி வராந்தாவுக்கு நேரெதிரே அந்த அறை இருந்தது. ஆனால் அவ்வறை யிலிருப்பவர்களை இவ்வராந் தாவிலிருந்தோ, இங்குள்ள வர்களை அங்கிருந்தோ பார்க்க முடியாது.

ஏதோ ஆசையிலிருந்த சீதாவின் கவனத்தை ஒரு நீண்ட நிழல் கவர்ந்தது.

அந்த நிழல் ராமலிங்கத் தின் படிப்பறை சன்னல் வழி யாக வெளியே வந்து முள் கம்பி வேலிக்கு இப்பால்வரை நீண்டிருந்தது. சந்தேகமில்லை; அது ராமலிங்கத்தின் நிழல் தான். அவர் அவ்வறையில் உலாவிய படி படித்துக் கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் அந்த நிழல் ஓரி டத்தே நிலையாக நில்லாமல் அப்படியும் இப்படியுமாக மெல்லப் போய் வந்துகொண் டிருந்தது.

இதைக் கவனித்த சீதா வுக்கு இன்னொரு நிழலும் தென்பட்டது. அது அவளின் நிழலேதான். வராந்தாச் சுவ ரில் பொருத்தியிருந்த மின் விளக்கின் ஒளி முதுகுப் புறத்தே பாய்ந்து அவளின் நிழலைக் கீழே தரையில் வீட் டிப் போட்டிருந்தது.

தன் நிழலையும். ராமலிங்கத் தின் நிழலையும் வெகு சுவை யாக ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த சீதாவின் மனத்தில் ஒரு விசித்திர

ஆசை கிளர்ந்தது கிராதியை பிடித்துக் கொண்டே தான் நின்றிருந்த இடத்தைவிட்டு மெல்ல நடந்தாள். அவளோடு அவளின் நிழலும் நகர்ந்தது. ராமலிங்கத்தின் நிழலை நோக்கியே அது நகர்ந்தது.

ராமலிங்கம் இப்போது உலாவாமல் நின்று படிக்கிறார் என்பதை அசைவற்றிருந்த அவரது நிழல் உணர்த்தியது.

மெல்ல மெல்ல நகர்ந்து நெருங்கிய சீதாவின் நிழல் ராமலிங்கத்தின் நிழல் மீது ஒன்றிச் சேர்ந்து படிந்தது. மூன்கம்பி வேலியில் அவ்விரு நிழல்களும் குத்தித் தொற்றிக் கோண்டாற் போன்ற ஓர் அசைவற்ற நிலை

ஒரு விநாடிதான், மறுவிநாடி சீதாவின் நிழல் சட்டென்று மாடி வராந்தாவுக்கே ஏறிக் கொண்டது.

அடுத்த நாள் முதல் மாடிக்குப் போவதை அடியோடு நிறுத்திவிட்டாள் சீதா. பிள்ளைகளைக் கீழேயே தூங்கப் போட்டாள். வெளியில் அதிகம் தலை காட்டுவதில்லை. வெளிச்சமான இடங்களில் நடமாடுவதில்லை. விளக்கொளியை கண்டாலே அவள் நடுநடுங்கினாள். அதாவது அவ்வொளியால் பிறக்கும் தன் நிழலைப் பார்க்க அஞ்சினாள். அப்படிப் பார்த்து விட்டாலோ பேயைக் கண்டு பயப்படுவது போல் ஒடி எங்காவது ஒரு மூலையில் ஒடுங்கி முடங்கி உட்கார்ந்து கொள்வாள். அல்லது விளக்கை அணைத்து விடுவாள். சில சமயம் வெறி பிடித்தவள் மாதிரி தன் நிழலின் மீது தானே காறித் துப்புவாள். கால்களால் அதை உதைத்து மிதிப்பாள்

ஏழெட்டுத் தினங்களுக்குள்ளாகவே அவள் ராதி உடம்பாகமெலிந்து உருமாறிப் போனாள். சோக நோய் பீடித்தவள் போல் எந்நேரமும் சோர்ந்து படுத்தே கிடந்தாள்

10

ஒன்று வெள்ளிக்கிழமை

இட மாற்றத்தால் பிள்ளைகள் தூங்கு வதற்கு முரண்டு பண்ணினர். என்ன சொல்லியும் கேட்கவில்லை.

"சரி! இன்று ஒரு நாளைக்கு மட்டும் மாடியறையில் படுக்க வைத்து விடுவோமே" என்று எண்ணியவளாய் வெளிக் கதவைச் சாத்திவிட்டுப் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு மாடிக்குச் சென்றாள் சீதா.

படிகளில் ஏற, மாடி வராந்தாவின் விளக்கைப் போட வேண்டும். அப்புறம் இருட்டிலே பிள்ளைகள் தூங்குமா? அந்த அறை விளக்கையும் போட வேண்டும். இரண்டையும் போட்டாள். சீக்கிரமாகவே பிள்ளைகள் தூங்கி விட்டார்கள். ஏதோ நினைப்பிலே எழுந்தவள் நேரே வராந்தாவில் வந்து நின்றாள்.

என்ன சோதனை! அன்று போல் இன்றும் அடுத்த வீட்டுப் படிப்புஅறை சன்னல் வழியாக ராமலிங்கத்தின் நிழல் வெளியே நீண்டு, மேலுங் கீழுமாக உலாவிக் கொண்டிருந்தது.

இதைப் பார்த்து விட்ட சீதா சட்டென்று தன் நிழலையும் திரும்பிப் பார்த்தாள். அது ராமலிங்கத்தின் நிழலுக்கு அருகில் நீண்டு கிடந்தது.

அந்த நிழலையே ஒரு கணம் வெறித்துப் பார்த்த அவள் என்ன நினைத்தாளோ? திடீரென்று துள்ளித் திமிறிக் கிராதியின் மேல் ஏறி நின்று அப்படியே தன் நிழலை நோக்கி – அதை உதைத்து மிதிக்கும் ஆவேசத்தோடு — கீழே குதித்து விட்டாள்.

அதேசமயம் எங்கோபோய் தன் ஆத்மாவில்சேற்றைவாரிப் பூசிக்கொண்ட ரமணி கனைப்புடன் வாயில் கதவைத்திறந்து கொண்டு உள்ளே வந்தான்

"திரு. மு. க." ஆகவில்லை
தி. மு. க. ஆனேன்!


சிந்துபாடும் அருவியென சிதம்பரனார் பெருகி வந்தால்
வண்டுபாடும் தமிழ்த்தென்றல் வாராமல் இருந்திடுமோ?
தாய் அகத்தில் சுரக்கின்ற உணர்வோடு
தாலாட்டு மொழியினிலே விடுதலைக்குப்
போராடி வெற்றி கண்ட மாவீரர்-அவர்; என்
திருவாரூர்ப் பிறந்ததனால், "திரு. வி. க." ஆகிவிட்டார்;
நானே...
"திரு. மு. க" ஆகவில்லை. தி. மு. க. ஆகிவிட்டேன்.

உலகத் தமிழ் மாநாட்டில் நடைபெற்ற
கவியரங்கத்தில் திரு. வி. க. பற்றி
கலைஞர் கருணாநிதி பாடியது.




தலைவலியா?
அமிர்தாஞ்சனம்
தடவுங்கள்
சங்கீத சபா
சுகமான தூக்கத்திற்கு
டனிலாட்
மெத்தையை
உபயோகியுங்கள்
ஸ்ரீமத்
பாகவதாள்
உபன்யாசம்
விளம்பரப்...
சுறுசுறுப்பு
தருவது
லிப்டன்ஸ்
டீ
சினிமா
திருப்பதி


வயிற்றுக் கோளாறு?
இதோ
ப்ரூட்ஸால்ட்
சாப்பிடுங்கள்
தலைவலியால்
அவதிப்படுகிறீர்களா?
தலைவலி போக
சாப்பிடுங்கள்
போரப்பன்
மடோரியல்
கல்லூரி
...பொருத்தம்
கார்டிரைவிங்
பயிற்சிப் பள்ளி
ஜோதி
வேஸ்ட்
பேப்பர் கம்பெனி
இங்கு
பழைய
புத்தகங்
கள் முறு
கனக்க
நல் வாங்
கப்படும்


என்ன-காங்கிரஸ் கவர்ன்மென்ட்ல
பொதுத்துறையிலே லாபம் வருதா?-
நல்லா பாரு கணக்குல
ஏதாவது தப்புகிப்பு
இருக்கப் போவுது
FILE


இந்த முறை நான்
வெளிநாட்டுக்குப் போறது
கடன்வாங்க அல்ல-
இங்கதான் உன்னிப்பா
கவனிக்கணும். வாங்கிய
கடனுக்கு வட்டிதர-
அந்த வட்டித் தொகை
யைத்தான் கணக்க
வாங்கப் போறேன்!
AIR BAG



குறள் வடிவங் கொண்டதுபோல் அறிவின் மேன்மை,
கூர்த்தமதி, உலகுணரும் பரந்த கொள்கை,
குறள் வடிவ நெப்போலியன் லெனினைப் போன்ற
குறுவடிவம், விரிந்தமனம், உயர்ந்த நோக்கம்!
திறல்வடிவச் சர்ச்சில்போல் தெளிந்து தேர்ந்த
செயல்வடிவம்! வீரத்தின் வெற்றிச் சின்னம்!
அருள்வடிவ இராமலிங்கர் எளிமை, தூய்மை
அறவடிவ அப்பரைப்போல் தொண்டில் நாட்டம்

கேட்டவரின் மனக்கதவைத் தட்டி உள்ளே
கிறுகிறுப்புத் தென்றலெனக் கருத்து வீச
வாட்டுகின்ற இதயத்தில் உழுது மெல்ல
மறுமலர்ச்சி வித்தூன்றச் செய்வார்; என்றும்
ஏட்டளவுக் கல்வியிலா ஏழை மாந்தர் —
எதற்காக? ... எப்படி? ஏன்? என்று கேள்வி
கேட்டறிவைத் தூண்டிவிட்ட தலைவர்; போலிக்
கிளர்ச்சிகளால் வளர்ச்சிபெற்ற தலைவர் அல்லர்!

பாரதத்துப் போர்க்களத்தில் கர்ணனோடு
பார்த்தனவன் ஆர்த்தெழுந்து மோதும் போது...
சாரதியாய் வீற்றிருந்த ஞானக் கண்ணன்
சரம் பாய்ந்து வருவதனைத் தவிர்ப்ப தற்கு,
மாரதத்தைக் கீழழுத்தி, வீர மாக
மைத்துனனைக் காத்ததுபோல்— கழகங் காக்க
வீரகத்து வம்புரிந்து வினைசெய் அண்ணு
விடுதலையைக் கோருவதை விடுத்தார் அன்று!



தாய்மொழி இகழேல்

கவிஞர் முடியரசன்

தமிழ்நாட்டின் சிறப்பினைத்தும் சொல்ல தென்றல்
தனிப்பிறவி எடுத்தவர்க்கும் இயலா தாகும்;
அமிழ்தூற்றும் தமிழ்மொழியின் பெருமை சொல்
ஆயிரம்நா போதுவதோ போதா வாகும்;
தமிழ்காட்டும் சிறப்பினைத்தும் நாமே சொல்லித்
தற்பெருமை கொள்ளவிலலை; உலக மெல்லாம்
இமைகூட்ட மனமின்றி விழித்து நோக்கி
எண்ணரிய வியப்பெய்திப் போற்றக் கண்டோம்
நல்லுள்ளங் கொண்டவர்கள் தமிழ்மொ ழிக்கு
நன்மைசெய முற்பட்டால் வாழ்த்த வேண்டும்
அல்லுள்ளங் கொண்டவரோ மாறுப்ப் பேசி
அவர்புலமைக் கேற்றபடி ஏள னங்கள்
சொல்லுவதிங் கிபல்பாகக் கொண்டார், அந்தத்
தூயவரும் தமிழினமாம்; பகிர்ந்து ரைக்கும்
புல்லுள்ளங் கொண்டவர்க்கும் தமிழே தாயாம்;
புரியாராய் ஏசுகின்றார் அவர்தம் தாயை.
பேருந்து வண்டிகளிற் குறுகீக் கண்டால்
பேருவகை தமிழ்நெஞ்சிற் பொங்க வேண்டும்
யாரந்தக் குறளெழுத முனைந்தா ரோஇங்
செவர்மனத்துத் தோன்றியதோ எனவி யந்து
பாரெங்கும் அவர்பெயரை வாழ்த்த வேண்டும்
பைந்தமிழ்க்கு நற்காலம் வந்த தென்று;
யாரிங்கு வாழ்த்துகின்றார்? பொல்லாங்கன்றே
யார்யாரோ புகல்கின்றார் பித்தர் போல;
எங்கெங்குக் காணினுமே தமிழ்தான் என்ற
இயல்புநிலை இங்குவர வேண்டு மென்று
பொங்குகிறோம்; ஒரிரண்டு நிலையிலேனும்
பூத்துளதே தமிழென்று மகிழ்கின் றோம்நாம்;
மங்கியவர் எள்ளிநகை யாடு கின்றார்;
மல்லிகைப்பூ வராகத்தால் நுகர்தல் உண்டோ?
இங்கிவர்தாம் திருந்திவரும் நாள்தான் என்றே?
இனியதமிழ் இகழ்வதுவா கட்சி யாகும்?
தாய்மொழியை வளர்ப்பதிலே கட்சிப் பூசல்
தலைகாட்டக் கூடாது தமிழர் யார்க்கும்
தாய்மொழியை வளர்ப்பதிலே உரிமை யுண்டு;
தத்தமக்கு முடிந்தவரை முயல வேண்டும்;
தாய்மொழியை வளர்ப்பதிலே சாதி வேண்டா
சாதியினைப் புகுத்துவது சதியே யாகும்;
தாய்மொழியை வளர்ப்பதிலே சமையம் வேண்டா
சமையம்வளர் மொழியமிழும் நினைவிற் கொள்க

அறிவுக் களஞ்சியம்

காயிதேமில்லத்முகம்மது இஸ்மாயில்

பொங்கல் திருநாளைக் குதூகலமாய்க் கொண்டாடும் அன்புள்ள அனைவருக்கும் கனிவும் களிப்புங்கொண்ட நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

கிறிஸ்தவ நண்பர்களின் வருட தினமும் முஸ்லிம் களது ஈதுப்பெருநாளும் இப்பொங்கல் திருநாளும் இவ் வாண்டில் அடுத்தடுத்து வந்திருப்பது. அரிய தொரு நிகழ்ச்சியாகும். அது மட்டுமல்ல.

முன்பு பல பொழுது பருவகால மழைக் குறைவினல் நாடு நலங்குன்றி வாடிய நிலைமை போய்ப் பெருமழை பெய்து நாடு செழித்துமக்கள் மகிழும் நிலையைக் காணுவது இப்பொங்கல் நாள். இது சமயம் நம் தமிழ் நாட்டின் பொன்னற் களஞ்சியம் நிறம்பி அண்டை நாட்டுக்கும் வடிவதாயிருக்கின்றது.

இவ்வேளை நிறைவு பெறுவது நெற்களஞ்சியம் மாத் திரமன்று. நமது பொது அறிவுக் களஞ்சியமும் பெருமைக் குரிய விதத்தில் நிறம்பிவருகிறது.

அனைத்துலக நாடுகள் இரண்டாவது தமிழ் மாநாடு நம் தலைநகரில் தமிழக அரசினர் பெரும் ஆதரவிலே கூடி இரண்டொரு நாடகளுக்கு முன்புதான் நிறைவு பெற் றது. அன்புடன் அதில்கூடிக் கலந்துகொண்ட நாற்பதுக்கு மேற்பட்ட வெளிநாடுகளின் பிரதிநிதிகள் உட்பட 400க்கு அதிகமான பல்கலைப் பெரும் புலவர்கள் நந்தமிழையும் தமிழ் மக்களையும் பற்றிய தம் தம் பேரறிவுகளைப் பரி மாறிக்கொண்டு நமது பொது அறிவுக் களஞ்சியத்தைப் பெருகச் செய்து பணியாற்றியிருக்கின்றார்கள். வெளிநாடு



களின் பிரதிகள் இப்பொங்கல் பெருநாளிலும் தமிழ்நாட்டில் நமது அன்பு விருந்தினராயிருந்து நாட்டவர் இந்நாளில் மகிழ்வதைக்கண்டுகளிக்கின்றனர்.

மேலும், திடமனதுக்குத் திடவுடம்பு வேண்டுமென்ற உண்மைக்கு இலக்காய் பல நாட்டவர் விளையாட்டு விழாவும் இங்கே, விறு விறுப்புடன் நடந்து இச்சமயத்துக்குச் சிறப்புச் சேர்க்கின்றது.

தவிர, உழவு வளத்துடன் தொழில் வளத்தையும் சிறக்கச்செய்யவல்ல கைத்தொழில்கள் படைத்த அரும்பொருள்களின் பிரமாண்ட காட்சி ஒன்று தமிழ்நாட்டுத் தலைநகரில் இன்னும் சில வாரங்களில் நடைபெறுவதற்கான பெரும் ஏற்பாடுகள் இவ்வமயம் நடந்துகொண்டிருக்கின்றன.

சின்னாட்களுக்கு முன்னர் மதிப்புக்குரிய இந்தியப்பெருநாட்டின் தலைவர் நம்மிடையே வருகை தந்துபோது பழங்காலமுதல் இயங்கிவரும் தமிழ்நாட்டின் உயர் பண்பும் அதன் இன்றையக் கோரிக்கைகளும் அவர் மனதில் இனிதே பதியும்படி அரசினர் செய்தவிதம் இன்றுமக்கள் மனக்கண்முன் நிற்கின்றன.


முக்கியமாகத் தாய் மொழியாம் இனிய தமிழையும், அதன் வளர்ச்சியையும் பெருமையையும் காப்பான் வேண்டி ஆட்சியாளர் கொண்டிருக்கும் தெளிவான உறுதியை இச்சமயத்தில் மக்கள் ஆழ்ந்த திருப்தியுடன் எண்ணிப் பாராட்டுவதும் இயற்கையே.


இத்தன்மைய சிறப்புகளாலும் இன்னும் பல மகிழ்ச்சி சாதனங்களாலும் சூழப் பெற்ற இவ்வாண்டுப் பொங்கல் நன்னாள் தனிப்பெருமையுடையதாகின்றது.

இத்துணை சிறப்புக்குவியலையும் மகிழ்ச்சிப் பொருக்கையும் தி. மு. க. அரசினர் தமது ஆட்சித்துவக்க ஆண்டிலேயே காணக்கிடைத்தது உண்மையாகவே பெருமிதத்துக்கும் பாராட்டுதலுக்கும் உரியதாகும். இவ்வாய்ப்பு இன்றைய வெற்றிக்குச் சான்று பகர்வது மட்டுமல்ல; இனி வரும் காலத்துப் பெரு வெற்றிக்கும் மகிழ்ச்சிக்கும் திடமான நல்ல அறிகுறியாகவும் அமைந்திருக்கின்றது.

நாடும் நல்லரசும், மக்களும் அவர் தம் மாண்பும், பெருகும் வெற்றியுடன் நலன் மிகப் பெற்று இனிதே வாழ்! வாழ்க! வாழ்கவே!

THE
INDIAN OVERSEAS BANK LTD.
(Central Office: 151, Mount Road, Madras-2).
With Branches in India, Ceylon,
Hongkong, Malaysia, Singapore
and Thailand and with world wide
agency arrangements
The Indian Overseas Bank Limited
Offers you
A Comprehensive Banking Service
Please contact your nearest branch for full particulars regarding our:
* Recurring Deposits
* Gift Cheques
* Travellers' Cheques
* Minors' Savings
* Personal Loans
Chairman: M. CT. Muthiah
General Manager: G. Lakshminarayanan.


டைரக்டர்
புரடியூசர்
நவர்கள்...
ஹீரோயின்
காமராமேன்
...கதையைக்கேட்டுச் சரியாக
இப்படியும் அழுதிடலாம்!



DADDY, IT'S MY TURN NOW!

Photography captures not only your fancy, but a child's too! Kodak let you capture the warmth, the charm, the colour, the joy, the love of those special moments, moments to remember. □ For over 50 years, Kodak have been helping photographers with unceasing research, to perfect every picture... □ To capture memories that will live on and on... ask for:

Kodachrome or Ektachrome for transparencies, Kodacolor for colour prints and Kodachrome for movies


PHOTOGRAPHY IS SO EASY WITH KODAK!

Kodak Limited

(Incorporated in England with Limited Liability)

Bombay - Calcutta - Delhi - Madras

K. 6522



பொற்காலம் பிறந்தது

என்.வி. நடராசன் எம்.எஸ்.சி.

"கிளம்பிற்று காண் சிங்கத் தமிழர் கூட்டம்! கிழித் தெறியத் தேடுது காண் பகைக் கூட்டத்தை" என்று வீர முழக்கம் எழுப்பினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்! அந்த உணர்ச்சி வரிகளுக்குப்புத்துயிர்கொடுத்திட, பொங்கு கடல் என, சங்கத் தமிழர்கள் சிங்காரச் சென்னையில் பவனி வந்தார்கள்!

அந்த உறுதி ஏற்பட்டதும் என் எண்ணம் எங்கோ சிறகு கட்டிப்பறந்தது!

தமிழின் ஏற்றத்துக்காக தன்னைத் தூக்கு மரத்துக்கு அர்ப்பணித்துக் கொண்ட உடையார்பாளையம் வேலாயுதம் என் நினைவில் வந்தார்!

சிரித்த முகத்தோடு சிறை சென்று, சிதைந்த உயிரோடு வெளிவந்த தாளமுத்து நடராசனின் எழில் உருவங்கள் என் நினைவுத் திரையில் நிழலாடியது!

உயிரையும் தமிழுக்கு உடலையும் தமிழுக்கு ஈந்து வெந்தணலில் வெந்து மடிந்திட்ட சின்னசாமி, சிவலிங்கம், அரங்கநாதன் ஆகியோரின் அழகுத் திருமுகங்கள் என் கண்களை பணிக்கச் செய்தன!


தடியடிகளைத் தாங்கி, துப்பாக்கிவேட்டுகளுக்குத்துவண்டு

தெருவெல்லாம் தமிழ் முழக்கம்! இல்லந்தோறும் வெல்லத் தமிழ் விருந்து!

"கன்னல் தமிழே நீ ஓர் பூக்காடு, நான் ஓர் தும்பி!" என்று ரீங்காரமிட்டு, தமிழ் அமுதம் பருகிய தமிழர்களின் உள்ளமெலாம் உணர்ச்சி வெள்ளம்!

அன்னைத் தமிழகத்தின் அழகுத் தலைநகரில், அருமைத் தமிழ்மொழிக்கு விழா எடுக்கத் திரண்டிட்டஉலகத் தமிழர்கள் "உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு" என்று வீர முழக்கம் எழுப்பிய காட்சியைக் கண்டிருந்தால், சேரன் சிரித்திருப்பான்! பாண்டியன் பரவசம் அடைவான்! சோழனின் முகத்தில் சுடரொளி தோன்றி இருக்கும்!

நமக்கே ஓர் ஐயம்! காண்பது கனவா அன்றி நனவா என்ற எண்ணம்! ஆனால் "தமிழர்கள் எதையும் தாங்கக் கொள்வார்கள்—தங்களிடம் உள்ளதை இழப்பதற்கு மட்டும் ஒருகாலும் சம்மதிக்கமாட்டார்கள்" எனறு தென்னகத் தலைவர் அறிஞர் அண்ணாவை வரமுழக்கம் செய்திருப்பதால், நாம் காண்பது கனவல்ல, நனவு என்ற உறுதி ஏற்பட்டது!



வீடாமல் வன்முறைக்கு, வெஞ்சிறைக்கு அஞ்சிடா மல் இன்னல்கள் பல ஏற்றுக் கொண்ட இலட்சியத் தமிழ் வீரர்கள் எல்லாம் என் மனக்கண்முன் தோனறினர்!

வீரத் தமிழர்கள் வெற்றி உலா வருவதற்குப் பாதை அமைத்துச் சென்ற அந்த பண்பாளர்களுக்கு நான் வீர வணக்கம் செலுத்திக்கொண் டேன்!

கண்ணீரும் செந்நீரும் கொட்டி வளர்ந்திட்ட நமது இயக்கத்தின் பணி வீண் போகவில்லை என்ற எண் ணம் மகிழ்ச்சி வெள்ளத்தை என் மனத்தில் ஏற்படுத் தியது!

தமிழ்மொழி வாழவும், தமிழ்நாடு ஏற்றம் பெறவும், தமிழர்கள் எழுச்சி பெற வும், மறுமலர்ச்சி இயக்கம் ஆகிய தி. மு. கழகம் மேற் கொண்ட பணி மகத்தான வெற்றி அடைந்து விட்டது என்பதை சென்ற வாரம் சென்னை நகரில் பொங்கி வழிந்த தமிழ் வெள்ளமே தக்க சான்று!

"தமிழக அரசு என்று எல்லோரும் அழைக்கும் போது, அந்தக் காலத்தில் சேர அரசு, சோழ அரசு, பாண்டிய அரசு என்று தனித்தனியாக அழைக்கப் பட்டு இருந்த தமிழகம், இன்று "தமிழக அரசு" என்று ஒரே பெயரில்—ஒற் றுமைப் பெயரில் அழைக்கப் படும்போது தமிழகத்தில் தோன்றிய மகத்தான மறு மலர்ச்சியை எண்ணி எண்ணி உள்ளம் பொங்குகிறது.

இந்த மகத்தான வெற்றிக் கெல்லாம் காரணமான நமது தனிப பெரும் தலைவர் அறி ஞர் அண்ணு அவர்களின் ஆற்றலை எண்ணும்போது அகில உலகமே அவரை கொண்டாடி மகிழ்கிறது!

தமிழகத்தின் முதல்வரான நம் அண்ணுவை, அகில உல கிலும் புகழ்பெற்ற மேதை ஆகாடு ராமசாமி அவர்கள் 'இவரே என் தலைவர்' என்று பாராட்டினரென்றால், அது உண்மையிலேயே அறிஞர் அண்ணு அவர்களின் மகத் தான பணிகளுக்கு சூட்டிய வெற்றி மாலை ஆகும்!

கடல் கடந்தான் ஒரு தமி முன்! கடாரம் வென்றான் மற் றொருவன்! கங்கை கொண்டான் பிறிதொருவன்! கனக-விசயர் தலையில் கல் லேற்றினான் இன்னொருவன்!

இவர்கள் எல்லாம் கடல் கடந்து சென்று தமிழின் பெருமையை நிலைநாட்டினர் கள்!

ஆனால் அண்ணு அவர் களோ! உலகத் தமிழர் களையெல்லாம் ஒருங்கே தமி முகத் தலைநகரில் திரளச் செய்து, தமிழ் அன்னைக்கு மணியாரம் சூட்டினர்! ஆகவே அறிஞர் அண்ணு அன்றோ, உலகம் வென்ற உயர் தனித் தமிழன்" என்று உலகத் தமிழர் போற்றும் ஒப்பற்ற தலைவர் ஆவார்!

அறிஞர் அண்ணு அவர் கள், தமிழுக்கு ஏற்றம் தந் தார், நாட்டைக் காத்தார், மக்களின் பசிபிணி போக் கினர், அவர்களின் அறிவுப் பசிக்கும் விருந்திடுகிறார். நல்ல சமுதாயத்தை உரு வாக்கி வளர்த்து வருகிறார்!

சுருங்கச் சொன்னால் அண் ணுவின் ஆட்சிக்காலம் தமிழ கத்தின் பெருமைக்குரிய வர லாற்றுக்கால கட்டம் ஆகும்!

இந்தியத் துணைக் கண்ட வரலாற்றில், குப்தர்களின் காலத்தை பொறகாலம் என்று வர்ணித்த சரித்திரப் பேராசிரியர்கள், தமிழர் களின் வரலாற்றில் சோழர் களின் ஆட்சியை பொற் காலம் என்று வர்ணித்த வர லாற்று அறிஞர்கள், இப் போது அண்ணுவின் ஆட் சியை "தமிழகத்தின் புதிய பொற்காலம்" என்று பொன் எழுத்துக்களால் பொறிக்கத் தவறமாட்டார்கள்!

உலகம் வென்ற உயர் தனித் தமிழன், நம உள்ளம் வென்ற ஒப்பற்ற தலைவன் அறிஞர் அண்ணு அவர்க ளது பொற்காலத்தில் நாம் வாழும் பேறு பெற்று இருக் கிறோம் என்ற பெற்றியை நினைக்கும்போது நெஞ்சம் நெகிழ்கிறது! அந்த மகிழ்ச் சியை, பொங்கல் பெருநாள்-தமிழர் திருநாள் இல்லந் தோறும், தமிழர் உளந் தோறும் வழங்கிடுமாக!

★



கபாடபுரம்

சிந்தனைச்சிற்பி

சி.பி.சிற்றரசு

அன்றோர் நாள், அலைகடலால் விழுங்கப்பட்டதாம் கபாடபுரம் அங்கேதான் மூதறிஞர்கள் கூடித் தமிழாய்ந்த முதற் சங்கம் இருந்ததாம். அறிஞர்கள் சிந்தனையிலாழ்ந்திருந்தபோது கொந்தளித்ததாம் அப் பெருங்கடல். அலைகள் விண்முட்டும் அளவுக்கு எழும்பி சிற்றத்தோடு கரை நோக்கிப் பாய்ந்து முதற்சங்க மாளிகை அதிலிருந்த காப்பியங்கள், இலக்கியச் சுவடிகள், இலக்கியப் பேழைகள் அவ்வளவும் மூழ்கடித்துத் தன் பெருவயிற்றில் அடைத்தபிறகு ஓய்ந்ததாம் கடல். சுவடிகள் நீரில் ஆழ்ந்தன. அறிஞர்கள் கவலையிலாழ்ந்தனர். தேடிப் பயனில்லை தேடினும் கிடைக்காது. சங்கத்தோடு மட்டுமல்ல. மீன வலைஞர்கள் வலைகள், கட்டுமரங்கள், வலைகள், அவர்கள் சேமித்து வைத்த பண்டங்கள், முத்துக் குவியல்கள். பவளப் பொதிகள் அவ்வளவும் கடலுக்கிரையாயிற்று. இழந்த பொருள்களை பெறலாம், இறவா இலக்கியங்களும் இறந்துவிட்டனவே. காலம் நம்மைக் கடுமையாகச் சோதித்துவிட்டதே என்ற கவலை மனத்தினராய், கண்ணீர் மல்க நின்ற அக்காவியக் கர்த்தாக்களை அழைக்க மதுரைக் காவலன் வந்தான்.

எழுந்திடுக! கவலையை விடுக! கண்ணீர் துடைக்க! காவியங்கள் போயின கடல் வற்றிற்று. இல்லை. அங்ஙனமே நீவிர் யாத்த சுவடிகள் அழிந்தன. உங்கள் அறிவாற்றல் அழிந்ததா நீர்

வற்றுதுபோல் உங்கள் நினை வாற்றலும் வற்றுது. கடல் அருகில் வேண்டாம். கூடல் மாநகரப் வாரும். அங்கே அழகான சங்கம் அமைக்க லாம். தங்கம் செய்யாததை சங்கம் செய்யும் என்பதை உங்களைவிட நானறிவேன்.

ஆகவேமூதறிஞர்கள் கூடல் மாநகரம் என்னும் மதுரை வந்தடைந்தனர். இரண்டாம் சங்கம் அமைக்கப்பட்டு கவி ஞர்கள், கலைஞர்கள் கூடி னர். தொடர்ந்தனர் அறிவுப் பயணத்தை என்றெல்லாம் படித்திருக்கிறோம். எனினும் அப் பெருவிழாவைக் கண் ணால் காணக் கூடிய வாய்ப் பில்லையே என்று கவலைப் பட்டுக்கொண்டிருந்த நாம் இத்திங்கள் முதல்நாள் அந்தக் கவலையைக் கைவிட் டோம்.

தமிழகத் தலைநகரத்தில் ஓர் பூப்புகார் ஒருபுறம். மற் றோர் புறம் பல்நாட்டுப் பேரறிஞர்கள் சொற்போர், ஆராய்ச்சி. கண்டதை, கேட் டதை, படித்ததை எல்லாம் எடுத்துரைக்கும் எழில் மாடம். ஒருபக்கம் இசை, ஒரு பக்கம் இயல், ஒரு பக்கம் நடனம், சென்னையா சாவிரிப் பூம்பட்டினமா-எல்லா சங்கங் களும் ஒன்றெனத் திரண்ட நீண்டகடற்கரை தமிழாய்ந்த தமிழுக்காக வாழ்ந்த, தமிழா கவே திகழ்ந்த மூதறிஞர் சிலை கள், மூதாட்டி ஔவையின் சிலை, கால்டுவெல், வீரமா முனிவர் போப் போன்ற மேல் நாட்டுப் புலவர்கள்.

இத்தனைப்பேர் வளர்த்த னர் தமிழை. யாம் என்ன செய்தோம் என்ற கேள்வி எழுமுன், இதோ! நாங்கள் அதற்காகவே உயிர் விட் டோம் எனகின்றன, சிவலிங் கம், அரங்கனதன், மாணவ மணி ராசேந்திரன் போன் றோர் கல்லறைகள்.

மொழிக்காக உயிர்விட்ட நாடு ஓரே ஒரு நாடு. அது தான் தமிழ்நாடு. உயிரைப் பிறரால் போக்கப்படாமல், தனைத்தானே மாய்த்துக் கொண்ட இளைஞர்களை பெற் றெடுத்தத் தமிழகம். தமிழன் னையே! நீ ஈன்ற மக்கள் வீணர்களல்ல, வீண்பொழுது போக்குகிறவர்களுமல்ல, விதண்டாவாதங்களும் புரி கின்றவர்களுமல்ல, வீழி போன்ற மொழிக்காக எக் காலம் தோன்றியது என்று அறுதியிட்டு சொல்ல ஒண் ணுத- செறிந்த கருத்தும் நிறைந்த இலக்கணத்தையும் பெற்றிருக்கும் தமிழுக்காக உயிர் துறந்தனர். இன்னும் உயிரோடிருக்கும் நாம் அவர் கள் கல்லறையின் முன் கண் ணீர் சிந்துகிறோம். வெறும் புகழுக்காகவே அந்த வீர மற வர்கள் வெந்தழலாயினர் என்பது மடமை. அவர்கள் புகழ் இன்னும் சில நூற் றாண்டுகளில் மறைந்து விட லாம். அவர்கள் வாழ்ந்த கண்ணியமிக்க பெருவாழ்க்கை முடிவுரை கூறிவிடலாம். ஆனல் அந்தக் கௌரவமிக்க பெரு மக்கள் எந்த நோக் கத்திற்காக தங்கள் இன்னு யிர்களை ஈந்தார்களோ, அந்த நன்நோக்கம் உலக வரலாற் றின் இறுதிக் காலம் வரையி லும் நிலைத்து நிற்கும். நம்மையறியாமலும் தம்மை நிலையாமலும் அவர்கள் செய்த தியாகம் அதன் முழுப் பொருள் கொண்ட போலி வோடு நிற்கின்றது.

காலம் எத்தனையோ கல் லறையைக் கண்டிருக்கிறது. வாள் பாய்ந்து சாய்ந்தவர்கள் அரியாசனத்திலே இருந்து கீழே தள்ளப்பட்டவர்கள். பாகப்பிரிவினையால் பதைக் கப் பதைக்க வெட்டப்பட்ட வர்கள் மண்ணுசையால் மண் மேடானவர்கள். பொன்னு சையால் இருந்ததை இழந்த வர்கள். பெண்ணுசையால் கோட்டை கொத்தளங்களை விட்டவர்கள். நீரில் மூழ்கி மாண்டவர்கள். கார் மோதிச் செத்தவர்கள். அளவு கடந்த துக்கத்தாலே துஞ்சியவர்கள், அளவுக்கதிகமான மகிழ்ச்சி யாலே இறந்தவர்கள் அவ்வ ளவு பேரையும் பார்த்திருக் கிறது. ஆனல் ஒரு மொழிக் காக மாண்டவர்கள் வெகுச் சிலரில் மிகச் சிலரே. வாழ்க் கையிலே சில தவறுகள் செய் வது இன்றியமையாதது என்ற நிலையில் அவர்கள் இங்கொன்றும் அங்கொன்று மாகச் சில தவறுகளை செய்தி ருந்தால்கூட அவற்றிற்கெல் லாம் மேலாகத் தியாக மலையின் உச்சியிலே போய் நின்றுவிட் டார்கள்.

இரண்டு ஆண்டுகள்

இரண்டே இரண்டு ஆண்டு களில் எத்துணைப் பெரிய மாற்றம். 1965 சனவரித் திங் கள் எங்கும் வேட்டுச்சத்தம், புகை மண்டலம், பிணக் குவியல், எந்தச் சிறையிலும் இடமில்லை. தூங்கியவனுக்கு காலையில் என்ன தண்டனை, எப்போது விடுதலை அதுவும் தெரியாது. யாருக்கு எந்த நேரத்தில் என்ன நேரும் அது வும் தெரியாது. ஆனல் 1968 சனவரித் திங்கள் முதல் நாள் தமிழ் மழை அறிஞர் அண்ணாவின் சிலை திறப்பு இரண்டாம் நாள் கடல் மேட் டில் ஔவை முதல் உட்பட மிகப் பலர் சிலை திறப்பு விவாத மேடைகள். 3 நாள் மூப்படை திரண்டு நெடுஞ் சாலை கடந்து நம் புகார் வந்து சேர்ந்தது. குடியரசுத் தலைவர் கண்ணுற்றுக் களிப் பெய்தி யாம் இதுவரை இப் படியொரு ஊர்வலத்தைக் கண்டதில்லை என்று பாராட்டுமளவுக்கு சிறப்பு. பெரு நகரின் எப்பக்கமும் மக்கள் கடல் வண்ண உடை யுடுத்திய சின்னஞ் சிறுர்கள். கைவளை யாட கன்னியர்கள், வயோதிகர்கள், இளம் காளை கள் அப்பப்பா. இப்படி ஒன்று இதற்கு முன் இருந் ததா. இல்லை. இனி இருக் குமா? தெரியாது.

கபாடபுரம் கடல்கொண் டது. அதை மீட்டுவந்து தலை நகரில் நாட்டினர் தமிழர். தமிழர் தூங்கவில்லை. நீர் பூத்த நெருப்பென இருந் தனர். ஆராய்ச்சி எனும் விசிறியால் வீசி கனகனக்கச் செய்தனர். இதுதான் கபாட புரம். வாழ்க செந்தமிழ்.

அம்பல வாசலும், தென்னந் தோப்பும், பறங்கிமாவின் மரங்களும், கழுகின் கூட்டமும், ஒற்றைக் கிணறும், தண்ணீர்ப்பாளையும், செம்பருத்தியும், தெற்றியின் ரத்தப்பூக்களும் சாயங்காலத்தின் அணைப்பில் ரம்மியமாக இருந்தன. கோயில் முற்றத்தில் தனியாக நுழைந்த வாசு போற்றிக்கு மனது சாந்த கம்பீரமாக இருந்தது. ஆலயத்தின் நாலு கட்டினுள்குருக்கத்தி கிழவி தெற்றி மலரும் துளசியும் மாலை கட்டி பந்தாக எடுத்து வைத்திருக்கிறாள். மடப்பள்ளி குமிழ் கதவிற்கு கீழ் நிலவிளக்குகளும், வெண்கலமணியும் உருளியும், நிவேத்ய தட்டுகளும் பால் கிண்டியும், பளபள வென்றுதேய்த்துவைத்திருக்கிறாள், நாயர் அச்சி.

கம்பி அழி இடை நாழியில் நடந்து, படியேறி மணிகள் ஒலிக்கும் மூலஸ்தான வாசலின் பெரிய சாவியை, அணிந்திருந்த துவர்த்து முண்டின் அரையிலிருந்து எடுத்து வாசலை திறந்த போது மணிகள் கணகண வென்று சிரித்து வரவேற்புக் கூறின.

உள்ளே ஸ்ரீ நாராயணன், சக்ரம், சங்கம், கதா, பத்மத்துடன் நீண்டு நிமிர்ந்து நின்று சிரிக்கிறான். கழுத்தில் காலையில் அணிவித்த கவுஸ்துபமாலை. சந்தன கிரீடத்தில் வைர நீலக் கல்லின் திலகம். மேனியில் மஞ்சள் பீதாம்பரம். சிரசிற்கு பின், பிரபாவலய கண்ணாடிகள் இருளோடு சிரித்தன... சாயங்கால பூஜைக்கான ஆயத்தங்களை செய்ய ஆரம்பித்த வாசு போற்றின் மனதில் சாந்தம் நிறைந்து வழிந்தது.

"கிருஷ்ணா பாத்ரங்களை எடுத்துக் கொண்டுவா..." என்று வெளியே தலைநீட்டி, மடப்பள்ளி உதவியாளனுக்குக் குரல் கொடுத்து விட்டு, விக்ரகத்தின், காலை அலங்கார மிச்சங்களை கலைக்க ஆரம்பித்தார் போற்றி.

இடது பக்கம் கூடும் அத்தனை நாரீஜனங்களும் - சர்வாலங்கார பூஷணனாகிய ஸ்ரீநாராயணனையும் தன்னையும் பார்க்கிறார்கள். குளத்தின், இறக்கிக் கெட்டிய மாடத்தினுள் துவர்த்து முண்டின் மெல்லிய இடை சுற்றலுடன் நீராடு கையில்; "திருமேனி நீராடு



கிறார்கள்'' என்று ஒதுங்கி நிற்கும் அத்தனை பெண்களும் இங்கேயே பார்க்கிறார்கள். குளிப்பு முடிந்து 'ஈறன்' துவர்த்து ஆடையுடன் படியேறி வருகையில் சூர்ய நமஸ்காரத்திற்கு நிற்கும் ஜாக்ரதையுடன் அத்தனை நாரீஜனமும் இங்கேயே கண்மலர் பொழிகின்றனர். இந்த கண்மலர் அர்ச்சனையின் பெருக்கத்தில் மனது சற்றே விம்முகிறது. அப்பொழுது கூட்டத்தில் மனம் யாரைத் தேடுகிறதோ? இந்தத் தேடலில் பக்தி வைராக்யம் பனியாக கனிந்து விடுமோ?...

''கிருஷ்ணா நடை திறந்து வை. நாழிகை ஆயிற்று'' வெளுத்து மெலிந்த கிருஷ்ணக் குருக்கள் பிரதான வாசலின் பெரிய கதவுகளை திறந்த போது அந்தியின் மங்கல் ஒளி ஆலய வட்டத்திலுள் முதல் தரிசனத்திற்கு எட்டுகிறது.

தெற்றி மலர், துளசி, தாமரை, பிச்சி, முல்லை எல்லா பூக்களின் துளிகளும் ஸ்ரீ நாராயணனின் திருப் பாதங்களில் அர்ச்சனையுடன் விழுகின்றன. போற்றியின் மந்திர ஒலி தாமிரக் கூரையின் ஜங்காரத்துடன் அழிவட்டத்தில் முகாரமிடுகிறது... ஜப முடிவில் வெளியே திரும்பிப் பார்த்த போது, கார் கூந்தல் அணிந்து வந்த அந்தி மங்கை, தீபாலங்கார பூஷிதையாக அம்பல வட்டத்தில் ஜகஜ் ஜோதியில் திகழ்கிறாள், மாராரின் சங்க நாதம் அந்த திவ்ய ஒளிக்கு விளிம்பு கட்டுகிறது, உடுப்பணியாத ஆடவரும் ஈறனுடத்த பெண்டிரும் சன்னிதி வாசலில் கைகூப்பி குழுமியிருக்கின்றனர். வாசு போற்றி ஒருமுறை கூட்டத்தைப் பார்க்கிறார் நிறைவு அம்பலம் நிறைந்து விட்டது.

சங்கொலி, மணிநாதம், தீபங்களின் பொலிவு நாதச் வரத்தின் நாதம், பூமணம், சந்தனத்தின் சுகந்தம்,பக்த கோடிகளின் பிரார்த்தனை முணுமுணுப்பு இத்தனை கோலாகலங்களுக்கும் இடையே பிரணயத்தின் பரமனின் ஆலோல ஊர்வலம் போல தான் மட்டும் தனித்து நிற்பதாக வாசு போற்றிக்குத் தோன்றியது. நாராயணு இந்த ஏகத்வம் கற்பாந்த காலம் வரையில் என்னில் நிலைக்க அருள் தரவேண்டும்.

ஃ ஃ ஃ

பரந்த இந்த பிரபஞ்ச வலையத்தில் எந்த உயிர் தான் தனிந்து நிற்க முடிகிறது? ஏகம் என்ற தன்னிலைக்கு வேதத்தில் சூன்ய மென்று பொருள் பகர்ந்திருக்கிறார்கள் மறையவர்கள். வாசு போற்றியின் பக்தி வெள்ளம் என்ற சூன்யமான தனிமையில் மெல்ல மெல்ல அடிவைத்து வருகிறாள் கரைப் பிரமாணி ஒருவரின் செல்வ மகள் வாசந்தி...

ஆலயத்தின் அழிவட்டத்தில் கூடும்பெண்களிடையே வாசந்தி கடலிலிருந்து புதிதாக முளைத்து வரும் நிலவு வட்டமாக திகழ்கிறாள். ஆரம்பத்தில்நீரில் நுரையை பிரித்தறியாதது போல - வாசந்தியை வாசு போற்றி அறியவே இல்லைதான்... காலம் பக்தியெனும் ஏகத்தை அவர் மனத்தில் அழுத்த அழுத்த - வாசு போற்றி காரணமற்ற தவிப்பில் அல்லாட அரம்பித்தார். அந்த போதையின் களிமயக்கில் ஒரு பார்வை. அளவில் வந்து தித்தவள்தான் வாசந்தி பணியாள் கிருஷ்ண குருக்கள்தான் அவளது சமூதாய மதிப்பை போற்றிக்கு உணர்த்தி - ஒருநாள் பிரசாதம் வாங்கி கொடுத்தது. அன்றிலிருந்து அது...

வாசந்தி, அமுத கலசத்துடன் வந்து நிற்கும் மோகினி போல, புகையிலிருந்து வடிவு கொண்ட நெருப்புப்போல, நாகலிங்க பூ போல, வரிசங்கின் நெளிவு போல. தாமரையின் நிறைவு போல. அரளியின் மணம் போல, வாசந்தி ஒற்றைப் புடவை முண்டு உடுத்திக் கொண்டு, புளியிலைக்கரை நேரியலை இடை சுற்றி மார் மேல் எறிந்து கொண்டு வாழைப்பூ கையுறையில் பட்டு ரவிக்கை அணிந்து முலைக்கு முடிச் சிட்டுக் கொண்டு நெற்றியில் சந்தணக் கீற்றணிந்து, கூந்தலில் நீர் சொட்ட. கைகளால் அல்லி முத்திரை காட்டி - நாராயணனை வணங்கி பக்தியில் லயித்து நிற்கிறாள்.

ஆலயத்தின் - அத்தனை கோலாகலங்களிடையேயும், வாசுப் போற்றி வாசந்தியை மட்டும் காணுகிறார். ஒரு கற்பாந்த காலப் பொழுதை ஒரு நிமிஷச் சிட்டிகையில் அடக்கி பிரபஞ்சத்தையும் நாராயணனையும் மறக்கிறார் போற்றி.

எல்லாமே அற்பப்பொழுதில் முடிந்துபோய் விட்ட பின்பு-மறுகணம் - தேங்காயினுள் நீர் போல யாவுமே உண்மை உருவம் கொள்கின்றன... பிரசாதம் வாங்கிப் போகும் பெண்களுடன் வாசந்தியும் போகிறாள்...

இப்படியே எத்தனையோ நாட்கள். நாட்களிலிருந்து நாட்கள். பின்னும், உதயம். அஸ்தமனம். நாட்கள் வந்து போகின்றன. இப்பொழுது வாசு போற்றிக்கு ஒரு உண்மை. பகல் போல தெளிவாகத் தெரிகிறது. தான் வாசந்தியின் பேரில்

மையல் கொண்டிருக் கிறேன்...ஆனால் அந்தப் பவ்யம் எதையும் அறியவில்லையோ? கை நீட்டி பிரசாதம் வாங்கும் போது கண்களின் பின்னலிலிருந்து அவள் எத்தனை இதமாக விழிகளை உருவிக் கொண்டு-வந்தவர்களோடு நடந்து போய் விடுகிறாள்...

ஃஃ ஃஃ ஃஃ

அது மேடமாசத்தின் விஷிக்காலம். ஆலயத்தின் கோட்டை வட்டத்திற்கு வெளியே, கிராமங்களின், சின்னச்சின்ன காவு- பிரதிஷ்டைகளில் - உற்சவம் எனும் சாமியாட்ட விழா கொடி கட்டுகிறது.

உச்சிப் பொழுதின் வெயில் நெருப்பாக கொளுத்துகிறது. திமிறிக் கொண்டு பாயும் புலிகளாக குதறும் செண்டை மேளக் காரர்களின் வாரித்த உடம்புகளிலிருந்து வியர்வை ஆறாக பெருகுகிறது... செவித்துணுக்கு கிழிபடும், செண்டையின் ஓசை பிரளயத்திடையே - நாகர் - பிரதிஷ்டை முற்றத்தில்-ரத்தின கம்பளம் எங்களைப் போல் - கரியும் - மஞ்சளும் கொண்டு எழுதிய களக் கோல நடுவில், கூந்தல் கலைத்திட்டு ஆடும் அத்தனை கன்னிப் பெண்களின் நடுவே வாசந்தியும் அமர்ந்திருக் கிறாள்.

செண்டையின் தாளலயத்தில் குளிரில் நடுங்குவதுபோல் ஆடிக் கொண்டிருக்கும் பெண்களுக்கு, பணியாட்கள் இளநீர் வெள்ளத்தால் அடிக்கடி அபிஷேகம் செய்விக்கின்றனர் ..... சில பெண்கள் சூடிய பூ குலைய உதறி உதறி ஆடுகின்றனர். ஆட்டப் பாட்டு பாடும் பெண்கள் எதைப் பற்றியும் கவலையில்லாததுபோல ஒப்பாரியாக நாகர் விசேஷ பாட்டுக்களை பாடுகின்றனர் ... வாசந்தி - விரதம் கொண்ட பெண்களின் புனித ஆடையில்-அசையாமல் அமர்ந்திருந்து அம்மானையாடுவதுபோல் கண்ணை மூடி — சாய்ந்தாடிக் கொண்டிருக்கிறாள்.

கூட்டத்தின் - நுனியில்-ஒற்றை முண்டும்-தோளில் போர்த்திய நேரியலுமாக-மார்பில் கைகட்டி நின்ற வாசந்தியையே பார்த்துக் கொண்டு நிற்கிறார் ஆலயத்தின் வாசுபோற்றி.

வெயிலின் உக்ரம் ஏற ஏற செண்டைகளின் பிரளய ஓசை திமிலோகப்படுகிறது. பத்மாசனத்தில்-நட்டு வைத்த பொம்மைகளாக ஆடிக் கொண்டிருந்த பெண்கள், நாகங்களாக நெளிந்து ஆட ஆரம்பிக்கின்றனர். கூந்தலும், கச்சையும் கலைகின்றன... கூட்டத்தினர், நாகர் மகிமையை நேரில் காணும் பயபக்தியில் பிரமித்துப் போய் கொளுத்தும் வெயிலையும் மறந்து நிற்கின்றனர்... வாசுப் போற்றி ஏகாந்த தவத்தின் யோகிபோல வாசந்தியையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நிற்கிறார்...எத்தனை நேரமோ?-

—திடீரென்று செண்டைகளின் திமிலோகத்தையும் மீறி, வாசந்தி துள்ளி அரற்றிக் கொண்டு வீரிட்டு அலறுகிறாள். அவளது பெண்மை, குப்புறக் கவிழ்ந்துவிட்ட மலை முகடுமாதிரி சிதறிக் கொண்டு வெறியாக மாறுகிறது. முகத்தில்-சிறிவரும் பாம்பின் ஆக்ரோஷம் முந்தி நிற்கிறது...

ஆல் தரையின் பிரம்பு



தன்னுடன் படிக்கும் மாணவியை ஆபாசமாகக் கேலி செய்தான் என்பதற்காக நியூயார்க்கில் ஒரு மாணவன் தண்டிக்கப்பட்டான். தண்டனை என்ன தெரியுமா? படத்தில் உள்ளது போன்ற பலகையை தினம் 1 மணி வீதம் மூன்று நாட்களுக்கு நியூயார்க்கின் கடை வீதிகளில் அவன் தூக்கிச் செல்ல வேண்டும் என்பதுதான்;

வைத்தபூசாரி-வாசந்தியின் பக்கம்-திருநீறு எறிந்து மந்திரிக்கிறார் ... சீவிய இளநீர் கூட அவள் முன் காணிக்கையாக நீட்டுகிறார்கள்-பயத்தால் நடுங்கிய பெண்கள்...சண்டை ஓவி-இன்னும் பலமாக அதிருகிறது. வாசந்தி சிலிர்த்துக் கொண்டு எழுந்து நின்று ஆடுகிறாள்...அந்த உக்ரம், திடீரென்று-வாசு போற்றி மேல் கவிகிறது. "இந்த தெய்வ துரோகியை ஆலய வட்டத்திலிருந்து வெளியே துரத்து..." வாசந்தியின் மேல் கவிந்த தெய்வக் குரல் வாசுபோற்றியை சுட்டி அலறுகிறது.

ஒரு கணம் சண்டைகளின் கலவரம் சட்டென்று அடங்குகிறது. நாகர் பறம்பு நிச்சலமாகிறது. வாசந்தியைத் தவிர மற்ற பெண்களும் ஆட்டம் கலைகின்றனர்.

"தேவி. வாசுபோற்றி என்ன குற்றம் செய்தார்..' பிரம்புவைத்திருந்த பூசாரி கேட்கிறார்.

"அவன் கோயில் தீண்டக் கூடாதவன். அவனை நாட்டை விட்டுத் துரத்தி விடு..." ஒரு உக்ரமான அலறல். கூந்தலை உதறிக் கொண்டு, தடாலென்று சாய்கிறது, இப்பொழுது அவர் கோயிலின் பூசாரி அல்ல-தெய்வத்திற்கு அந்நியாதி அநீதி செய்துவிட்ட புழு. நாட்டை விட்டுத் துரத்தப்பட வேண்டியவர் துர்மார்க்கி.

வாசுப்போற்றி மெல்ல கூட்டத்திலிருந்து வெளியே நடக்கிறார்.

சாயிற்கு வெளியே வெயில் எரிக்கிறது,

ஃஃ ஃஃ ஃஃ

இந்த உலகம் இருட்டால் ஆனது, ஆலய வட்டமும், தென்னந்தோப்பும், பறங்கி மாவின் மரங்களும், தருக்களும், பூக்களும், ஒற்றைக் கிணறும். கோயில் உள்ளும், மணிகளும், விளக்குகளும், ஸ்ரீ நாராயணனும் வெறும் இருட்டு. ஆயினும் அந்த லீலாவிநோதன் மட்டும் பாலாழி நடுவில்-பாம்புணை குளிரில் மாதேவியுடன் களித்திருக்கிறானே!

வாசுப்போற்றி தோணித் துறையில் நடக்கும்போது அம்பல பரிஜனங்களும், ஊர் மக்களும், அவர் பின்னல் மௌனத்தை போர்த்திக் கொண்டு நடந்து வந்தனர்.

"கிருஷ்ணா நான் போகிறேன். குருக்கத்தி - நான் போகிறேன்...'

வாசுப்போற்றி படகில் அடியெடுத்து வைக்கிறார்-துடுப்புடன் படகுக்காரன் எதிர்கொண்டு போக! அவர் ஒருமுறை கரையை திரும்பிப் பார்க்கிறார்... தொலைவில் தென்னை மூட்டங்களுக்கப்பால் ஆலயத்தின் தோமிர கூரைக்குமேல் தனியாக ஒரு பருந்து வானத்தை முட்டி பறக்கிறது, கரையில்...பாவியை வழியனுப்பும் ஊர் மக்களை ஒரு முறை பார்க்கிறார்... அவர்களிடையே வாசந்தியும் நிற்கிறாளே?

வாசந்தி!

அமுத கலசத்துடன் வந்து நிற்கும் மோகினி போல...சீ....வாசுப்போற்றி சட்டென்றுமுகத்தைச்திருப்பிக் கொள்கிறார்...

அலைகளின்மேல் படகு வேகமாகப் போகிறது...

கரையும், ஜனங்களும் பார்வையிலிருந்து மறைய வெறும் காயல் நீரின் தரங்கங்கள் மட்டும் மிச்சமாகின்றன ... படகுக்காரன் துடுப்புதள்ளும் சிரமத்தினிடையேயும் ஏதோ ஒரு பாட்டை முணு முணுத்துக் கொண்டிருக்கிறான்...

பிரளய முடிவில் அலைகள் மத்தியில் ஸ்ரீ நாராயணன் மட்டும் மிச்சமாகும் சூன்யம் வாசு போற்றியின் மனதில் நிறைகிறது...

வாசந்தி என்னும் வெறுமையால்—ஒரு கற்பாந்த கால தவத்தையே பாழ் செய்துக் கொண்டு விட்டோமோ? உண்மையில்—அவளைத்தானே நாராயணனைக் காண விரும்பினேன். அதற்குள் பெண்மையின் குரோதம் பழிவாங்கிவிட்டதோ...

தொலை வெளியில் வைகுண்டத்தின் பாலாழி வெளியில் சக்ரம் சங்கம், கதா - பத்மத்துடன்—ஸ்ரீ நாராயணன் ஸ்ரீ தேவியை அணைத்துக் கொண்டிருக்கும் காட்சி-இங்கே-வாசுப் போற்றிக்கு - பாழ்வெளி கனவாகத் தோன்றிக் கொண்டிருந்தது!

மூன்று வகை

தமிழ் நூல்களைக் கற்பதில மூன்றுவகை உண்டு.

ஒன்று: நூலிலுள்ள அருமை பெருமை—நூல் நயம - இலக்கணச் சுவை கண்டு படித்து இன்பம் பெறுவது, இரண்டாவது, அந்த இலக்கியத்தை பிறநாட்டு இலக்கியங்களுடன் ஒப்பிட்டு எந்தெந்த வகையில் அது உயர்ந்தது என அறிந்து பிறநாட்டாரும் உணரச் செய்ய வேண்டும். மூன்றாவது, அந்த ஏடுகளின் மூலம இந்தச் சமுதாயத்திற்கு என்ன பயன இருக்கிறது என்று ஆராய்ந்து சமுதாயத்திற்கு அதைத் தருவது.

-அறிஞர் அண்ணா

கற்போ? காஞ்சியோ?

கோவிமணிசேகரன்



கதிரவனின் கருணை நிறைந்த ஒளியாய் பொழுது பூரணமாகவும், பொலிவாகவும், பூரிப்பாகவும் புலர்ந்தது.

கண் கொள்ளாக் காஞ்சிமா நகரைக் கண்டு அறவணவடிகள்பெரிதாகப் பூரித்துப் போனார். முன்னொரு முறை அவர் காஞ்சிமாநகர்க்கு வந்திருக்கிறார் அப்போதைக்கும் இப்போதைக்கும் பெருத்த வேறுபாடு இருப்பதாகத் தெரிந்தது.

பழுத்த சாக்கியஞானியான அவருடைய வாழ்விலும் 'பற்று' என்ற ஒன்று

பற்றிக் கொண்டதா? ஆமாம்; புத்தபெருமானின் புனிதக் கொள்கைக்காக வாழவேண்டிய அவர்—வாழ்ந்து வரும் அவர், ஆடற்கலையழகியான மாதவிக்காகவும் வாழ நேரிட்டது. அவர் வாழ வேண்டியவர்—வாழ்ந்து தீர வேண்டியவர். ஆனால், மாதவி ஏன் வாழ்கிறாள்?—இந்தக் கேள்விக்கான விடை சோழ மக்களுக்கும், அடுத்து சேர மக்களுக்கும், ஏன்? இப்போது தஞ்சம் புகுந்திருக்கும் தொண்டை மக்களுக்கும் புரியாத; ஒன்றாலும், அறவணவடிகளுக்கு இது எப்போதோ புரிந்த பொருளாகிப் போய்விட்டது. அந்தப் பொருளில்புதைந்து கிடந்த தெய்வ மாக்கற்பின் சக்தியை அறிந்துதானே பற்றுக் கொண்டார்—உடன் பற்றியும் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறார்! ஆனால், உடன் நடந்து கொண்டிருக்கும் மாதவியின் மனநிலை மட்டும் போராட்டத்திலிருந்து விடுபட்டதாகக் காணேம்.

"மாதவி! உன்னைத்தான் மகளே!"

அறவணவடிகள் சற்றுக் குரலை உயர்த்தியழைத்த தன் பேரில் செவிகள் விழித்தன. மாதவி நின்று திரும்பி "ஏன், சுவாமி?" என்றாள்.

"மகளே! உன் கவலை எது என்பது எனக்குப் புரிகிறது. மகளே! கவலைப்படாதே. உன் கடமை நிறைவாகத் தீர்ந்து விட்டது. மணிமேகலையை எப்படி வளர்க்க வேண்டும் என்று ஆசைப் பட்டாயோ அதைவிடப் பல படிகள் அதிகமாகவே அவள் வளர்ச்சி கண்டு, சமயச் சேவை புரியத் தொடங்கி விட்டாள். உன் கடமை எப்படிப் புனிதமாக நிறைவேறியதோ, அதே போல உன் கவலையும் புனிதமாக நிறைவேறும் மகளே! நீ தான் கற்பிலக்கியத்துக்கே ஒரு வெற்றி மாலை! மனத்தைத் தேற்றிக் கொள். அதோ, புத்தர் சேரியும் வந்து விட்டது. கொஞ்ச நாள் இங்கேயே தங்கிப் பிறகு கொங்கு நாட்டுக்குச் செல்வேன்!!

ஒரு காலத்தில் ஆடற் கலா வல்லியாக—அழகின் கருவூலமாக விளங்கிய மாதவி, இன்று ஆடலைத் துறந்து, அழகை வெறுத்து பிட்சுனியாக நடைமெலிய நடந்து கொண்டே சொன்னாள்.

"சுவாமி! என் மனத்தை மெல்ல, மெல்ல நான் தேற்றிக் கொள்வேன். ஒன்றை மட்டும் தங்களுக்கு உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். என் காலம் காஞ்சிமா நகருடன் முடிய ஆசைப் படுகிறேன். கொங்கு நாட்டுக்கோ, வேறு எந்த நாட்டுக்கோ செல்ல நான் விரும்பவில்லை. மனவமைதிக்காக நான் பௌத்தத்தை நாடினேன்; அதனைப் பிரச்சாரம் செய்ய வல்ல! அதற்காகத்தான் என் மகளையே அர்ப்பணித்து விட்டேனே?"

"நல்லது மகளே! அப்படியே செய். உன் மனம் அமைதி கண்டால் அதுவே எனக்கு—எனக்கு மட்டு மல்ல புத்தபிரானுக்கும் நிறைவாகும்."

அறவனவடிகள் அமைதி தோய்ந்த புன்னகை மலரை உதிர்த்தார். அதற்குள் புத்தர் சேரியும் அருகித்து விட்டதால், இருவரும் பௌத்தமடாலயம் நோக்கி நடந்தனர்.

கடற்கோள் என்பது தமிழகத்துக்கே ஒரு சாபமாக இருக்க வேண்டும். அதிலும் சோழநாடு இதனால் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறது. அப்போதும் இப்படித்தான் பூம்புகார் என்ற இனிய பெயரைத் தாங்கிய சோழர்த் தலைநகர் காவிரிப் பூம்பட்டினம் கடற் கோளால் பெரிதும் பாதிக்கப் பட்டது. மாதவியும் மன நிறைவுக்காக அற வணவடிகளுடன் சேர நாட்டை நோக்கிப் பயணமானாள். தன்னுடைய அக்காள் கற் பரசி கண்ணகிக்குக் கோயில் எடுத்த சேர மாவீர மன்னர் செங்குட்டுவர் ஆட்சியின் கீழ் சில காலம் வாழ அவள் ஆசை பட்டதில் தவறேன்று மில்லை. ஆயினும் அவளுடைய நிழல் அவளோடு தானே பின் தொடர்கிறது? பழிச் சொற்களும் அவளைப் பின் தொடர்ந்ததில் என்ன வியப்பு இருக்க முடியும்?

"கோவலன் கெட்டது இந்த மாதவி என்ற விலை மகளால்தான்"!

"என்ன செய்வது! கலை கண்களை மறைத்து விட்டது. விலைமகளும் கலை மகளாக கோவலனுக்குக் காட்சி தர நேரிட்டது போலும்."

"கண்ணகியின் வாழ்வைச் குலைத்த காதகியாயிற்றே இவள்?"

"கணவன் இறந்ததும் மறுகணமே உயிர்விட வல்லவள்தானே கற்புடைய முதல் மகள். இந்த மாதவியோ உடன் கட்டையில் வேகச் செல்லும் மூன்றும் மகளாகக் கூட இல்லாமல்: இன்றளவும் உயிர் வாழ்கிறாளே! என்ன திமிர்?

"அப்படிப் பார்த்தால் கண்ணகியும் இரண்டாந்தரக் கற்பரசி தானே?"

"போடா பைத்தியக் காரா! பாண்டியன் மனைவி

கணவனே இழந்ததும் வேறு கடமை தனக்கில்லையென்று அறிந்தது மட்டுமல்லாமல், கணவனே குற்றவாளி என்றுணர்ந்து அவளும் மானம் தாளாமல் அக்கணமே உயிர் நீத்தாள். ஆனால் கண்ணகியின் துயரம் வேறு யிற்றே! குற்றவாளி என்று அநியாயமாகப் பழி சுமத்தப் பெற்ற கணவன் கோவலன் கொலையுண்டான் என்ற செய்தி கேட்ட மாத்திரத்தில் உயிர் நீத்திருக்க முடியும். ஆனால் குற்றமற்ற கோவலன் தமிழக வரலாற்றில் குற்றவாளியாகவே நிலைத்து விடுவானே என்றஞ்சினாள் கற்பரசி கண்ணகி. ஆகவே தன்னுள் ஒரு கடமையுணர்ச்சி முகிழ்த்து உயிரை நிறுத்தியது. பாண்டியனுடன் வாதாடி, கணவனுக்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைத்து, பழிவாங்கிப் பிறகு உயிர் நீத்ததால்தான் கண்ணகி மேலும் உயர்ந்து விட்டாள்; அதாவது பாண்டிய மாதேவியை விட.''

''ஆகா! உண்மை! ஆனால் இந்தப் பாழுங்கட்டை மாதவி எதன் பொருட்டு உயிர் வாழ்கிறாள்?''

இப்படியான எத்தனையோ சொற்களைக் கேட்டுத்தான் மனமிடிந்து போனாள். அவள் உயிர் வாழும் கற்பின் மகா இரகசியத்தை யாரே உணர்வர்?

சேர நாடும் மாதவிக்குப் பிடிக்கவில்லை. இப்போது மனவமைதிக்காக அவர்கள் காஞ்சிமாநகரையும் அடைந்தனர்.

காஞ்சி பௌத்த விகாரம் மாதவிக்குப் பலவிதத்தில் மனவமைதியைக் கொடுத்தது.

மனவமைதி ஒருவாறு கிடைத்து வரும் போது தான் அந்தக் கொலைச் செய்தி கிடைக்க வேண்டும்? மகள் மணிமேகலையால் சோழநாட்டில் இளவரசன் உதயகுமாரன் கொலையுண்டான். அதன் காரணமாக மணிமேகலை சிறைப் பட்டாள் என்ற சோகச் செய்திதான் அது. மாதவி புழுவாகத் துடித்துப் போனாள். மீண்டும் சோழ நாட்டுக்குச் சென்று கண்ணகி போல் வாதாடி மணிமேகலையை மீட்கவும் அவளுக்கு மனமில்லை.

அறவணவடிகளின் ஆறுதல் மூலமும் மாதவி நிறைவடைந்ததாகத் தெரி



யவில்லை. மணிமேகலையை விடுவிக்க வழிவகை செய்ய வேண்டும் என்றே அவள் மனம் துடித்தது. அறவண வடிகள் சொன்னார்:

"அம்மா மாதவி! கொஞ் சம் பொறுப்போம். ஒரு பிறை காலம் பொறுத் திருந்து பார்த்து பிறகு பூம் புகார் செல்வது பற்றி யோசிப்போம். மணிமேக லைக்கு எந்தவிதமான தீங் கும் நேரிடாது. புத்தபிரான் காப்பார்! உன் கற்பின் தவம் வீண் போகாது. வெற்றி உனக்குத்தான்."

மறுநாள் பிறைப்பொழுது மங்கலமாக விடிந்தது.

பூம்புகார் செல்ல வேண் டும்; சோழன் கிள்ளிவளவ னைக் கண்டு வழக்காட வேண் டும்; தன் மகள் நிரபராதி என்று நிரூபிக்க வேண்டும் என்று தீவிரமாக முடிவு செய்து விட்டாள் மாதவி.

அனைவரும் விகாரையுள் நுழைந்தனர்.

மகளைக் கண்ட மாதவி ஆனந்தக் கண்ணீர் கரை புரள நோக்கினாள் இலங் கைக்குச் சென்று பௌத்த பிரசாரம் செய்து விட்டுத் திரும்பியமகளல்லவா அவள்

மணிமேகலை புத்தபிரா னுக்குப் பிரார்த்தனை செய் தாள்.

மன்னன் முதல் யாவரும் புத்தகோஷம் புரிந்தனர்.

கடைசியாகச் சோழ மன் னன் கிள்ளிவளவன், சோழக் கலைக் கருவூலமான மாதவியை நாடிச்சென்று தலைவணங்கினான். இந்தக் காட்சி அனைவரையும் மெய் சிலிர்க்க வைத்துவிட்டது.

கிள்ளிவளவன் சொன் னான்: மாதவி, சோழக் கலைத் தெய்வம் மட்டுமல்ல; கற்புத் தெய்வமும் நீ! நானும் மக்களின் பேச்சுக் களுக்குச் செவிசாய்த்து உன் னைப் புறக்கணித்தேன். மணி மேகலையால் என் அரசியும், அவளால் நானும் தெளிவு பெற்றோம்; ஞானம் பெற் றோம். ஆகா! மணிமேகலை தான் எவ்வளவு சக்திகளைப் பெற்றிருக்கிறாள்! முன்பின் தெரியாமல் மணிமேகலை யைச் சிறை வைத்ததற்கு என்னை மன்னிக்க வேண்டு கிறேன். சோழ நாட்டில் பிறந்த நீ அந்த மன்ன னுக்கே சொந்தக்காரியாகி காரியாகி கடைசியாத்திரை செய்ய வேண்டுகிறேன்."

வெறுமை நிறைந்த ஒரு சிரிப்பு மாதவியின் இதழ் களில். "சோழ மன்னவா! எதைப் புரிந்து இப்படிப் பேசுகிறீர்கள்? உயிர்மேல் ஆசைவைத்தவள் விலைமகள் மரபினள் நான் கணவன் இறந்தும் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பவர் பிறவி நான்."

மாதவியின் இந்தக் கேள் வியை அறவணவடிகள் வெகுவாகத் துய்த்தவண் ணம் கவனித்தார்.

சோழமன்னன் கிள்ளி வளவன் தன்னுடைய அர சியை நோக்கினான். பிறகு வாய் மலர்ந்தான்: "மாதரசி! பாண்டியன் தேவி கோப்பெருந்தேவியை விட கண்ணகியாகிய உன் அக் காள்—கற்பின் தெய்வம்— கற்பில் உயர்ந்து நின்றது. அந்தத் தெய்வத்தைக் காட் டிலும் நீ ஒருபடி மீறியே போய்விட்டாய்."

"அப்படியா?"

"ஆமாம்! கணவனைக் குற்றமற்றவன் என்று நிரூ பிக்க உயிர்வாழ்ந்து பின்னர் உயிர்நீத்தாள் கண்ணகி. ஆனால் நீயோ, மாதவி! எத் தனை பெரிய தியாகத்தைச் செய்திருக்கிறாய்! பற்பல வசைமாரிகளைப் பொறுத்து உயிர்வாழ்ந்து நீ செய்த தியாகத்தைத் தமிழகம் என் றுமே மறவாது."


கிள்ளிவளவன் பொரு ளோடு புன்னகை புரிந்து புகன்றான்: "மாதவி! நீ விலை மகளுக்குப் பிறந்தவ ளாக இருந்தாலும், உன் மகள் ஓர் உயர்ந்த குடிமக னுக்குப் பிறந்தவள். அத் துடன்..."

"அத்துடன்..."

"கற்பரசி கண்ணகியின் கணவனுக்குப் பிறந்தவள் மணிமேகலை. அவளைக் கண் ணைப்போல் காத்து அறவழி யில் ஈடு செய்யவே நீ உயிர் வாழும் தியாகத்தை மேற் கொண்டாய் என்பதை அண்மையில்தான் நான் உணர நேரிட்டது. மாதரசி! மணிமேகலையை நீ உன் மக ளாகவே நினைக்கவில்லை. கண்ணகியின் மகளாகவே நினைத்து விட்டாய். ஆகவே, எங்கே மணிமேகலை யால் கண்ணகி என்ற அந் தக் கற்பின் காவியத்துக்குக் களங்கம் ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்தாலும், மரபுப் பொறுப்புணர்வாலும் நீ உயிர் வாழ்ந்தே தீர வேண் டியதாய்ப் போய்விட்டது. இதனால் மக்கள் வசைமாரி களை ஏற்றாய். எனினும் மகளை கண்ணகியாகவே வளர்த்துவிட்ட பெருமை இருக்கிறதே...அதுவே உன் கற்பின் வெற்றி! காஞ்சியி லுள்ள பசிப்பிணியைப் போக்க மணிமேகலை இருக் கட்டும். நீ என்னுடன் சோழ நாடு திரும்பலாம் கலை மகளே!"


உள்ளம் பூரிக்க, உணர்வு பூரணம் காண, உயிர் வாழ்ந்ததன் நோக்கம் பொலிவு பெறநேரே புத்த மூடிகை நோக்கிச் சென்று பாதங்களில் சரணடைந்து வணங்கினாள். உயிர்ப்பறவை சிறகடித்தது. மாதவியின் கற்புதான் கற்போ? இல்லை, அவளுடைய வாழ்வுதான் காவியமோ?

அண்ணா கவியரங்கம்



காவிரியப் பூவிரியும்

காவிரியும்
தாவி எடுத்துக் கார் குழலில்
ஓரு கை வை! வை கை!
தாவி எடுத்துக் கார் குழலில் ஓரு கை வைக்கும்
காவிரியப் பூவிரியும்
தாவி எடுத்துக் கார் குழலின்
ஓரு கை வைக்கும்
ஓவியத்துப் புதுப்பாவை தமிழ்ப் பெண்ணைத்
(பெண்ணையாறு)
தாயாக்கிப் பாலாறு பருகுகின்ற
சீராரும் தென்னிலமே—
போரார்வப் பெருங்குன்றே
நீராளும் பொறுப்புடனே
காராளும் பொறுப்பு மேற்று—இன்று
பேரார்வக் கலைத் தொழிலைப் பிரிந்து நிற்கும்
அடியேன் என் வணக்கம் ஏற்பீர்...
இமிழ்கடல் வேலித் தமிழகம் ஈன்ற
என்னுயிர் அண்ணன் அன்னையர் தந்தையர்
பொன்னெளிச் சோதரர் புகழ்மிகு பாவலர்
கண்மணித் தமிழின் காவலர் யாவரும்
இன்றைத் திருநாள் ஏற்பீர்; வணக்கம்.
புவிவாழ்வின் உச்சியிலே
புதுமைதனைப் பொறித்திடுவோம்
என்று சிலிர்த்துப் பொங்கி எழுந்த
தமிழகம் தந்த விடுதலை மறவர்
கமழ் மணப் பாவில் மீண்டும் பிறந்திட
உலகத் தமிழர் மாநாடு கூட்டி
யாதும் ஊரே யாவரும் கேளிர்—என



சென்னையில் உலகத் தமிழ் மாநாட்டில் 7-1-68 அன்று நடைபெற்ற 'அண்ணா கவியரங்கத்திற்கு' பொதுப்பணித் துறை அமைச்சர் கலைஞர் கருணாநிதி தலைமை வகித்தார்.

அண்ணா அவர்களைப் பற்றியும் கவியரங்கத்தில் கலந்து கொண்ட கவிஞர்களை வரவேற்றும், அவர் தம் கவிதைச் சிறப்பினைப் பாராட்டியும் கலைஞர் கருணாநிதி அவர்கள் பாடிய கவிதை இது.

உறவினை வளர்க்கும் புறப்பணிக் குழுவினர்
வழங்கிய அழைப்பால்
பூம்புகார் நகரம் வந்துளர் கவிஞர்
தலைவன் நானும்...
அமைச்சர் நினைவை சில மணித்துளி துறந்து
அருங்கலை ஆர்வ நெஞ்சைத் திறந்து
ஆர்த்திடும் விடுதலை முரசினைக் கேட்க;
அனுமதி நல்கிய அனைவர்க்கும் நன்றி
தாயகத்து விடுதலைக்குத் தமை ஈந்த
தகைமையாளர் பலரைக் கண்டோம்; அந்தத்
தாயகத்து விடுதலையின் போர்த்தலைவர் பெரியாரின்
தளபதியாய்
தமிழ் மொழியின் விடுதலைக்கு
தமிழ்க் கலையின் விடுதலைக்கு
தமிழ்ப் பண்பின் விடுதலைக்கு
தளராது பாடுபட்டுக்
கொட்டு முரசெனக் கூறுகின்ற அண்ணாவை
எட்டுக் கவிஞர் இங்கே பாடுகின்றார்
நான் பாடாமல் விடலாமோ?
பூவிதழின் மென்மையினும் மென்மையான
புனித உள்ளம்—அன்பு உள்ளம்—
அரவணைக்கும் அன்னை உள்ளம்—அவர்
மலர் இதழ்கள் தமிழ் பேசும்—
மா, பலா, வாழை யெனும் முக்கனியும் தோற்றுவிடும்.
விழிமலர்கள் வேலாகும்—வாளாகும்
தீங்கொன்று தமிழ்த் தாய்க்கு வருகுதென்றால்
கால் மலர்கள் வாடினும் அவர் கடும்பயணம்
நிற்காது!
கை மலர்கள் பிணைத்து நிற்கும், தம்பியரை, கழகத்தை!
அம்மலரே எதிரிகளை மன்னித்து
நெற்கதிர் போல் தலைநாணச் செய்துவிடும்—
மக்களாட்சி மலர் குலுங்க
சமதர்மப் பூ மணக்க
தாய் மொழி தமிழே வாழ்வுப் பொழிலாக
ஆடிவரும் தென்றல்
நாடி வரும் பூமுடியே! புகழ் முடியே! உமைத்
தேடி வரும் வாழ்த்துக் குவியலிலே—தினம்
பாடி வரும் வண்டாக நான் பறப்பேன்,
உனைக் காக்க எனைத் துறப்பேன்.
என;
ஒரு கோடித்
தமிழ் இளைஞர் பாடுகின்ற பாட்டுக்குப் பெருந்தலைவன்
இதோ;
ஈராயிரம் ஆண்டின் முன்னும் இன்று போல்

இளையவளாய் இருந்திட்ட தமிழாம் அன்னை
நூறுயிரம் கோடி என ஆண்டு பல வாழ்வதற்கு
நூலாயிரப் செய்திட்ட புலவர்களை ஈன்றாள் எனினும்;
கலை மகளாம் நம் அன்னை வள்ளுவனைத்
தலைமகனைப் பெற்றெடுத்தாள்.
மலர் என்றால் தாமரை தான்
மன்னன் என்றால் கரிகாலன்
நூல் என்றால் திருக் குறளே
எனப் போற்றும் அறப்பனுவல்
அளித்திட்டான்—மாந்தரெலாம் களித்திட்டார்.
விண் முட்டும் மலையோரம்—நம்
கண் படும் படாமலும் எழுகின்ற நச்சு மரம் போல
பண்பட்ட தமிழர் வாழ்வில்—முதுகில்
புண்பட்ட கொள்கை யெலாம் மூண்ட தந்தோ?
சாதிகளைக் காணுது குறள் ஒலித்த தமிழ் மண்ணில்
பாதியிலே வந்ததம்மா பலகோடி சாதிகளும்!
அறிவு மணங் கமழுகின்ற ஆலயங்கள் அற்றுப்போய்
ஆயிரம் தெய்வங்கள் உறைகின்ற கோவில்கள்
கண்டு விட்டார்
மொழியுணர்வே இல்லாத வாயுணர்வின் மாக்கள்
—தமிழ்
அழியினும் வாழினும் என்னென்று இருந்திட்டார்
அறநெறியே குறிக்கோளாய்த் திகழ்ந்திட்ட
பெருநிலத்தில்
பிறநெறிகள் பயிர் செய்தார்—பிழைகுவித்தார்
மழையற்றுப் போன வயல் போல மாறிற்றுத் தமிழர்
மனம்
அழுக்காறு—அவா—வெகுளி—இன்னைச் சொல்
நான்குமின்றி
நடக்காது வேலையென்று நடந்திட்டார் சில தமிழர்
பொருளிலார்க்கு இவ்வுலக மில்லை யென்று
பொருள் குவித்து வளம் செழித்த நாட்டில்—இன்று
இருள் கவிந்து வாட்டம் கொடி போட்டதங்கே
தீமையில்லாக் கோல் செந்தமிழர் ஆட்சிக் கோல்
—அது மாறி—
ஆமை நடைக் கோலாய் ஊமைகளை உருக்குலைக்கும்
வாய்மையிலாக் கோலாய் வாய்த்ததிங்கே—மூன்பு
வாடினுள் தமிழன்னை—சோகப்பாட்டுப்
பாடினுள் தமிழன்னை—சடு நெருப்பில்
ஆடினுள் தமிழன்னை—
ஓடினுள் ஓடினுள்
ஓருவழியும் கிடைக்கவில்லை
புவியூர் விட்டுப் புகழூரில் வாழுகின்றாள்
கவியூரின் பெருவேந்தன் குறளாசான்





ஆண்டு சென்று ; அருமை மகனே
வேண்டு கோள் ஒன்று விடுத்தேன் என்னுள்
என்னம்மா என்னும் குறளோன்
தோண்டுகின்ற இடமெல்லாம்
தங்கம் வரும் தமிழகத்தில்
மீண்டும் நீ பிறந்திட வேண்டுமென்னுள்
'தங்கம் எடுக்கவா ?' என்னுன்
தமிழர் மனம் வாழ்வெல்லாம்
தங்கமாக ஆக்க என்னுள்
இன்றென்ன ஆயிற்றென்னுன்
குன்றனைய மொழிக்கு ஆபத்தென்னுள்
சென்றடையக் குடில் இல்லை ஏழைக் கென்னுல்
கடிதோச்சி மெல்ல எறியத் தெரியாமல்
கொன்றெறியும் கோல் ஓங்கிற் றென்னுள் ;—அறிவில்
கன்றனையோர் வீணில் கதைக் கின்ற கதையும்
சொன்னுள்

அழுத கண்ணைத் துடைத்தவாறு
அமுத மொழி வள்ளுவனும்
அம்மா நான் எங்கே பிறப்பதென்னுன்
தொழு மகன் உச்சி மோந்து-ஆல
விழுதனைய கைகளாலே அணைத்துக் கொண்டு
உழுத வயல் நாற்றின்றிக் காயாது இனிமேலே
எனமகிழும்
உழவன் போல் உள்ள மெலாம் பூரிப்புத் துள்ளி எழ
காய்ந்த வயிற்றுக்குக் கஞ்சி வார்த்திடவே
கற்கண்டே ! தேன் பாகே ! திருக்குறளே !
நீ காஞ்சியிலே பிறந்திடு என்னுள்.
பிறந்திட்டான் நம் அண்ணனுக ;
அறிவு மன்னனுக—
பொதிகை மலைத் தென்றலாய்
போதாகி மலர்கின்ற தமிழ் உணர்வின் புதுமணமாய்
பதிகத்துப் பொருளாய்ப்
பழந்தமிழர் புறப்பாட்டாய்
வந்துதித்தான் அண்ணன்—கீழ்
வானுதித்த கதிர் போல—
புரியாதார்க்கு ஓர் புதிர் போல !
அவன் புகழைப் பாடுதற்கு
அவன் வளர்த்த தம்பியர்கள்
அவன் தந்த தமிழ் எடுத்து
இவண் வந்தோம் இதுதான் உண்மை
கவண் விட்டுக் கிளம்புகின்ற கல்போலக்
குறி பார்த்துச் சொல் வீசும் கவிவாணர்
பொருளை நதிப் பெருக்கனைய சுவை கொட்டும்
கருணை ஆனந்தப் பெரும் புலவர் போர்ப்
பரணி பல பாடியவர்—தமிழ்க் கவிதைத்
தரணியிலே தனக் கோர் இடம் அமைத்துக்
கொண்ட
தகைமை யாளர் தண் என்ற உளம் படைத்தார்—
என்,
தனி நண்பர்- கனி அன்பர்
தலைவராம் அண்ணு எனும் தலைப்பினிலே
நிலைபெறுங் காவியத்தைப் பாடுகின்றுர்
—அண்ணனுடன்

நெருங்கியவர்,
அவர் தரும் அண்ணன் பாட்டு ;
அப்பம் என்போம்
அவல் என்போம்
தேன் என்போம்
தினைமாவென்போம்
தெவிட்டாத பெரு விருந் தென்போம்
(அவருக்கல்ல)

நமக்கெல்லாம் !
ம் ! படைப்பீர் அய்யா !

கவிஞர் ஆனந்தம் 'தலைவர் அண்ணு' எனப்பாடுதல்

மு. க.

அண்ணு ஒரு தலைவர்
பெருந்தலைவர் என்று
அவனியெலாம் அறியும் எனினும்—நாம்
எண்ணுத உவமை யெலாங் கூறிப் புதுப்
பண்ணுகத் தந்து விட்டார்
குயில் பாடும் காவிரியின்
மயிலாடும் துறைவாழ்வார்
மகிழ்ந்தோம் நன்று ;
அலை பாடுங் கடல் போல
கலை பாடும் மாமல்லபுரம் போல
கவி பாடும் பொன்னி வளவன் வருகின்றுர் ;
ஏச்சாலே பிழைக்கின்றுர் சிலபேர்கள்-அதனைப் பெரு
மூச்சாலே உரைக்கின்றுர் அண்ணன் இன்றளவும்
அவர்
பேச்சாலே புண்பட்டோர் யாருமில்லை ;
பண்பட்டோர் பலருண்டு.
சொலல் வலன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிதே என்று
கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க்
கேளாரும் வேட்ப மொழிந் திருந்து

திரந்தினிது சொல்லி ஞாலம்
விரைந்து தன் தொழில் கேட்கச் செய்தோன்
இவற்றையெலாம்
'பேச்சாளர் அண்ணு' என்றே – உயிர்
மூச்சான தமிழ் காக்கச் சிறை சென்ற
(பொன்னி) வளவன் கொடுக்கின்றார்.
(புத்தமுதை) வாரி உண்போம்!

பேச்சாளர் அண்ணு பொன்னி வளவன் பாடுதல்

மு. க.

நாவுக் கரசரது பேராற்றல் பேச்சாற்றல்
பாவுக்கரசர்களின் பாட்டுக்தம் எட்டாது – ஆயினும்
எட்டிப் பிடிப்பதற்கு எல்லேவரை மேற் சென்று
கட்டித் தயிர் போலக் கவிதை யொன்று தந்திட்டார்
இவ்வளவர்;
அவ்வளவில்
அதை நிறுத்தி;
கொத்து மல்லிக் கீரை போல் மணக்கின்ற முத்துத்
தமிழ் எழுத்தாளர்
உத்தமர் காந்திக்கு விற்பாட்டு தொகுத்திட்ட சுப்புக்
கவிவாணர்
மயில் தோகை விரித்தாற்போல் மனம் படைத்த
நற் கவிஞர்
குயில் பாட்டாய் – கோலக் கிளிப் பேச்சாய்.....
எழுத்தாளர் அண்ணு என்று
ஏற்கனவே அவருக்கு இருக்கின்ற மகுடமீது
மாணிக்கம் பதிக்க வந்தார்; வருக – வாழ்க!
ஏடா தம்பீ எடுடா பேனு என்றே
வாடா மலராம் எழுத் தாரம் வழங்கலுற்றார்
காடாய்க் கிடந்த கழனியெல்லாம்
கதிராய்க் கண்ட உழவன் போல் – செக்கு
மாடாய்க் கிடந்த எழுத்துலகை,
ஓடாய் மயிலே என்றுரைத்தார்
அண்ணு ஆட்டுவித்தார்
புகழ் நாட்டுவித்தார்
பாட்டு விற்றுப் பிழைக்கின்ற குறிக்கோள் மட்டும்
நாட்டு வளம் செழிப்பதற்குப் போதாதென்று
வாட்டும் துயர் தீர்ப்பதற்கு – தமிழ்
ஏட்டுடனே வந்தவரில் ஒருவரான இப்புலவர்
நயந் துரைப் பார்
நம் அண்ணன் புகழ்;
நாமும் கேட்போம்

எழுத்தாளர் அண்ணு கொத்தமங்கலம் சுப்பு பாடுதல்

மு. க.

ஆளுகின்றார் இன்று தமிழ் அரசை அண்ணு அவர்
– எழுத்தை
ஆளுகின்றார் – பேச்சை
ஆளுகின்றார் என்று பேராசியர் கல்கி
பெர்னாட்ஷா எனும் பட்டம் ஈந்து சென்றார்
அதைப் பொருத்தமென்று சொல்வதற்குப்
பூவிதழ்கள் போலே
பாவிதழ்கள் கொண்டு
பண் ஒன்று தந்த வரைப் பாராட்டிப்
பித்தன் இருக்குமிடம் செல்வோம்.
தலை சுற்றி – நிலை சுற்றும்
பித்தனல்ல இவர் –
தமிழ்ப் பித்தன்...
பிறை சூடும் பித்தன் அறிஞர் அண்ணு
(இஸ்லாமியக் கட்சியுடன்
இணைப் பொன்று கண்டதாலே)
நரை முதிர்ந்த காலத்திலும் –
நுரை பொங்கும் நீர்க்குமிழி வாழ்க்கை என்ற
தத்துவத்தை எதிர்த்து நிற்கும் பேரிளைஞர் அண்ணு
அந்தத் தத்துவ மேதையின்
கற்றறி கொள்கையை
பெற்றிடுவோம் இன்று தமிழ்ப்பித்தரே பாடிடுங்கள்
நன்று

தத்துவ மேதை அண்ணு தமிழ்ப் பித்தன் பாடுதல்

மு. க.

மேதையின் தத்துவம் மேதினி பரவிட
மேதகு கவிதை தந்தவர் வாழ்க –
தடியரசு வாழ்ந்த காலம்
தமிழ்: அரசில் கொழிக்கவில்லை –
படியரிசி போடுகின்ற
புது அரசு வந்தவுடன் – தமிழர்
அடி அரசு வீழ்த்திடவே;
இந்தி வந்து வாலாட்டி – இது தான்
குடி அரசின் பெருமை என்றுரை
அதைக் கேட்டு – தமிழ்க்

கொடி அரசு தூங்காது என்றுரைக்கும்
அண்ணன் புகழ் பாடுதற்கு — கவி
முடியரசன் வந்து விட்டார் —
பாடச் சொல்வோம்.

தாய் மொழிக் காவலர் அண்ணா — முடியரசன் பாடுதல்

மு. க.

தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித்
தீஞ்சுவை கலந்து
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல்
இனிக்கின்ற
மான் துள்ளும் வேகத்துக் கவியொன்றை
வான் பெய்யும் கோடை மழைபோலப் பொழிந்து
விட்டார் —

முடியரசு ;

மூன்றாள் தொட்டு இந்நாள்
வரை இருக்கின்ற நம் கவியரசு
அடுத்து
அன்னையாம் அண்ணா என்ற
தலைப்பினிலே ஏன் பாடுகின்றாரோ ;
தெரியவில்லை வேழவேந்தன் —
கொஞ்சு தமிழ் உண்ணக் கொடுத்து — எழிற்
கோலமெலாம் செய்து விட்டு பள்ளிக் கனுப்பி-போர்க்
கோலம் பூணுகின்ற போதும்ம கிழ்ந்திருந்து ;
அஞ்சாதே மகனே — அடலேறு போல நீ வாழ்க
என்று வாழ்த்தி விட்டு

அஞ்சுகத் தாய் என் அம்மா போன போது —
அருகழைத்து அண்ணாவை — நீ தான்
என் மகனுக் கினி அன்னை என்றாள் ;
அந்த அன்னை பற்றிப் பாடவந்தால் புலவரேறு ;
என்னை யன்றோ ; கண்ணீர்க் கடலில் தள்ளிடுவார் ;
இருந்தாலும் " அண்ணா அன்னை " என்னைத்
தோளிருந்து ஆற்றிடுவார் — தேற்றிடுவார்
இந்தத் துணிவுடனே கேட்கின்றேன் ;
வெற்றி வேந்தன் — வேழ
வேந்தன் ...ட்டினையே !

அன்னை அண்ணா வேழவேந்தன் பாடுதல்

மு. க.

தனித்தனி மூக்கனி பிழிந்து
வடித்தொன்றாய்க் கூட்டி
சர்க்கரையும் கற்கண்டின் பொடியும் மிகக் கலந்தே
தாயன்பை அண்ணாவின் தலைப்பில் வைத்து
தந்திட்டார் என் நண்பர் வேழவேந்தர் —
வெகு நன்று —
ஓர் இரவில் குமரிக் கோட்டம் புகுந்த
பார் புகழும் வேலைக்காரி
சந்திரோதயம் கண்டு பூரித்து — ஆங்கோர்
சந்திர மோகனையே காதலித்து அதனாலே
நீதி தேவன் மயக்கமுற்ற கதையை யெல்லாம்
அண்ணா வரையக் கண்டோம்
நாடகத்தை எழுதி விட்டால் போதுமா
என்று கேட்டு ; என்
வீடகத்துத் தம்பி மாறன்
நடத்துகின்ற முரசொலியில்
ஏடெடுத்து எழுதுகின்ற முத்துலிங்கம்
அண்ணாவின் நடிப்புக்கு உள்ள ஆற்றல்
கண்ணான உலையுலகம் கண்ட காட்சி —
எல்லாமே
வெல்லம் போல்
எழுதிக் காட்ட
இங்கு வந்தார் ; இன்பத்
தேனைப் பாடு தம்பி ;
இருக்கின்றோம் நாங்கள் தும்பி

நடிகர் அண்ணா முத்துலிங்கம் பாடுதல்

மு. க.

இனித்த நறு நெய்யானந்தே இளஞ்சூட்டில் இறக்கி
எடுத்த சுவைக் கட்டியினும் இனித்திடு
தெள்ளமுதாய்
நடித்திட்டார் அண்ணா —
அவர் நாடக மொன்றில் (நான்)
கதாநாயகன் வேடமிட்டேன் ;
மேட்டுப் பாளையத்தில் — மேன்மையுடன்
கூட்டுவித்த மாநாட்டு மேடையிலே !
சந்திரோதய மெனும் அந்தச் சமூக ஓவியத்தில்

சழக்கரை வீழ்த்தச் சண்ட மாருத மெனச் சுழலும்
துரை ராஜாய்ப் பாத்திர மேற்றார்—
இறுதிக் காட்சியிலே ஒரு வேடிக்கை என்னலே
நடந்ததங்கே—
இனி உலகில் வேலையில்லை என்று
துரைராஜ் (அண்ணா வேடம்)
விஷமருந்தி மாண்டு போவான்
அவன் மீது அவன் தோழன் சாம்பசிவம்
(அது நான் தான்)
அலறி வீழ்ந்து ஐந்தாறு நிமிடங்கள் கதறவேண்டும்
அன்றைக்கு எனக்கந்த
நாடகம் புதிதானதாலே;
மாண்டது வேடமென்று எண்ணுமல்
மறைந்தது அண்ணனென்ற நினைப்பாலே
(தவறுன நினைப்பாலே)
உணர்ச்சி பாய்ந்து
உருண்டெழுந்தேன்—எழுதிய உரைநடையை
ஒப்புவித்து விட்டு உடன் எழுந்து நாடகத்தை
முடிக்காமலே
சொந்த வசனம் அரைமணி நேரம் பேசுகின்றேன்;
அண்ணமேல் வீழ்ந்து வீழ்ந்து—
அப்பாடா—கடைசியிலே—திரையும் விட்டார்—
நானும் முடித்தேன்—
அய்யோடா என்றெழுந்தார் அண்ணா; தன்
தோளைப் பிடித்தவாறு—
என்ன என்றோம் எல்லோரும்;
இவன் அழுதழுது என்தோளில்
அமுக்கி விட்டான்—இதோ பார்
வீக்கம் வலி உயிர் போகுது என்றார்—
சிரித்துக்கொண்டே!
இப்போதும் நினைத்துக் கொண்டால்—
தனியாக சிரிக்கின்றேன் நான்—
போகட்டும் வேடிக்கை விட்டொழித்து;
புதுமை மிகு அரசியலில் புகுந்திடுவோம்—
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றே
எழுதிப் பேசி—அது கேட்டு வந்தவரை அணைத்தபடி
தம்பியுடையான் படைக் கஞ்சான் எனக் கூறி;
எதிரிகளைக் கண்டமுடன் ஏறெடுத்து உற்று நோக்கி;
இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்றே;
சாதித்துக் காட்டிய
சாரநாத்துப் புத்தன் இவன்;
சாத்விகக் காந்தி இவன்;
சகமெல்லாம் ஒப்புகின்றார்; இங்கு சில
சடலங்கள் மட்டும் வயிறு உப்புகின்றார்;
எரிச்சலாலே!—
அவர் தொலையட்டும்;
அண்ணா
அரசியலில் கண்ட வெற்றி—
அவனியெங்கும் போற்றும் வெற்றி—
அமைச்சராக ஆன வெற்றி—அப்போதும்
அடக்கத்தைக் காட்டும் வெற்றி—நல்
அமைதி தனைப் பேணும் வெற்றி—இதற்கெல்லாம்
எடுப்பாக அகன்ற நெற்றி—
—இந்த வெற்றியெலாம்
விளைந்த விதம் எவ்வாறென்றே
வியந்திருக்கும்
தமிழுலகம் விளக்கம்
பெற—ரகுமான்
தலை நிமிர்ந்து பாடவந்தார்—
தலையறுத்த ஏறு போலத்
தமிழ்ச் சொல்லால் ஆடவந்தார்—
ஆளவந்தார் அண்ணாவை
கூளம் குப்பை ஏதும் செய்தல் முடியாதென்று
கூறுகின்ற சிம்மம் போல்; வந்து விட்டார்;
வீறு புகழ் கொண்ட கவி—கனிச்
சாறு நிகர் தமிழ் தரவே—இந்த
அரங்கேறப் போகின்றார்—
என் நண்பர் ரகுமான்—ஆமாம்
அப்துல் ரகுமான்—
முதலமைச்சர் அண்ணா அப்துல் ரகுமான் பாடுதல்.

மு. க.

தலைவரென்றார், தத்துவ மேதை யென்றார்,
நடிகர் என்றார், நாடக வேந்தர் என்றார்
சொல்லாற்றச் சுவை மிக்க எழுத்தாற்றல்
பெற்றார் என்றார்;
மனிதர் என்றார்; மாணிக்க மென்றார்
மாநிலத்து அமைச்சரென்றார்—
அன்னையென்றார் அருமொழிக் காவல் என்றார்
அரசியல் வாதி என்றார்—அத்தனையும் தனித்
தனியே சொல்வதற்கு
நேரமற்றார்; நெஞ்சத்து அன்பாலே
அண்ணா என்று ஒரு சொல்லால்
அழைக்கட்டும் என்றே—அவர் அன்னை
பெயரும் தந்தார்—வாழ்க அண்ணா! வாழ்க நன்றே!

கொடுத்து வைத்தவர்கள்

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். எம்.எல்.ஏ

கொடுத்து வைத்தவர்கள் யார்? பாடுபடாமல் படுத்திருந்து, மற்றவர்களின் உழைப்பிலே உடல் வளர்ப்பவர்களைக் கொடுத்து வைத்தவர்கள் என்று சொல்வார்கள்.

அதுபோல், உழைப்பால் உயர்ந்து, இரவையும் பகலையும் ஒன்றுக்கிப் பாடுபட்டு, மகத்தான பலனடைபவர்களையும் கொடுத்து வைத்தவர்கள் என்று சொல்வார்கள்.

ஆனால், நான் குறிப்பிடுவது, அவர்களைப் பற்றியல்ல; தமிழக அரசைப் பற்றி—தமிழக மக்களைப் பற்றி!

மக்களின் அமைதியான அறிவுப் புரட்சியின் காரணமாக, இன்றைய தமிழக அரசினர், இந்தப் பொன்னாட்டை ஆளக் கொடுத்து வைத்தவர்கள்!

அதே சமயம், தமிழக மக்களோ - நல்லதொரு சிறப்பான - சீரான - ஆட்சியின்கீழ் வாழக் கொடுத்து வைத்தவர்கள்!

இருபது ஆண்டு காலமாக இந்த நாட்டின் போக்கை நேரிடையாகக் கண்டு வருபவர்கள், ஒரு மாபெரும் மாற்றத்தை இப்போது நிச்சயமாக உணருகிறார்கள். புயலுக்குப் பின் ஏற்படுகிற அமைதி - கண்ணீரைத் துடைத்தபின் தோன்றுகிற மகிழ்ச்சி-ஆட்சி மாற்றத்திலல் தமழகத்திலே காணப்படுகிறது.

கண்ணீர் விட்டதை—கலங்கி நின்றதை- ''கதியிலையோ'' என்று கதறியதை மறந்து, இன்று தமிழக மாந்தர் களிப்போடு உலவுகிறார்கள் என்றால், அவர்கள் கொடுத்து வைத்தவர்கள் என்பதிலே என்ன தவறு?

ஆளுவோர் என்றுலே மக்களிடமிருந்து மாறுவோர் என்றிருந்த நிலைமை மாறி அமைச்சர்களும் தாங்கள் 'எங்கிருந்தோ வந்தவர்கள் என்ற எண்ணம் கிஞ்சித்துமின்றி, மக்கள் மத்தியிலே தோளோடு தோள் நின்று பணி செய்கிறார்கள். ஆகவே, தமிழக மக்கள் அத்தகைய தோழமை உணர்ச்சியோடு பழகக் கொடுத்து வைத்தவர்கள்!

ஊரெங்கும் தமிழ் மணம் கமழ்கிறது. கோட்டையின் மேலே 'தமிழக அரசு' என்று பொன்னெழுத்துக்கள் தகதகாயமாக ஒளிவிடுகின்றன. பயணத்தின்போதும் படிப்பறிவைப் பெருக்குதற்கு வள்ளுவரின் குறள் வரிகள் பேருந்து வண்டிகளை அலங்கரிக்கின்றன. எங்கும் தமிழ்-எங்கள் தங்கத் தமிழ்! சங்கத் தமிழ்! ஆகவே தமிழக மக்கள் நற்றமிழைப் படிக்கக் கொடுத்து வைத்தவர்கள்!



தமிழ் வளர்த்த மூதறிஞர் சிலைகளெல்லாம் தமிழகத்தையே பாதுகாப்பது தங்கள் கடமை என்பது போல் நீலத் திரைக் கடலின் ஓரத்திலே படைபோல் நிற்கின்றன வரிசையாக-ஆகவே தமிழக மக்கள் அவைகளைக் காணக் கொடுத்துவைத்தவர்கள்!

தமிழ்வேகம் இன்று மடை திறந்த வெள்ளமாகப் பாய்கிறது. முச்சங்கம் வைத்து, முத்தமிழ் வளர்த்த மூவேந்தர் காலத்திற்கு நம்மை இழுத்துச் செல்கிறது. தமிழில் பேசுவதையே தரமற்ற செயல் என்று வெறுத்தவர்கள்கூட இன்று வாயினிக்க மெய்யினிக்க தமிழில் பேசுவதையே தன்மானம் என்று கருதுகிறார்கள் ஆகவே தமிழ் மக்கள் அந்தத் தமிழ் ஒலியைக் கேட்கக் கொடுத்துவைத்தவர்கள்!

தமிழக அரசு நேர்மையான அரசு-மக்கள் அங்கே நிம்மதியாக வாழ்கிறார்கள்-என்று மாற்றுக் கொள்கை கொண்ட மத்திய அமைச்சர்கள்; மற்ற மாநிலத்தார் போற்றுகின்றனர். ஆகவே. தமிழக மக்கள் அவ்வித மாகப் போற்றக் கொடுத்து வைத்தவர்கள்!

ஏதோ இங்கு அங்கு—யாரோ சிலர் பலர் என்றில்லாது, உலகமே இன்று தமிழகத்திலே திரண்டு, சீரிளமைச் செந்தமிழின் சிறப்பைப் பாடுகிறது—வாழ்த்துகிறது — வணங்குகிறது! ஆகவே தமிழக மக்கள் அதைக் கண்டு களிக்கக் கொடுத்து வைத்தவர்கள்!

இப்படி ஒன்றல்ல; இரண்டல்ல — பலவற்றைச் சொல்ல முடியும்!

ஆனல், களிப்பு உள்ள இடத்திலே கவலை இல்லாமல் இருக்குமா?

கொடுத்து வைத்த காங்கிரசாரின் கண்டனத்தையும், பொறுமையுணர்ச்சியின் காரணமாக காட்டுமிராண்டித் தனமான தூற்றுதலையும் கூட சகிக்கக் கொடுத்து வைத்திருக்கிறார்கள்!

ஆகவே, தமிழகத்தார் எல்லா வகையிலேயும் கொடுத்து வைத்தவர்கள் தான்!

★

Telegrams : "MILLS" Kovilpatti. *Telephones :* Office : 266 Residence : 275

Loyal Textile Mills Limited.

Authorised Capital Rs. 1,00 00,000
Issued Capital Rs. 50,00,000
Subscribed and Paid up Capital Rs. 48,51,250

Spindles: 36540 'A' Mills 24,360 (Rehabilited) 'B' Mills *12,180* Looms 348 Ordinary *224* Automatic *124*

Manufacture of Single and Double Yarn 20s to 100s Counts and Grey Gadas Also Spinning Staple Fibre Yarn.

Directors :

Sri T. SUNDARAM CHETTIAR, B. Com.
Sri M. A. M. MUTHURAMAN CHETTIAR
Sri T. MANICKAVASAGAM CHETTIAR, B. A.
Sri S. L. N. SATHAPPA CHETTIAR.

Registered Office and Mills at KOVILPATTI. S. Rly.

Managing Agents :

THIAGARAJA CHETTY & SONS PRIVATE LTD., MADURAI.

வீணை

Veena • எம்ப்ராய்டரீஸ்



நவீன டிசைன்கள். கண் நிறைந்த வண்ணங்கள்.
மனதைக் கவரும் சித்திர தையல்
வேலைப்பாடுகள் அமைந்தது.
மற்ற எல்லா சித்திர தையல் துணிகளுக்கும்,
லேஸ்களுக்கும் மிகச்
சிறந்தவை.

டிரேட் மார்க்

தயாரிப்பாளர்கள்:
S. S. M. பிரதர்ஸ் (பி) லிட்.,
த.பெ.எண்: 8, குமாரபாளையம் போஸ்ட்
(ஈரோடு வழி)

எங்கள் இதர உற்பத்திகள்:
யாழ் (வீணை) மார்க் பருத்தி & ரயான் வேஷ்டிகள்,
சர்ட்டிங்ஸ், பட்டுத்துணிகள்,
விசேஷ ரக பவானி பட்டு ரிப்பன்கள்.

சென்னை நகர
ஸ்டாக்கிஸ்ட் & ஏஜண்ட்:
அமர்ஜோதி டிரேடர்ஸ்
99, கிடங்கு தெரு, சென்னை-1.

VE-101

VEENA • VEENA • VEENA •

With the Best Compliments of

இந்த
பொங்கல் திருநாளிலே
எங்களது
நல்வாழ்த்துக்கள்

★
★★

போன் விடு | 734

V. P. நித்தியானந்த முதலியார்,

பாக்கு வியாபாரம் அண்டு கமிஷன் ஏஜண்ட்,

10, லாங்கு பஜார், :: வேலூர். (வ. ஆ.)

தமிழ்ப் பெருமக்களுக்கு
எங்கள் நல் வாழ்த்துக்கள்!

பொம்மை

உங்களை மகிழ்விக்க வரும் தீரைக் கலை ஏடு!


அம்புலிமாமா



பால்கன்



உங்கள் குழந்தைகளுக்கு
களிப்பூட்ட, அறிவூட்ட வருகின்றன!





வெளியிட்டது: டால்டன் ஏஜன்சீஸ் - சந்தமாமா பில்டிங்ஸ் - சென்னை-26.

விவசாய அபிவிருத்தியே நாட்டின் முன்னேற்றம்.

HEXAMAR

சக்திவாய்ந்த எக்சாமார் பூச்சி மருந்துகள்

பூச்சி புழுக்கள், பூஞ்சள நோய்கள் பயிர்களை அழித்து விளைவை பாதிக்கும். எக்சாமார் ரசாயன பூச்சி மருந்துகள் அவைகளை ஒழித்து பயிர்களைப் பாதுகாத்து அமோக விளைவைத் தந்து லாபத்தை அதிகரிக்கின்றன

பாராமர் 50 சதவிகிதம் திரவம் 2 சதவிகிதம் தூவும் பொடி: பயிர்களில் விழும் சகல பூச்சிகளுக்கும்.

பாராக்ளோர் 40 சதவிகிதம் திரவம்: பருத்தி, கரும்பு, நெல், காய்கறி, பழமரங்கள், நிலக்கடலைப் பயிர்களுக்கு சிலாக்கியமானது.

எக்சாடிரின் 20 சதவிகிதம் திரவம்: பயிர்களில் விழும் பூச்சிகளுக்கு.

எக்சாவின் 10 சதவிகிதம் பொடி 50 சதவிகிதம் கரையும் பொடி: பருத்திப் பயிருக்கு மிகவும் சிலாக்கியமானது. மிளகாய், மற்ற பயிர்களுக்கும் உபயோகிக்கலாம்.

எக்சாடின் 25 சதவிகிதம் திரவம்: செஞ்சிலந்திப் பேன், சிலம்பப் பூச்சிக்கு.

வின்சேதன்: பிராட் லீச் செடிக்கு.

மைக்ரோசல் கந்தகப்பொடி.
எக்சாசீதன் 65 சூத்தாகக் கலவை
சுப்ரமார் 50 சாமிரக் கலவை

சகல பூஞ்சள நோய்களுக்கும்.
காய்கறிப் பயிர்களுக்குத் தூவும் பொடி

சென்னை, மைசூர், கேரளா, பீகார், ராஜஸ்தான் விவசாய இலாக்காக்களுக்கு அங்கீகாரம் பெற்ற சப்ளையர்கள்.


எப்போதும் எக்சாமர் மருந்துகளையே உபயோகியுங்கள்

தயாரிப்பாளர்கள்:

பாரத் பல்வரைசிங் மில்ஸ் (பிரைவேட்) லிமிடெட்

பம்பாய் 25. சென்னை-19.

திறமைக்கும்
தரத்திற்கும்
பெயர் பெற்றது



ஜெமினி வண்ணப்பட லாபரெட்டரி

விவரங்களுக்கு:
ஜெமினி லாபரெட்டரி
அஞ்சல் பெட்டி எண்: 709, சென்னை 6

ஏ.எல்.மேனன்

வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை

(வரையறுக்கப்பட்டது)

வடபுதுப்பட்டு (அஞ்சல்) (வழி) ஜோலார்பேட்டை

தமிழ்நாடு

★

அங்கீகாரம் பெற்ற பங்கு மூலதனம்	...	ரூ 1 00,00,000
செலுத்தப்பட்ட பங்கு மூலதனம்	...	ரூ. 79,82,000.
ஆலையின் கரும்பு அரைப்புத்திறன்	...	800-1000 டன்கள்.
ஆலையின் விவகார எல்லை	...	திருப்பத்தூர், வேலூர், குடியாத்தம் தாலுக்காக்கள் (வட ஆற்காடு)

தரமான சர்க்கரை தயாரிப்பு நிறுவனம்.

அங்கத்தினர்களின் நல்வாழ்வே எங்களது குறிக்கோள்.


எச். எச். ஷாஜி
பொதுமேலாளர்

எம். பி. வடிவேல்
தலைவர்


தொலைபேசி: 264, 269 (ஆம்பூர்)

தந்தி: "சுகர்ஸ்" ஆம்பூர்.
"Sugars", Ambur.

யாருக்கு அக்கறை
உங்களது அம்பாஸிடர் காரும்
லாம்பிரட்டா ஸ்கூட்டரும்
சுக சவாரி கொடுக்க வேண்டுமென்று ?



வண்டியை கிளப்புங்கள் . . . உடனே கிளம்புகிறது. கியரை மாற்றுங்கள் . . . வண்டி சுகமாக மிதக்கிறது. வண்டியைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். இவ்வகை தொந்தரவில்லா சவாரிக்குக் காரணம்? SIAC பாதுகாப்பு.



உங்களது ஸ்கூட்டர் தொந்தரவின்றி பயன்பட வேண்டுமென உங்களுக்கு ஆசையில்லையா? SIAC அளிக்கும் "வருமுன் காத்தல்" திட்டத்தைப் பயன்படுத்துங்கள். உங்களது ஸ்கூட்டர் சிக்கனச் சவாரிக்குச் சிறந்ததென விளங்கும்.

எங்களிடம் உள்ள தொழிற்சாலைப் பயிற்சி பெற்ற நிபுணர்கள், நுட்பமான கருவிகள் மூலம் வண்டிகளை கவனிக்கிறார்கள். உங்களது அம்பாஸிடர் காரும், லாம்பிரட்டா ஸ்கூட்டரும் முழு கவனத்துடன் பாதுகாக்கப் படுகின்றன.

எங்களுக்கு அக்கறை-SIAC

சௌத் இந்தியா ஆட்டோமோட்டிவ் கார்ப்பொரேஷன் பிரைவேட் லிட்.

(பதிவு அலுவலகம்: 99, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1)

ஷோ ரூம், அலுவலகம் & தொழிற்சாலை: 24, ஓயிட்ஸ் ரோடு, சென்னை-14.

போன் : 84432

Criterion-SIAC-1057 T

G. சம்பந்தன்

வேலூர் மோட்டார் மெக்கானிக்கல் (அண்டு) ஆட்டமோபயில் இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,

2-1, காட்பாடி ரோடு, :: வேலூர் வ ஆ. மாவட்டம்



பஸ் (அண்டு) லாரி உரிமையாளர்களுக்கு

:: ஓர் நற்செய்தி! ::

தங்கள் வாகனம் இஞ்சின் பேர்க்கின்ஸ், பென்ஸ், லேலண்டு இவைகளுக்கு ரிப்பேர் செய்வதற்கு எமது ஒர்க்ஷாப்பிற்கு ஆதரவு அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன். நல்ல முறையில் செய்து கொடுக்கப்படும்.

எமது ஒர்க்ஷாப்பில் இருக்கும் இயந்திரங்கள் யாவும் மேற்கு ஜெர்மனியிலிருந்து வந்தவை.

:: கிராங்க் சாப்ட்டு கிரைண்டிங்
:: மெயின் பேரிங் லைன் போரிங்
:: கஜ்ஜன்பின் புஷ் போரிங்
:: பிரேக் டிரம் பேசிங்
:: பிரேக்கு லைனிங் ரிவிட்டிங்
:: வால்வே ரீ பேரிங்
:: எட்டு சிட்டிங் கட்டர்
:: சிலண்டர் ரிபோரிங்
:: ஜட்டிராலிக்பிரஷ் 65 டன் கெப்பா சட்டி

இன்னும் மற்ற லேத் கடைச்சல் வேலைகளும் வெல்டிங் வேலைகளும் சுத்தமாக செய்து கொடுக்கிறோம்.

நமது பாதை-
முன்னேற்றப் பாதை!

★

புதிய அரசு ஆட்சிப் பொறுப்பேற்று செயல்படத் தொடங்கியதும்:

- எங்கும் தமிழ் முழங்கும் எழிலான காட்சி.
- தமிழில் ஆட்சி நடத்துவதில் புதிய வேகம்.
- விலைவாசி உயர்வு என்ற நச்சு வட்டத்தைத் தகர்க்க படி அரிசி அமல்.
- ஒரு போகம் விளைந்த நிலத்தில் இரண்டு போகமும், இரண்டு போகம் விளைந்த நிலத்தில் மூன்று போகமும் சாகுபடி.
- நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு பட்டா நிலம். ஏழை விவசாயிகளுக்குப் பயனளிக்கும் முறையில் புன்செய் நிலங்களுக்கு நிலவரி ரத்து.
- தொலைதூர பஸ் வழிகள் அரசுடைமை.
- ஊர்ப் பொது வேலைகளை மக்களின் உதவியுடன் முடிக்கும் சீரணி.
- மக்கள் ஊழியர்கள் குறைகளை உடனுக்குடன் விசாரித்து பரிகாரம்.

மக்களுக்குச் செழுமையான வாழ்வு அளிக்கும் மாபெரும் முயற்சிகளில் உதவுவீர்.

(தமிழகச் செய்தித்துறை வெளியீடு)

Murasoli Pongal Malar 1968 *Regd. No. M. 7436*
Pongal Supplement to Murasoli Issue date 15–1–68.

Rs. 2-00

இண்டியனுயில்

எங்களுடையது-நாட்டுக்குச் சொந்தமானது!



நாட்டின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள நாங்கள் **இண்டியனுயிலின்** நெருங்கிய துணையுடன் நம் நாட்டை அந்நிய ஆதிக்கத்தினின்றும் பாதுகாக்க வேண்டி தரையிலும் ஆகாயத்திலும் கடலிலும் இடைவிடாமல் சேவை புரிகிறோம். எல்லைப்புற யுத்தகாலங்களில் **இண்டியனுயில்** ஒரு மகத்தான பொறுப்பை ஏற்று வந்திருக்கிறது. இந்திய விமானப்படைக்கு தேவையான விமான எண்ணை சப்ளை செய்வதற்கும் சரி, எந்த வகைப்பட்டயுத்த விமானத திற்கும் கண நேரத்தில் எண்ணை நிரப்புவதற்கு விசேஷ வசதிகள் செய்து கொடுப்பதற்கும் சரி, பகலென்றும் இரவென்றும் பாராமல் பணியாற்றி வந்தது. **இண்டியனுயிலின்** அபரிமித வேகம் தரும் டீசல் எண்ணையினுல் சக்தி பெறும் டிரக்குகளும் மற்றும் சப்ளை அலுவல்களை இடைவிடாமல் செய்து வந்தன. சுதந்திர தீபம் சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்வதில் **இண்டியனுயில்** எங்களுக்கு பேருதவி புரிந்தது.

இண்டியனுயில் இவ்வளவும் செய்ய முடிகிறதென்றுல் அது நமக்குச் சொந்தமாக இருப்பதே காரணம்.

INDIANOIL

—பொருளாதார வளர்ச்சிக்கான ஒசீல் வெளியீடு

இண்டியன் ஆயில் கார்ப்பொரேஷன் லிட்.,

ms IOC 7219 D TAM

Wrapper Page Printed at R. R. Printing Works, 12, Whites Road, Madras-14. Ph: 82808